# உதயன்




www.onlineuthayan.com

28: பக்கங்கள் சுடர் 27 கதிர் 292 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 28 வியாழக்கிழமை (13/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

## கடவுளே! எமது உறவுகளை மீட்டுத் தா

### 1008 தேங்காய்கள் உடைத்து வவுனியாவில் நேற்றுப் பிரார்த்தனை



வவுனியா,செப் 13

காணாமல்போன உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி அவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை வவுனியா குருமன் காடு காளிகோயிலில் கண்ணீர் மல்கியவாறு தேங்காய்களை உடைத்துப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் காணாமற் போனோரின் உறவுகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச கைதிகள் தினத்தை முன்னிட்டு காணாமற் போனோரை மீட்டுத்தரக் கோரி வவுனியாவில் 1008 தேங்காய்களை உடைக்கும் போராட்டமும் பிரார்த்தனையும்

பார்க்க பக்கம் 4



## மட்டக்களப்பு சிறைச்சாலையில் கைதிகள் மோதல்

### தடுக்கச் சென்ற இரு அதிகாரிகள் காயம்

மட்டக்களப்பு,செப்.13

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று புதன்கிழமை முற்பகல் இரு கைதிகளுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றை விலக்கச் சென்ற அதிகாரிகள் இருவர் கைதியொருவரால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளான எம்.ஏ.பண்டார மற்றும் கதிகரன் ஆகிய இருவருமே தாக்குதலுக்கு உள்ளான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கைதிகளுக்கு இடையே மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பார்க்க பக்கம் 4

# ஆட்சி அமைக்க கிழக்கில் தயார்

## ஆளுநருக்கு ஐ.ம.சு.மு. கடிதம்

கொழும்பு, செப்ரெம்பர் 13

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை அமைப்பதற்கான தயார் நிலையில் தாங்கள் இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று கிழக்கு மாகாண ஆளுநருக்கு அதிரடியாக அறிவித்திருக்கிறது.

மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள கட்சி என்ற வகையில் இந்தக் கடிதத்தை அனுப்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தேசிய சுதந்

பார்க்க பக்கம் 4

## ஆள்களை பறித்தெடுத்து ஆட்சியமைப்பது அரசு தனக்கே உலை வைக்கும் செயல்

### கிழக்கின் பக்கம் சர்வதேசத்தின் பார்வை என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, செப்.13

தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கும், தமிழ் பேசும் உறவுகளுக்கும் குந்தகம் விளைவிக்காமல் அரசியல் நேர்மையுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவுகளை எடுக்குமெனத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களைப் பறித்தெடுத்து ஆட்சியமைக்க எவராவது முயற்சிப்பார்களாயின் அவர்கள் தமது விரல்களால் தமது கண்களையே குத்திக்கொண்டவர்களாகி விடுவார்களென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பார்க்க பக்கம் 4

## தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஹக்கீமிடம்

கொழும்பு,செப் 13

கிழக்கு மாகாண சபை ஆட்சி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கட்சி தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு வழங்கப்பட்டுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பார்க்க பக்கம் 4

**2** பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 5,609ஆல் அதிகரிக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

**8** கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்பாளர்களுடன் மத்திய அரசும், மாநில அரசும் பேச்சு நடத்த வேண்டும் என்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

**9** லிபியாவுக்கான அமெரிக்கத் தூதருடன் மேலும் தூதரக அலுவலர்கள் மூவரும் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற ரொக்கெட் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

**17** சிலாபம், முன்வேஸ்வரம் பத்ர காளியம்மன் கோயிலில் வருடாந்தம் இடம் பெறும் மிருகபலி நிறுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை என்கிறார் சிலாபம் மாவட்ட நீதிவான் ஜகத் ஏ கஹந்தகமகே

## மஹிந்த அரசில் கொள்ளைக்கே முதலிடம் எதிரணி உறுப்பினர்களின் தலைக்குக் குறி

### சாடுகிறார் விக்கிரமபாகு

கொழும்பு, செப்.13

வாக்குகளைக் கொள்ளையடித்தே மஹிந்த அரசு தேர்தல் வெற்றியை ருசித்துள்ளது என பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள நவ சமசமாஜக் கட்சி, மஹிந்த சிந்தனையில் 'கொள்கை'க்கல்ல, 'கொள்ளை'க்கே முதலிடம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் ஆணை தமக்கே உள்ளது என மார்தட்டும் இந்த அரசு, வன்முறைப்பாதையில் பயணிப்பதேன் என்றும் அந்தக் கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

நடைபெற்று முடிந்த தேர்தல் தொடர்பில் கருத்து

பார்க்க பக்கம் 4

## ரூபா 5 கோடி ரொக்கம், வீடு, வாகனம் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு விலை

கொழும்பு, செப்.13

"ரூபா ஐந்துகோடி ரொக்கப்பணம்,சகல வசதிகளுடனும்கூடிய வீடு, விரும்பிய வாகனம்......."

இதுதான் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவாகியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை அரசதரப்புப் பக்கம் வளைத்துப்போட முன்வைக்கப்பட்டுள்ள சலுகைகளாகும்.

அரசின் இந்த முயற்சி குறித்து கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் வீடுகளுக்கு கடந்த இரு தினங்

பார்க்க பக்கம் 4

## இந்தியாவை வேவு பார்ப்பதற்கு பாக். அவதான நிலையம் யாழில்

### புதுடில்லி ஊடகம் அதிர்ச்சித் தகவல்

புதுடில்லி, செப் 13

இந்தியக் கடற்படையின் தொடர்பாடலை இடைமறித்து அவதானிக்க, பாகிஸ்தான் புலனாய்வுத்துறையான ஐ.எஸ்.ஐ யாழ்ப்பாணத்தில் அவதானிப்பு நிலையம் ஒன்றை நிறுவியுள்ளதாக இந்தியப் புலனாய்வு அமைப்பான றோ கண்டுபிடித்துள்ளதாகப் புதுடில்லியில் இருந்து வெளியாகும் 'தி பயனியர்' ஆங்கில நாளேடு தகவல் வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 3, 4 மாதங்களில் பாகிஸ்தான்

பார்க்க பக்கம் 4

## சம்பந்தன், ஹக்கீமுடன் பிளேக் முக்கிய பேச்சு

கொழும்பு, செப்.13

உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபட் ஓ பிளேக், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

இவர்களுடனான சந்திப்பையடுத்து பிளேக், அரசதரப்பின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

பார்க்க பக்கம் 4

## பிரிட்டன் தூதரகத்தின் ஏற்பாட்டில் வெளிநாட்டு எம்.பிக்கள் வடக்குக்கு

### அதிர்ச்சியில் அரசு

கொழும்பு,செப் 13

கொமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் 58ஆவது அமர்வில் பங்கேற்க இலங்கை வந்த பிரிட்டன் மற்றும் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடபகுதிக்குச் செல்வதற்குப் பிரிட்டன் தூதரகம் ஏற்பாடு செய்தமை இலங்கை அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசு அவர்களைப் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதிக்கு அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருந்த போதிலும், கொழும்பி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பல்கலை மாணவர் அனுமதியை 5609ஆல் அதிகரிக்க வேண்டும்

## உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,செப் 13

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 5,609ஆல் அதிகரிக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் இசற் புள்ளி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழமையாக வருடாந்தம் 21,500 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற போதிலும் இந்த வருடம் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைய மேலதிகமாக 5609 மாணவர்களை இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்குமாறு உயர் நீதிமன்றம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

(த)

# பொதுநலவாயச் செயலர் இன்று யாழ்.வருகை

யாழ்ப்பாணம், செப்.13

பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் செயலாளர் கமலேஷ் சர்மா தலைமையிலான பிரதிநிதிகள் குழு இன்று வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் 58 ஆவது மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவினரே இன்று யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்றுப் புதன்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு வருகைதர இருந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் பயணத் திட்டம் இன்றைய தினத்துக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரும் மேற்படி குழுவினர் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலக்சுமி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

(த-5)

# வட பகுதிக்குள் பிரவேசிக்கும் சாரதிகளுக்கு புதிய அறிவித்தல்

கொழும்பு, செப்.13

வட மாகாண நுழைவாயிலினூடாக ஏ - 9 வீதியில் பயணிக்கும் வாகனச் சாரதிகளுக்கான புதிய அறிவித்தலொன்றை வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா வெளியிட்டுள்ளார்.

ஏ- 9 பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருவதால் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் சாரதிகளுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும்சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி புதிய அறிவித்தல் தொடர்பான ஆலோசனைப் பத்திரமொன்றையும் ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து சாரதிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

மேற்படி ஆலோசனைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு,

✱ தற்போது வட மாகாணத்தின் நுழைவாயிலூடாக நீங்கள் ஏ-9 வீதிக்குப் பிரவேசித்துள்ளீர்கள். உங்களால் ஏ - 9 வீதியூடாக வாகனத்தைச் செலுத்துகையில் ஒரு ஒழுக்கமான சாரதியாகப் பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமையக் கவனமாக நடந்துகொள்ள வேண்டுமெனகேட்கப்படுகின்றீர்கள்.

✱ ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு வரையான வீதிகளில் திருத்த வேலைகள் நடைபெறுவதால் தயவுசெய்து உங்கள் வாகனம் செலுத்தும் வேகத்தைக் குறைக்கவும். வேகமாக வாகனத்தைச்செலுத்த வேண்டாம்.

✱ அவசரமான நிலைமைகளில் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு அத்துடன் வாகனத்தில் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அதே போன்று அவர்களின் சொத்துக்களின் பாதுகாப்புப் பற்றி கருத்திற்கொண்டும் விவேகமான முறையில் வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

✱ நீங்கள் மதுபானம் உட்கொண்டிருந்தால் அல்லது ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் அது வாகன செலுத்தலை நேரடியாகப் பாதிக்கும். அதனால் அந் நிலைமைகளில் வாகனம் செலுத்துவதைத் தவிர்க்கவும்.

✱ ஏ-9வீதியின் இருமருங்கிலும் அடர்ந்த மரங்கள் காணப்படுவதால் இப்பிரதேசங்களில் விலங்குகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். அதனால், விலங்குகளுக்குத் தீங்கு விளைவிக்காமல் கவனமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும்.

✱ ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான வீதி, மிக வேகமான ஒரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளது. அதனால் புனரமைப்புப் பணிகளும் மிகவேகமாக இடம்பெற்று வருகின்றன. எனவே, வாகனத்தைச் செலுத்தும் போது வீதியின் நிர்மாணச் செயற்பாடுகள் மீது கவனம் செலுத்த வேண்டும்.

✱ வீதி நிர்மாண செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் பாதுகாப்பை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். அத்துடன், அறிவுறுத்தல் பலகைகள் மற்றும் சைகைப் பலகைகள் மீது காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைத் தயவுசெய்து பின்பற்றுதல் வேண்டும்.

✱ விதிகளை மீறுகின்ற மற்றும் சட்டத்துக்கு இணங்க அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

என அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

# வேம்பொடுகேணி தமிழ் வித்தி! 12 வருடங்களின் பின் ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட வேம்பொடுகேணி தமிழ் வித்தியாலயம் 12 வருடங்களின் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் உள்ள பளை வேம்பொடுகேணி தமிழ் வித்தியாலயம்கடந்த2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட போர் காரணமாக மூடப்பட்டதுடன் அதன் கட்டடங்களும் சேதமடைந்து முற்றாக அழிந்து போயுள்ளன.

இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து 12 வருடங்களின் பின்னர் மீளக்குடியேறியுள்ள நிலையில் குறித்த பாடசாலையை மீள ஆரம்பிக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து குறித்த பாடசாலை தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிகக் கொட்டகை அமைக்கப்பட்டு நேற்றுப் புதன்கிழமை காலை 9 மணிக்கு மீள ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பளைக் கோட்டக் கல்வி அதிகாரி, ஏனைய பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு 700 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கிய இப் பாடசாலை, தற்போது 30 மாணவர்களுடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-6)

# புதுக்குடியிருப்பில் மாணவி மீது வன்புணர்வு

யாழ்ப்பாணம், செப்.13

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவியொருவர் சில நாள்களுக்கு முன்னர் அவரது உறவினரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதியில் மேற்படி பாடசாலை மாணவி தாயாருடன் வசித்து வந்துள்ளார். 12 வயதான குறித்த பாடசாலை மாணவி வீட்டில் தனியாக இருந்த வேளையில் அவரது உறவினர் முறையான ஒருவரினால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

தாயார் வீடு திரும்பிய பின்னர் குறித்த பாடசாலை மாணவி நடந்த விடயத்தை தெரியப்படுத்தவே அவர் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(த-5)

# தியத்தலாவை சம்பவம் குறித்து ஆராய்வதற்கு விசாரணை மன்று

கொழும்பு,செப் 13

தியத்தலாவை இராணுவ முகாமில் மண் குவியலொன்று சரிந்து வீழ்ந்ததால் படையினர் 6 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து விசாரிப்பதற்கு விசாரணை மன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

விடுமுறைக்கால பங்களாவொன்றுக்கான நிலத்தைத் தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாகவும் இதையடுத்து மேற்படி பங்களா நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த இராணுவத்தினரின் சடலங்கள், பிரேத பரிசோதனைகளின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜி.வி. ரவிப்பிரிய கூறினார்.

இதேவேளை, மேற்படி சம்பவத்தின்போது காப்பாற்றப்பட்ட படையினர் இருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் ஆபத்தான நிலையில் இல்லை எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

(த)

# சீன உயர்மட்ட தூதுக்குழு இவ்வாரம் இலங்கைக்கு

கொழும்பு,செப் 13

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழுவின் தலைவரான வூ பாங்குவோ, இவ்வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். சீன அரசியல் உயர்மட்ட வரிசையில் அவர், மூன்றாவது நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவருடன் 100 பேர் கொண்ட தூதுக்குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்து அரச உயர்மட்டத்தினரை சந்திக்கவுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில், பொருளாதார மற்றும் கொன்ஸூலர் விடயங்கள் தொடர்பாக 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அவர் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை ஸ்திரப்படுத்தும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியாங்காவோ கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம். ஜயரட்ன, சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாங்குவோ சந்திக்கவுள்ளார்.

(த)

## பட்டதாரி பயிலுநர் உள்ளீர்ப்பு விவகாரம்

# யாழ்-கிளி.டிப்ளோமாதாரிகளின் மனுக்களை விசாரிக்க அனுமதி

கொழும்பு,செப்.13

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் சமர்ப்பித்துள்ள அடிப்படைஉரிமைமீறல்மனு மீதான விசாரணையை தொடர்ந்து மேற்கொள்ள உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அடுத்த வருடம் மார்ச் 5 ஆம் திகதி மீண்டும் விசாரணை ஆரம்பமாகும்.

ஏனைய மாவட்டங்களில் இருந்து பட்டதாரி பயிலுநர்களுக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அதே சமயம் இந்த இரு மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்தவர்கள் மாத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளார்கள் என்று மனுதாரர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

நீதியரசர்கள் சந்திரா ஏக்கநாயக்க, எஸ்.ஐ.இமாம் மற்றும் சத்யா ஹெட்டிகே ஆகியவர்களின் முன்னிலையில் இந்த மனுவிசாரணைக்கு வந்தது.

228 மனுதாரர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனவிரட்ண, அமைச்சு செயலாளர் பி.வி. அபயக்கோன், பொதுசேவைகள் ஆணையம், திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தர, யாழ்ப்பாணம் அரச அதிபர், மற்றும் சட்டமா அதிபர் ஆகியவர்கள் பிரதிவாதிகளாக குறிக்கப்பட்டுள்ளனர். மனுதாரர்கள் சார்பில் எம்.ஏ.சுமந்திரன், கெஹான் குணதிலக்க மற்றும் சாரித்த டி பொன்சேகா ஆகியவர்களின் அனுசரணையுடன் மோகான் பாலேந்திரா பிரசன்னமாகியிருந்தார். மனுதாரர்கள் தரப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஒக்ரோபர் 30 ஆம் திகதிய பொது நிர்வாக சேவை சுற்றறிக்கையில் ஆள்சேர்ப்பு தொடர்பாக குறிப்பாக கூறப்பட்டிருப்பது இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்பட்டுள்ள கணக்கியல் மற்றும் வர்த்தகத்தில் நான்கு ஆண்டுகள் உயர் தேசிய டிப்ளோமாவானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினால் வழங்கப்படும் வர்த்தக பட்டப்படிப்புக்கு ஈடாகும் என்பதாகும்.

இந்தத் தகுதிகள் வர்த்தகத்தில் பட்டப்படிப்புக்கு இணையானதும் என்பதை பொது நிர்வாக அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அதன் 2011 நவம்பர் 15 ஆம் திகதிய கடிதத்தில் ஒருபட்டப்படிப்புக்கு மாற்றீடாக இதனை அங்கீகரித்துள்ளது.

2012 பெப்ரவரியில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கிணங்க மனுதாரர்கள் விண்ணப்பித்தார்கள்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு விவகாரங்களுக்கான செயலாளர் தமது 1990 ஒக்ரோபர் 30 ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு மாறாக 2012 ஜூன் 25 ஆம் திகதிய கடிதத்தில் டிப்ளோமா தாரிகள் இப்போதைய திட்டத்தின் கீழ் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று சகல மாவட்ட செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இருந்த போதிலும் பல்கலைக்கழக ஆணைக்குழுவானது தனது 2012 ஜூலை 5 ஆம் திகதிய கடித்தில் இந்த தகுதிகள் வர்த்தகத்தில் பொதுப் பட்டத்துக்கு மாற்றீடான தகுதிகளாக ஏற்றுக் கொள்ளப்படுவன என்பதை உறுதி செய்தது. மற்றும் இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வியின் பணிப்பாளர் நாயகமும் தமது 2012 ஜூலை 9 ஆம் திகதிய கடிதத்தில் குறித்த தகுதிகள் பொதுப் பட்டத்துக்கு நிகராக ஏற்றுக் கொள்ளப்படுகின்றமையை அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் உறுதிப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு பல தரப்பட்ட தலையீடுகளின் விளைவாக பொது நிர்வாக அமைச்சு உயர்தேசிய டிப்ளோமா தகுதியுள்ளவர்களை சேர்த்துக் கொள்வதற்கு முடிவு செய்தது.

உயர் தேசிய டிப்ளோமா தகுதி பெற்றவர்களை பட்டதாரி பயிலுநர்களாக சேர்த்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கும் இந்த சூழ்நிலையில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் வாழும் தாங்கள் மட்டும் நிராகரிக்கப்பட்டிருப்பதாக மனுதாரர்கள் முறையிட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வாழும் டிப்ளோமாதாரிகள் மட்டும் புறக்கணிக்கப்பட்டிருப்பதை உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு மனுதாரர்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக அறிவித்து தங்களையும் பட்டதாரி பயிலுநர்களாக உள்ளீர்க்கும்படி பணிப்புரை வழங்குமாறு மனுதாரர்கள் கேட்டுள்ளனர்

(ட)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிகுண்டு அபிவிருத்தி கிடப்பில் போடப்படுகிறது

### நிதி இல்லை என்று அரச சார்பற்ற நிறுவனமும் கைவிரித்தது

*யாழ்ப்பாணம்,செப்.13*

*கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்க உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டம் எதுவும் இடம்பெறாது. இந்த அபிவிருத்திக்கென சொண்ட் நிறுவனம் நிதி வழங்குவதாக மதிப்பீட்டை பெற்றுக் கொண்ட போதும் தற்போது பின்வாங்கியுள்ளது என்று யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளன தலைவர் க.முதலியார் தெரிவித்தார்.*

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்கத்திட்டத்தின் அபிவிருத்தி குறித்து கடந்த 10 ஆண்டுகளாக பேசி வருகின்றோம். எனினும் இதற்காக எவரும் நிதிப்பங்களிப்பு செய்ய முன்வரவில்லை.

முன்னாள் அரச அதிபர்களான க.கணேஷ், செ.பத்மநாதன், திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் காலத்திலும் நிதிபங்களிப்பு குறித்து பல கூட்டங்களும், பல கருத்தமர்வுகளும் இடம்பெற்றன.

எனினும் எதுவும் முன்னிலைப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவில்லை.

இந்த நிலையில் புதிதாக பதவியேற்ற மானிப்பாய் பிரதேசசபை மீண்டும் கட்டுடை இடிகுண்டு அபிவிருத்தி தொடர்பாக மக்களின் கருத்தைக் கேட்டுக் கொண்டது.

இந்த நிலையில் இதற்கான மதிப்பீட்டை சொண்ட் நிறுவனம் கேட்டிருந்தது.

எனினும் தற்போது நிதி இல்லை என்று குறித்த நிறவனம் பின்வாங்குகிறது.

இவ்வாறான செயற்பாடுகளே அபிவிருத்திக்கு பின்னடைவை ஏற்படுத்துகின்றன.-என்றார்.

இது தொடர்பாக சொண்ட் நிறுவனத்தின் தலைவர் ச.செந்துராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

கட்டுடை இடிகுண்டு நீர்த்தேக்க அபிவிருத்தி என்பது பெருமளவில் நடைபெற வேண்டிய வேலைத்திட்டம்.

இதற்கு சொண்ட் நிறுவனம் நிதி உதவி வழங்க முடியாது. தற்போது ஏனைய நிதி நிறுவனங்களிடம் நிதியுதவி கோருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நிதி கிடைக்கப் பெற்றால் பிரதேச சபையூடாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும் -என்றார். (ம-50-14)

## எழுதுமட்டுவாழ் வடக்கில் கட்டடம் நேற்று கையளிப்பு

### ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தில் 25 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது

தென்மராட்சி, செப்.13

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினரால் எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நேற்று கையளிக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை மற்றும் கூட்டுறவு நகர், கடை ஆகியவை அமைப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமே கையளிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்வு இடம்பெற்ற எழுதுமட்டுவாழ் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் அத்தியாவசியமானது எனக் கருதி இது அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத் திட்டம் ப.நோ.கூ. சங்க கிளை, பொதுநோக்கு மண்டபம் ஆகிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பிரிவு மக்களின் வாழ்வாதாரத் திட்ட உதவியும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## செப்ரெம்பர் உலர் உணவு இந்த வாரம் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.13

உலக உணவுத்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் செப்ரெம்பர் மாதத்துக்கான உலர் உணவுப் பொருள்கள் இந்த வாரத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நிவாரணத்தைப் பெறும் பயனாளிகளின் பெயர்ப் பட்டியல்களை யாழ். செயலகத்தில் இயங்கும் உலக உணவுத் திட்டப் பிரிவுடன் தொடர்பு கொண்டு ப.நோ. கூ. சங்கங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த நிவாரண விநியோகத்தில் பயனாளிகளுக்கு 21 வகையான பொருள்கள் விநியோகிக்கப்படும்.

சங்கங்களினால் கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் யாவும் தரமானவையாக இருக்க வேண்டும்.

தரம் குறைந்த பொருள்கள் விநியோகிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் குறித்த சங்கங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பொருள்களுக்கான விநியோக விலைப் பட்டியலை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பெற்று நிவாரண விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நிவாரண விநியோகம் முடிவடைய வேண்டும். 22 ஆம் திகதிக்கு முன்னர் விநியோக அறிக்கையை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்- என்றார். (த-17)

## வலி. கிழக்குப் பிரதேச சபை ஊழியர்கள் கடமையில் இல்லாதது குறித்து விசாரணை

### நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை என்று உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த திருவிழாக் காலத்தின் போது பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகளை நிறைவேற்றிய வலி.கிழக்குப் பிரதேச சபை ஊழியர்கள் கடமை நேரத்தில் எங்கு சென்றார்கள் என்று விசாரணைதான் நடத்தப்படுகிறதே தவிர இதுவரை அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ தெரிவித்தார்.

செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தில் கடமையாற்றிய பிரதேச சபை ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி வருடாந்த ஆலயத் திருவிழாவில் பொதுமக்களின் போக்குவரத்தை இலகுவாக்க வலிகாமம் பகுதியையும் வடமராட்சிப் பகுதியையும் இணைக்கும் தற்காலிக பாலம், வலி.கிழக்குப் பிரதேச சபை ஊழியர்களால் அமைக்கப்பட்டது.

இந்தப் பாலத்தின் ஊடாக பயணம் செய்த அனைத்துப் பொதுமக்களுக்குமான குடிதண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள், வாகன தரிப்பிட பாதுகாப்புப் பணிகள் என்பவற்றுக்காக இரவு, பகலாக பிரதேச சபை ஊழியர்கள் கடமையாற்றினர்.

இதேவேளை, ''கடந்த 30 ஆம் திகதி உள்ளூராட்சி திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்கள் வலி.கிழக்குப் பிரதேச சபையின் அலுவலகங்களுக்குச் சென்று அசைவுப் பதிவேட்டில் பதிந்துவிட்டு இரவு பகலாக கடமையாற்றிய ஊழியர்களின் பதிவேடுகள் மற்றும் தினவரவுப் பதிவேடுகள் என்பவற்றை வெட்டி ஊழியர்கள் தமது சேவை முடிவில் ஒப்பமிடாதவாறு தடுத்துள்ளனர்'' என்று ஐக்கிய தொழிலாளர் சங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இத்தகைய நடவடிக்கை தொடர்பில் எமது கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதுடன் வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் தமது ஊழியர்களினதும் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டமையால் கண்டிக்கிறோம்'' என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்டபோது:-

ஆய்வு உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சென்றபோது பிரதேச சபையின் அலுவலகங்களில் பணியாளர்கள் கடமையில் இல்லை என்று அறிக்கை கிடைக்கப்பெற்றது. இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச சபையின் செயலாளரிடம் அறிக்கை கோரியுள்ளேன். இதுவரையில் அறிக்கை கிடைக்கவில்லை. அதனால் பிரதேச சபையின் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை- என்றார். (ம-5)

## நல்லூரில் வீதிகளுக்கு சித்தர்களின் பெயர்கள்

யாழ்ப்பாணம், செப்.13

நல்லூர்ப் பகுதியில் உள்ள இரண்டு வீதிகளுக்கு சித்தர்களின் பெயர்களைச் சூட்டுவதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கோயில் வீதியில் துர்க்கா மணி மண்டபத்துக்கு அருகில் செல்லும் வீதிக்கு செல்லப்பா சுவாமிகள் வீதி எனவும் அதே போன்று மங்கையர்க்கரசி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீதிக்கு செல்லப்பா சுவாமியின் சீடரான யோகர் சுவாமிகள் வீதி எனவும் பெயர் சூட்டப்படவுள்ளது.

இரண்டு சித்தர்களும் நல்லூரிலேயே நடமாடியதால் அவர்களின் பெயர்களை இந்த வீதிகளுக்குச் சூட்டுமாறு மக்கள் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்று கூறப்பட்டது. (ம-17)



''சந்நிதியான் அற்புதங்கள்'' பாகம் மூன்றின் வெளியீட்டு விழா, ஸ்ரீ செல்வச்சந்நிதி உற்சவத்தின்போது இடம்பெற்றது. நூலின் முதற் பிரதியை வல்வை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜிடமிருந்து பிரபல வர்த்தகர் வீ.ஆர்.வடிவேற்கரசன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். அருகில் நூல் ஆசிரியர் ந.அரியரத்தினம் காணப்படுகின்றார். (அ-253)

## துண்டி மயானப் புனரமைப்பில் தொடர்ச்சியாக அசமந்தப் போக்கு

### யாழ். மாநகர சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தைப் புனரமைப்புச் செய்வதில் யாழ்.மாநகர சபை அதிக கவனம் செலுத்தாமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர உறுப்பினர் அருளப்பு சொர்ணலிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலப் போரினால் அழிவடைந்த நிலையில் உள்ள இந்த இந்து மயானத்தை விரைவாகப் புனரமைப்புச் செய்து தருமாறு பல தடவைகள் மாநகர முதல்வரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பாகக் கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு, கொய்யாத் தோட்டம், சுண்டிக்குழி, போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர். பழமை வாய்ந்த இந்த மயானத்திலேயே சிவயோக சுவாமிகளின் உடலும் தகனம் செய்யப்பட்டது.

சுவாமிகளுக்கென மயானத்தில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னமும் அழிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மயானம் போதிய வசதிகள் இன்றிக் காணப்படுவதால் சடலங்களைத் தகனம் செய்ய வரும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

எனவே முதலில் மயானத்திற்கென எல்லை வேலி அமைக்கப்பட்டு மயானத்தைப் புனரமைப்பதற்கு யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.- என்றார். (த-17)

## 'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்': நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை

யாழ்ப்பாணம்,செப்.13

முன்னாள் ஆசிரியர் ச.மாணிக்கவாசகர் எழுதிய வேலணை ஒரு வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நூல் அறிமுக உரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் நூல் நயப்புரையை கலாநிதி ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர்.

கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன், புவியியல் துறை பேராசிரியர் கா.குகபாலன், தொழிலதிபர் எஸ்.பி.சாமி, முன்னாள் ஆசிரியர் க.சட்டநாதன், தீவக வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

யாழ்.அரச அதிபர் சு.அருமைநாயகம் நூலை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் எஸ்.பி.சாமி முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்குழந்தையுடன் கிணற்றில் குதித்து பெண் தற்கொலை

தம்புள்ளையில் பெண்ணொருவர் தனது ஒன்றரை வயதுக் குழந்தையுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 10.55 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 38 வயதான பெண்ணொருவரும் அவரது குழந்தையுமே உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண், மன நோயால் பாதிக்கப்பட்டவர் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இருவரதும் சடலங்கள் தம்புள்ளை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## தீர்மானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஹக்கீம் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை காலை விசேட கூட்டமொன்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தக் கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதற்கமைவாக, சில நிபந்தனைகளுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் கட்சித் தலைவர் ஹக்கீம் பேச்சு நடத்துவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஹக்கீம் இன்று பேச்சு நடத்துவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## ஆள்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண அரசியல் நிலைவரம் குறித்து நேற்று கருத்துத் தெரிவித்த ரவூப் ஹக்கீம், மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கில் தமிழர்கள் முஸ்லிம்களை ஆள்கிறார்களா, முஸ்லிம்கள் தமிழர்களை ஆள்கிறார்களா என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. பிரிந்து நிற்கின்ற கிழக்கில் இணக்கப்பாட்டுடனான ஆட்சியே முக்கியம்.

முஸ்லிம்களின் சுயாட்சி, சுயநிர்ணயம், அவர்களின் அபிலாஷைகள் என்பன இந்த வெற்றிக்குப் பின்னர் பேசவேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் அதிகாரப் பகிர்வை நுகரும் இடம் கிழக்கு என்பதால் மாகாண ஆட்சி வெறுமனே தலையாட்டும் பொம்மை ஆட்சியாக இல்லாமல், நீதியாக செயற்படும் அதிகாரமுள்ள ஆட்சியாக இருக்க வேண்டும். இந்த நிலைமைகளை நாம் எமது உறுப்பினர்களுக்குத் தெளிவாகச் சொல்லியுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களை எடுத்து ஆட்சியமைக்கும் முயற்சிகள் நடைபெறுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இப்படியானதொரு நடவடிக்கை நடந்திருந்தால் அது உண்மையில் ஓர் ஆரோக்கியமான விடயமல்ல. சிறுபிள்ளைத்தனமானதாகவே அது கருதப்படும். சர்வதேசமே இந்த அரசியல் சூழ்நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஆள்களைப் பறித்து ஆட்சியமைக்க முயற்சித்தால் அது தமது விரல்களாலேயே அவர்கள் கண்களைக் குத்திக்கொள்கிறார்கள் என்றே அர்த்தம்.

தமிழ் பேசும் சமூகங்களின் அபிலாஷைகளுக்குக் குந்தகமான விதத்தில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது. அதை மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன் - என்றும் தெரிவித்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

## இந்தியாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.எஸ்.ஐ. புலனாய்வு அமைப்பின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக இந்தியாவின் முதன்மை வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பான றோவின் அண்மைய அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்திய நீர்மூழ்கிகளின் நடமாட்டம் குறித்து உளவு பார்க்கும் கருவிகளை அவர்கள் அங்கு நிறுவியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

றோவின் இந்த அறிக்கையை அடுத்து. நேற்றுமுன்தினம் இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் செயலகத்தில் உயர் மட்டக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் அச்சுறுத்தலை எதிர்கொள்வது, மூலோபாய திட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பாகிஸ்தானின் முயற்சிகளை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் தொடர்பாடல் இணைப்புகளைப் பாதுகாப்பதற்கான முக்கியத்தும் குறித்து, இந்தக் கூட்டத்தில் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா இந்த விவகாரம் குறித்து இலங்கை அதிகாரிகளிடம் பிரச்சினை எழுப்பலாம் என்றும், மூன்றாவது நாடு ஒன்றுக்கு எதிராகச் செயற்படுவதற்கு இலங்கையின் பிரதேசம் ஒன்று பயன்படுத்தப்படுவது குறித்து கேள்வி எழுப்பலாம் என்றும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தமானில் இந்தியக் கடற்படையின் கப்பல்களின் நகர்வுகளையும் தொடர்பாடல்களையும் இடைமறிக்கச் சீனா இதேபோன்றதொரு அவதானிப்பு நிலையத்தை கொக்கோ தீவில் நிறுவியுள்ளது.

பாகிஸ்தான் புலனாய்வுத்துறையான ஐ.எஸ்.ஐ. யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ள அவதானிப்பு நிலையம் இந்தியாவின் கரைக்கு மிகவும் நெருக்கமானதாகும். இதற்கருகிலேயே விசாகப்பட்டினத்தில் இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகம் அமைந்துள்ளது.

அங்கிருந்தே அண்மையில் ரஷ்யாவிடம் பெறப்பட்ட அணு சக்தி நீர் மூழ்கி உள்ளிட்ட நீர்மூழ்கி கப்பல்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

## ஆட்சி அமைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திர முன்னணியும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சிய மைக்க ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாக இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, மாகாண சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலைத் தேர்தல் ஆணையாளர் வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் முதலமைச்சர் பெயரை அறிவிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணசபையில் கூட்டாட்சி ஒன்றை அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள பிரிட்டன் தூதரகம் சுதந்திரமான முறையில் அவர்கள் சென்று வருவதற்காகத் தனி விமானம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது,

தனி விமானத்தில் பிரிட்டன், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை வடபகுதிக்கு அழைத்துச் செல்வதற்கு கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் அனுமைதி கோரியமை அரசுக்கு, அதிர்ச்சியை ஏற்படுத்திய போதும், வேறு வழியின்றி அதற்குப் பச்சைக்கொடி காண்பித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அரச அதிகாரி ஒருவர், அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி இன்னமும் இலங்கை மீது அனைத்துலகப் போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ள முனைவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையை இலக்கு வைத்து, கொமன்வெல்த் அமர்வுகளின் போது புதிய குற்றச்சாட்டுகளைத் தயார் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதம் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையிலும், வரும் நவம்பரில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் பூகோள கால மீளாய்வுக் கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையிலும் இலங்கைக்கு எதிரான பரப்புரைகளை அவர்கள் தீவிரப்படுத்தக் கூடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது ஸ்தம்பிதமடைந்துள்ள அரசியல் தீர்வுப் பயணம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பெறுபேறுகள் ஆகிய உட்பட மேலும் பல விடயங்கள் குறித்தும் அவர் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, தீர்வை நோக்கிப் பயணிப்பதற்குத் தடங்கலாக உள்ள காரணிகளை இச்சந்திப்பின் போது பிளேக்குக்கு கூட்டமைப்பு எடுத்துரைக்கும் என்றும், தேசிய செயற்றிட்டம் தொடர்பில் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அமெரிக்காவிடம் அது அறிவிக்கும் என்றும் தெரியவருகின்றது.

அத்துடன், தமிழர் தாயகத்தில் நிலவும் சமகால பிரச்சினைகள் தொடர்பிலும் பிளேக்குக்கு கூட்டமைப்பு தெளிவுபடுத்தவுள்ளது.

அடுத்ததாக, முஸ்லிம் காங்கிரஸுடனான சந்திப்பின்போது கிழக்கு மாகாணசபைத் தேர்தல் விவகாரம் தொடர்பில் பிளேக் முக்கிய கவனம் செலுத்துவார் என்பதுடன், முக்கிய சில விடயங்கள் தொடர்பில் அவர் மு.காவின் நிலைப்பாட்டையும் கேட்டறியவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மு.கா. ஆகியவற்றுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து அரசுக்குத் தெளிவுபடுத்தவுள்ள பிளேக், இவ்வாறான விடயங்களுக்கு உடன் தீர்வு அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்துவார் என அறியமுடிகின்றது.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு றொபர்ட் ஓ பிளேக் நேற்று இலங்கை வந்தடைந்தார். இலங்கையில் அவர் தங்கியிருக்கும் காலப்பகுதிக்குள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கும் விஜயம் செய்வதுடன் சில சமூகத்தினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கிடையிலான மோதலைத் தடுக்க முற்பட்ட போதே குறித்த இரு அதிகாரிகளும் மோதலில் ஈடுபட்ட கைதியொருவரால் தாக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கடவுளே!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை நடைபெற்றது.

கடந்த பல தசாப்தங்களாகவும், இறுதி யுத்தத்தின் போதும் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டவர்கள் தொடர்பாகவும் பல ஆயிரக்கணக்கானோரின் விடுதலையைக் கோரியும் அவர்கள் தொடர்பான தகவல் கோரியும் கடந்த பல வருடங்களாக போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயினும் இன்னமும் அவர்களுக்கு இலங்கை அரசினால் எந்தத் தீர்வும் அளிக்கப்படவில்லை. அண்மைக்காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டு ஊனமாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர். இந்த நிலையில் ஜனநாயக வழியிலான போராட்டங்களும் தீவிரம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க நீதி வேண்டி ஆண்டவன் சந்நிதியில் 1008 தேங்காய்களை உடைக்கும் போராட்டத்தை மேற் கொண்டனர்.

இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், வினோநோகராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பாஸ்கரா, சிறிதுங்க ஜெயசூரிய ஆகியோர் உட்பட அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து இதில் கொண்டனர்.(த-402)

## ரூபா 5 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களாகச் சென்ற சிலர் ஆளுங் கட்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டுமென அன்பான அழைப்பு விடுத்துள்ளனர்.

கொழும்பிலிருந்து ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்திருக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் வீடுகளுக்கு சிலர் சென்றிருக்கின்றனர்.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசிய இவர்கள் அனைவரும் சிங்களவர்தான் என்பதை தாம் ஊர்ஜிதம் செய்யமுடிந்ததாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்குமாகாணசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து தாங்கள் வந்துள்ளனர் எனத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர்கள், கிழக்கு மாகாணசபையில் ஆளும் தரப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளனர். அப்படி ஆதரவளித்தால் ஐந்துகோடி ரூபா ரொக்கப் பணம், கொழும்பில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு, விரும்பிய வாகனம் உட்படபல சலுகைகள் செய்து தரப்படும் என்று கூறியுள்ளனர்.

அரசுக்கு ஆதரவு வழங்காவிட்டால் நீங்கள் பல நெருக்கடிகளைச் சந்திக்கநேரிடும் என அச்சுறுத்தும் பாணியிலும் தமிழ்க்கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசுக்கு ஆதரவளித்தால் நீங்கள் கூறும் பிரதேசத்திற்குரிய அனைத்து நிதியையும் உங்களூடாகத் தருவோம், பெரும் வசதியாக இருக்கலாம் என்றெல்லாம் ஆசை வார்த்தை காட்டியுள்ளனர்.

இவ்வாறு வந்தவர்களில் சிலர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என அறியமுடிகின்றது என்று தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

''நாம் சலுகைகளுக்குப் பின்னால் செல்பவர்கள் அல்லர். இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியே நாம் தேர்தலில் வாக்குக் கேட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். தனித்தனியாக எங்களிடம் பேசுவதை விடுத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேசி இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பாகத் [illegible] இந்தச் சலுகைகளைக்கண்டு ஏமாறுபவர்களல்லர். ஒரு பியசேனவைப் போல பல பியசேனாக்களை உருவாக்கலாம் என நீங்கள் கனவுகாண வேண்டாம். இதை உங்களை அனுப்பியவர்களிடம் கூறுங்கள்'' எனத் தாம் தெளிவாகக் கூறினர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாகாணசபைக்கு அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவாகிய உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவாகிய உறுப்பினர்களான ஜி.கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை), இந்திரகுமார் பிரசன்னா, எம்.நடராசா மற்றும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவாகிய உறுப்பினர் ஜே.க.நாகேஸ்வரன் ஆகியோரின் வீடுகளுக்கே இவர்கள் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடும்போதே நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது ஆட்சிப்பீடத்திலுள்ள அரசு என்றுமே நீதியான முறையில் தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. மாறாக, அது வன் முறைகளைக் கட்டவிழ்த்து விட்டே ஜனநாயகத்துக்கு எதிரான வகையில் அரச வளங்களைப் பயன்படுத்தி தேர்தலை எதிர்கொள்கின்றது.

இவ்வாறு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை உருட்டி மிரட்டி வாக்குகளைப் பெறுவது உண்மையான வெற்றியல்ல. வாக்குகளைக் கொள்ளையடித்துவிட்டு மக்கள் ஆணை தமக்கே கிடைத்துள்ளது என அரசு கூறுவது மடத்தனமாகும்.

அதேவேளை, பணத்தை மாத்திரமல்ல, இந்த அரசு தற்போது உறுப்பினர்களையும் கொள்ளையடிக்கின்றது. மு.கா. உறுப்பினர்களுக்கு வலைவீசியுள்ளமை இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

மஹிந்த சிந்தனையை மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். ஏனெனில், அதில் கொள்கை, கோட்பாடுகளுக்கு இடமில்லை. கொள்ளைகளுக்கே முதலிடம் உள்ளது.

கடந்த தேர்தல்களில் பெற்ற பெறுபேறுகளை விட, இந்தமுறை அரசுக்கு வாக்கு வங்கியில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.கா. முடிவில்தான் கூட்டமைப்பின் ஆட்சி

## ஆளும்தரப்புக்கு இடமளிக்கக்கூடாது என்கிறார் சம்பந்தன் எம்.பி.

*திருகோணமலை,செப்.13*

***முஸ்லிம் காங்கிரஸின் முடிவில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பது தங்கியிருக்கின்றது. ஆட்சி அமைக்கும் பட்சத்தில் விட்டுக்கொடுப்புக்களை முஸ்லிம் காங்கிரஸுக்கு விட்டுக்கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.***



நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு தனது இல்லத்தில் கிழக்கு மாகாண சபைக்கு மட்டக்களப்பு, திருகோணமலை,அம்பாறைஆகியமூன்று மாவட்டங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 11 தமிழ் தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் பலம் வாய்ந்த ஆணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தந்துள்ளனர். தமிழ் மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்புக்குப் போதுமான மதிப்பு கொடுக்கப்பட வேண்டும். தவறினால் அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயக நடைமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படலாம்.

கிழக்கு தேர்தல் முடிவின் பின்னர் இராஜதந்திரிகள் சிலருடனும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் உரையாடியிருக்கின்றேன். தமிழ் மக்கள் தந்துள்ள ஜனநாயகத் தீர்ப்பை மதிக்க வேண்டும். ஜனநாயகத் தீர்ப்பை உதாசீனம் செய்யாது ஜனநாயக முடிவை மதித்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்களிடம் நான் தெரிவித்தேன்.

கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 12 தமிழ் உறுப்பினர்களில் 11 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். தவறுகள் இடம்பெறாது இருந்திருந்தால் 12 ஆவது இடங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே கிடைத்திருக்கும் என்றும் நான் இராஜதந்திரிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிவித்தேன்.

முதல் காலப்பகுதியில் முதல் அமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம். எம் மக்களில் அதிகமானோர் முதல் அமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்க வேண்டும் என்றும் மாகாண ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற உறுதியுடன் இருக்கின்றார்கள். கிழக்கு மாகாண ஆட்சியை அமைப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கு ஆளும் தரப்புக்கு இடமளிக்கக்கூடாது - என்றார்.

கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொ.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சீ.யோகேஸ்வரன், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமனற் உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-40)

# மட்டு. பிரதான வீதிகளில் கட்டாக்காலிகளால் தொல்லை

மட்டக்களப்பு,செப்.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் கட்டாக்காலிகளின் தொல்லைகள் நாளந்தம் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் மற்றும் கால்நடைகளினாலே இந்த தேவையற்ற விபரீதங்கள் ஏற்படுவதாகக் கூறும் பொதுமக்கள் இவற்றைக் கட்டுப்படுத்துவதில் உரிய உள்ளூராட்சி நிர்வாகங்கள் நடவடிக்கைகள் எடுக்கத் தவறுவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக மட்டக்களப்பு - திருமலை நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு மாநகர சபை, ஏறாவூர் நகர சபை மற்றும் செங்கலடி பிரதேச சபைக்குட்பட்ட நெடுஞ்சாலையில் அதிகமான வீதி விபத்துகளுக்கு கட்டாக்காலிகளும் பிரதான காரணம் என்று வாகன உரிமையாளர்களும் பொதுமக்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இவற்றின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

சனநெரிசல் மிக்க மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் கட்டாக்காலிகளின் தொல்லையால் அவதியுறுவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தென்படவில்லையா? அல்லது கண்டும் காணாதவாறு நடந்துகொள்கின்றார்களா என்பது புரியவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## சமூக செயற்பாட்டு வெளியீடு நாளை

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், சமூகச் செயற்பாட்டு வெளியீடுகளும், காட்சியும் பகிர்வும் கொண்டாட்டமும் நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் மட்டக்களப்பு பயனியர் வீதியில் மர நிழலில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ், மாநகர முதல்வர் திருமதி சிவகீதா பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவர்.

மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், மூன்றாவது கண்- உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழு ஆகிய அமைப்புக்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், நடைபெறும் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளன.


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் சோமசுந்தரம்

### (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன கற்குழி (குவாரி) பகுதி முன்னாள் ஊழியர்- காங்கேசன்துறை)

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோமசுந்தரம் நேற்று (12.09.2012) புதன்கிழமை மாலை நான்கு மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் பூமணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம், பூரணம், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜாதேவி, இராஜேந்திரன் (சந்திரன்-லண்டன்) சாவித்திரிதேவி (சாரதா -லண்டன்) இராஜசுந்தரம் (நடனம் -லண்டன்) சாரதாதேவி (றாணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருநாவுக்கரசு (திரு வீடியோ அன் போட்டோ) புஸ்பராணி (ராணி-லண்டன்) ஞானசேகரம் (லண்டன்) பிரியதர்சினி (பிரியா -லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அரவிந்தன் (லண்டன்) அருட்செல்வன் (தயா) அருட்குமார் (கண்ணம்மா) புஸ்பராணி, சஜிந்தன் (லண்டன்) சாரா (லண்டன்) திவாகர் (லண்டன்) அபிநயா (லண்டன்) பிரியங்கா (லண்டன்) மிதுலா, அபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுறோட்,**
**காரைநகர்.**

**தகவல்:**
[illegible] திருநாவுக்கரசு (திரு.வீடியோ அன் போட்டோ இலங்கை)
S. இராஜேந்திரன் (சந்திரன் -லண்டன்- 00442089654223 ,00447440026826)

(c/3343)(9.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜாஜ்

# இலங்கையில் விற்பனையில் 1ம் இடம். அதிநவீன தொழில்நுட்பத்தில் மிகச்சிறந்த மோட்டார் சைக்கிள்கள்

## பஜாஜ் சிறப்புடன் திகழ அதிநவீன அம்சங்கள்

✓ எரிபொருள் சிக்கனம் ✓ தோற்றம் மற்றும் பல மாதிரிகள் ✓ தொழில்நுட்பம் ✓ பொருளாதாரச் சிக்கனம் ✓ செயற்பாடு
✓ விற்பனை ✓ முகவர் வலையமைப்பு ✓ விற்பனைக்குப் பிந்திய சேவை ✓ மீள் விற்பனை விலை

## 100cc - 150cc தொடர்களில் பொருளாதார சிக்கனத்திற்கு 1ம் செயல் வீரர்கள்



BOXER BM 100 ES

- 100cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- இலத்திரனியல் ஸ்டார்ட்
- ExhausTEC தொழில்நுட்பம்
- பின்புற சுமைதாங்கி
- பலமிக்க SNS பின்பக்க சொக் அப்சோபர்

விலை: ரூபா. 138,000/-



BOXER BM 150

- 150cc, பலமிக்க 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- இலத்திரனியல் ஸ்டார்ட்
- ExhausTEC தொழில்நுட்பம்
- ஏலோய் வீல்ஸ்
- நீளமான பின்புற சுமைதாங்கி
- பலமிக்க SNS பின்பக்க சொக் அப்சோபர்
- 3.00 x 17 & 100/90 x 17 அகலம் கொண்ட டயர்கள்

விலை: ரூபா. 163,000/-



CT100

- 100cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- 'ஸ்பிரிங் இன் ஸ்பிரிங்' ஷொக் எப்ஸோபர்
- ExhausTEC தொழில்நுட்பம்
- 35W ஹெலஜன் முன் விளக்கு
- பின்புறம் பொருத்தப்பட்ட ஸ்டீல் சுமை தாங்கி

விலை: ரூபா. 139,750/-



PLATINA

- 100cc, 4 ஸ்ட்ரோக் க்ரொஃபைட்-டின்டட் என்ஜின்
- 'ஸ்பிரிங் இன் ஸ்பிரிங்' ஷொக் எப்ஸோபர்
- ExhausTEC தொழில்நுட்பம்
- மெட் தளத்தில் நிறைவில் கறுப்பு நிற ஸைலென்ஸருடன் க்ரோம் பாதுகாப்பு கவசம்
- ட்ரம் ப்ரேக் உடன் கவர்ச்சியான எலோய் வீல்கள்

விலை: ரூபா. 148,125/-



PLATINA 125

- 125cc 4-ஸ்ட்ரோக் என்ஜின்
- 5 வேக கியர்கள்
- தன் இயக்க அமைப்பு
- எரிபொருள் சிக்கனத்துக்கான ஸ்விட்ச்
- 'ஸ்பிரிங் இன் ஸ்பிரிங்' பின்புற ஸஸ்பென்ஷன்
- முன்புற ஸஸ்பென்ஷனில் உராய்தல் எதிர்க்கும் புஷ்
- பராமரிப்புக்கு குறைந்த மின்கலம்

விலை: ரூபா. 160,375/-

விசேட கொடுப்பனவு!
ஏனைய அனைத்து பஜாஜ் மோட்டார் சைக்கிள்களின் ஒவ்வொரு கொள்வனவின்போதும் ஒரு ஹெல்மட் மற்றும் ஒரு ஜக்கட்
இலவசம்!!
2012 செப்டெம்பர் 1 முதல் 30 வரை வழங்கப்படும்

Discover சுதந்திரம்...

## 100cc - 150cc தொடர்களில் சுதந்திரத்திற்கும் சிக்கனத்திற்கும் 1ம் வகைகள்



Discover DTS-Si 100 cc

- 100cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- ExhausTEC தொழில்நுட்பம்
- தன் இயக்க அமைப்பு மற்றும் எரிபொருள் சிக்கனத்துக்கான ஸ்விட்ச்
- நைட்ரோக்ஸ் ஷொக் எப்ஸோபர்
- LED டேல் விளக்கு
- கறுப்பு நிற எலோய் வில்கள்
- பராமரிப்புக்கு குறைந்த மின்கலம்

விலை: ரூபா. 169,375/-



Discover 125

- எக்ஸோஸ்டெக் (ExhausTEC) உடன் 125cc DTS-i எஞ்ஜின்
- 5 வேக கியர் வழிமுறை
- தன்னியக்க சோக்குடன் (Auto Choke) மின் ஆற்றல் செயற்பாடு
- கண்கவர் ஒப்பற்ற பலவர்ண ஸ்டிக்கர்கள்
- கறுப்பு நிற வடிவமைப்பு
- கவர்ச்சிகரமான மீற்றர் அமைப்பு
- முன்பக்க டிஸ்க் பிரேக்

விலை: ரூபா. 164,750/- (Drum)
விலை: ரூபா. 178,500/- (Disc)



Discover 150

- ExhausTEC தொழில்நுட்பத்துடன் 150cc DTS-i எஞ்ஜின்
- 5 வேக கியர்கள்
- தன்னியக்க சோக்குடன் (Auto Choke) மின் ஆற்றல் செயற்பாடு
- எரிபொருள் சிக்கனத்துக்கான ஸ்விட்ச்
- டிஸ்க் கவருடனான முன்பக்க டிஸ்க் பிரேக்
- NitroX சொக் அப்சோபர்ஸ்

விலை: ரூபா. 192,500/-

pulsar சக்தி!

## 135cc - 220cc தொடர்களில் சக்திக்கு 1ம் வகைகள்



pulsar 135LS

- ExhausTEC தொழில்நுட்பத்துடன் 135cc, 4 Valve, DTS-i எஞ்ஜின்
- 5 வேக கியர்கள்
- தன்னியக்க சோக்குடன் (Auto Choke) மின் ஆற்றல் செயற்பாடு
- கிளிப் ஒன் ஹெண்டில் பார் மற்றும் LCD டிஜிடல் மீட்டர்
- NitroX பின்புற சொக் அப்சோபர்ஸ்
- முன்பக்க டிஸ்க் பிரேக்
- வடிவான ஹெட்லைற் Fairing

விலை: ரூபா. 213,500/-



pulsar DTS-i 150 UG 4.5

- 150cc கறுப்பு நிற என்ஜின்
- மின் ஆற்றல் செயற்பாடு
- Aerodynamic டாங்க் பிலப்ஸ்
- விசிற தோற்றமுள்ள முன்புற மின்விளக்கு
- கிளிப் ஒன் ஹெண்டில் பார் மற்றும் LCD டிஜிடல் மீட்டர்
- இரட்டைவரி பின்புற LED டேல் விளக்கு
- கறுப்பு எலோய் வீல்கள்
- NitroX சொக் அப்சோபர்ஸ்

விலை: ரூபா. 243,375/-

விசேட கொடுப்பனவு!
ஒவ்வொரு பல்சர் மோட்டார் சைக்கிள் கொள்வனவின்போதும் பல்சர் வர்க்க ஒரு ஹெல்மட் மற்றும் ஒரு ஜக்கட்
இலவசம்!!
2012 செப்டெம்பர் 1 முதல் 30 வரை வழங்கப்படும்



pulsar DTS-i 180 UG4

- 180cc, DTS-i என்ஜின்
- ExhausTEC மற்றும் Trics III தொழில்நுட்பம்
- மின் ஆற்றல் செயற்பாடு
- கிளிப் ஒன் ஹெண்டில் பார் மற்றும் LCD டிஜிடல் மீட்டர்
- Aerodynamic டாங்க் பிலப்ஸ் மற்றும் 3D கிரபிக்ஸ்
- 5-way adjustable பின்புற NitroX சாக் அப்சோபர்ஸ்
- முன்பக்க சஸ்பென்சனில் Anti-friction bush

விலை: ரூபா. 288,875/-



pulsar 220 SF

- 220cc, DTS-i ஏயார் கூல்ட் மற்றும் ஒயில் கூல்ட் என்ஜின்
- தன்னியக்க சோக்குடன் (Auto Choke) மின் ஆற்றல் செயற்பாடு
- இலகுவான இரட்டை டிஸ்க் பிரேக்
- ஷோர்ம் பிளேட் சைலன்சர்
- கிளிப் ஒன் ஹெண்டில் பார் மற்றும் LCD டிஜிடல் மீட்டர்
- கறுப்பு அலோய் வில்ஸ் மற்றும் டியுப்லஸ் டயர்
- பின்புற NitroX சொக் அப்சோபர்ஸ்
- விளையாட்டு வீரர்களுக்கு ஏற்ற வலிமையான வடிவம்

விலை: ரூபா. 341,500/-

மேற்படி விலைகளில் VAT உள்ளடக்கப்படாததுடன் இவ் விலைகள் முன்னறிவிப்பின்றி மாற்றத்துக்குள்ளாகும்.

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

கம்பனி பதிவிலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2. தொலைபேசி: 011-4700600. தொலைநகல்: 011-4700677.
இணையத்தளம்: http://www.dpmco.com மின்னஞ்சல்: info@dpmco.com

பிராந்திய அலுவலகங்கள்: பத்தரமுல்லை, மடப்பாத்தை, நீர்கொழும்பு, யக்கலை, ம[illegible], நுவரெலியா, [illegible], அநுராதபுரம், [illegible], தம்புள்ளை, பதுளை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை, மொனறாகலை, திஸ்ஸமஹாராம, யாழ்ப்பாணம். விற்பனை நிலையம்: அம்பாந்தோட்டை, அம்பலாங்கொட, களுத்துறை, அவிசாவளை, குளியாபிட்டிய, எம்பிலிபிட்டிய, மினுவாங்கொட, இங்குராங்கொட, சிலாபம், மாளிகாவத்தை, தம்புத்தேகம, கேகாலை, மட்டக்களப்பு, தெ[illegible], வவுனியா, காலி.

ஈடிணையற்ற உத்தரவாதம்
2 வருடங்கள் அல்லது 30,000கி.மீ ஓட்டம்*
*எது முதலில் நிகழ்கிறதோ அது

(வி/3252)(2-6)

RAVI BARNES | NDN

## தமிழகத்தில் யாத்திரிகர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

மத ரீதியான வழிபாட்டுத் தலங்களை தரிசிக் சென்ற இலங்கையர்கள் மீது தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் மனவேதனைகளுக்குள்ளாக்கிய துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும். தமிழகத்தின் பண்பாடு, கலாசாரம், நாகரிகம் என்பன இவ்வாறான ஊறுவிளைவிக்கும் செயல்களாக தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல முழு இந்தியாவுக்குமே களங்கத்தை ஏற்படுத்தும் செயலாக அமைந்துவிடுகிறது.

அகில இலங்கை இந்து மாமன்றம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்துக்கும் மேலாக இலங்கையிலிருந்து தமிழகம் செல்லும் பொது மக்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சாதாரண பொதுமக்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் .

உல்லாசப்பயணிகள் இரு நாடுகளுக்கும் பயணம் செய்கின்றார்கள், இந்தநிலை நல்லுறவை வளர்க்க வேண்டுமே தவிர அதனைக் குலைக்க எவரும் முயலக் கூடாது என்பதை அழுத்திக் கூறவிரும்புகிறோம். இந்தச்சம்பவத்தினால் அகில இலங்கை இந்து மாமன்றம் கவலையும், வேதனையும் அடைகின்றது என்று அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ம)

## குடும்பநல உத்தியோகத்தர் பரீட்சை

குடும்ப சுகாதார உத்தியோகத்தர் தரம் 2 இற்கான திணைக்களப் பரீட்சைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவராணி அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் முதற்கட்டமாக எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை சிறுப்பிட்டி மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஆகிய பரீட்சை நிலையங்களிலும் , 18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருநெல்வேலி கிழக்கு மற்றும் கைதடி ஆகிய இடங்களிலும், 19 ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் மற்றும் உரும்பிராய் ஆகிய இடங்களிலும், 20 ஆம் திகதி குளமங்கால், அளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல் தலைவர்கள் திரைபோட்டு மறைத்துள்ள மக்கள் நலன்கள்

மூன்று மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெற்று நாளையுடன் ஒரு வாரம் முடிவுறுகிறது. சப்பிரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரங்கள் அரச தரப்பிடமே மீண்டும் சென்றிருக்கின்றன. ஆனால் கிழக்கு மாகாண சபையின் ஆட்சி யார் கையில் விழப்போகிறது என்பதற்கான அசுகை எதுவுமே தெரிவதாக இல்லை!

கிழக்கில் போட்டியிட்ட மூன்று தரப்புகளில், ஒன்றுக்கேனும் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய வாக்காளர் பலம் கிடைக்கவில்லை. அதனால் அங்கு போட்டியிட்டு வெற்றி ஈட்டிய மூன்று தரப்புகளில் இரண்டு கூட்டுச் சேரவேண்டிய கட்டாய தேவை தோன்றியுள்ளது. அவ்வாறு செய்ய முடியாமல் போயின், மூன்றில் ஒன்று, மற்ற இரண்டு தரப்புகளிலும் இருந்து வெற்றியீட்டிய உறுப்பினர்களை பிடுங்கி எடுக்க வேண்டிய தேவை உருவாகி வருகிறது.

தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட இரண்டாவது நாளிலேயே, இரண்டாவது இடத்தைப் பிடித்துக்கொண்ட தமிழரசுக் கட்சி, மூன்றாவது இடத்துக்கு வந்த முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைக் கோரியிருந்தது. கிழக்கு மாகாணத்தின், அதிகாரம் மிக்க முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸிடம் வழங்குவதற்கும் அது விருப்பம் தெரிவித்திருந்தது. அதன் பின்னர்-

விட்டேனோ பார் என்று கயிறிழுப்புப் போட்டிகளில் நடைபெறுவது போன்று, தமிழரசுக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸிடம் அவற்றின் ஆதரவைத் தனித்தனியாகக் கேட்டிருக்கிறது அரசாங்கத் தரப்பு.

நாட்டின் சிறுபான்மை இன மக்களுக்கு, தமிழ், முஸ்லிம்களுக்கு வழங்கவேண்டிய அரசியல் மற்றும் பலவகை உரிமைகளை தாராளமனதுடன் வழங்குவதற்கு விருப்பமின்றி, அவர்களை என்றென்றும் இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற வாய்ப்பாட்டை மாற்றுவதில் விருப்பமில்லாத அரசு -

கடந்த வாரத்தில் நடைபெற்ற மாகாணசபைகள் தேர்தலில், ஆட்சிகளை தனது அரசே அமைத்திருப்பதாகக் காட்ட வேண்டி, தமக்கே மக்கள் ஆதரவு உண்டு என்பதனை நிலைநிறுத்த தனது தலையால் மண்ணைக் கிண்டவும் அரசாங்கம் தயங்காது!

அத்தகைய வெளிப்பாடுகளில் பிந்திய ஒன்றே, தமிழர் தரப்புடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளை முறித்துவிட்டு, இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து வாய்திறக்காது காலத்தை வாங்கும் உத்தி.

அதனை மறைத்து விட்டு அல்லது மறந்தது போலக் காட்டிக் கொண்டு, கிழக்கில் தனது ஆட்சியை நிறுவ தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கையேந்தி நிற்கிறது. இதற்குப் பின்னால் பெரும் சூழ்ச்சித் திட்டத்தை அரசு கையில் வைத்திருக்கிறது என்பதனை எவரும் இலகுவில் ஊகிக்க இயலும்.

கிழக்கு மாகாண சபையில் தமிழர் தரப்பையும் சேர்த்துக் கொண்டு அரசை உருவாக்கினால், போர் நடைபெற்ற வேளையில் மனித உரிமைகள் மீறப்பட்டமை, போர்க் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித அவலத்துக்கு விதை தூவப்பட்டமை போன்ற சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளை இல்லையெனவும், அவை பொய்யானவை எனவும் ஆக்கி விடலாம் என்ற உள்ளார்ந்த திட்டத்துடனேயே கூட்டு அரசு உண்டாக்குவது போன்ற ஒரு மாயையை அரசு கட்டவிழ்த்து இருக்கிறது எனலாம்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் கிழக்கு மாகாணத்தில் அரசுக்குக் கிடைத்த வெற்றி, பெரு வெற்றி. கடந்த முப்பது வருடங்களாகக் குண்டு வீச்சுத் தாக்குதல்களாலும் ஏனைய பல இராணுவ நடவடிக்கைகளாலும் பல உயிர்களைப் பலியெடுத்த கிழக்கு மண்ணில் இன்று ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது; இதனை அனைத்துலகம் மிகக் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

மேலும் நாட்டு மக்களினதும் தமிழ் மக்களினதும் கருத்துக்கு மதிப்பளித்து, நல்லிணக்கத்தையும் இன ஒற்றுமையையும் உருவாக்குவதற்கு தமக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் ஆளும் கட்சியினர், அமைச்சர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கேட்டுள்ளனர்; வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, கிழக்கில் தான் பெற்ற ஐந்து ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தாரைவார்த்துக் கொடுத்து விட்டதாகவும், அதன் மூலம் தமிழீழம் உருவாகுவதற்கு அக்கட்சி முயல்கிறதா என்றும் மற்றொரு அமைச்சர் சுசில் பிறேமஜயந்த அரசியல் நஞ்சு கக்கியிருக்கிறார்.

தேர்தல் வெற்றிகளின் பலாபலன்களைத் தமதாக்கிக் கொள்வதற்காக, எதிரணியினரை வலுச் சண்டைக்கு இழுக்கும் பண்பற்ற போக்கு கீழைத் தேசங்களில் இப்போது பல்கிப் பெருகி வருகிறது. அத்தகைய ஒரு மட்டமான கருத்தையே அமைச்சர் பிறேமஜயந்தவும் வெளியிட்டுள்ளார் எனலாம்.

தமிழ் மக்கள் சார்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைக்கும் கோரிக்கைகளை எப்போதும் போலவே, மஞ்சள் கண்கொண்டு பார்ப்பதே அரசாங்கத் தரப்பினரின் வழமையாகி விட்டது. அந்தக் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தையும், தேவைகளின் அவசியத்தையும் பகுத்துப் பார்ப்பதற்கு அவர்கள் சிறிதும் விரும்புவதில்லை.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களிலும், ஏன் விவகாரங்களிலும் கூட ஒருமுறை கையில் தூக்கிய 'காட்போர்ட்' வாசகங்களையும் பேரணித் தலைப்புகளையுமே மீண்டும் மீண்டும் பலத்த குரலில் ஓதினால், பிரச்சினைகள் தீர்ந்து விட்டதாக நினைக்க வைக்கும் ஒருவகை ஒவ்வாத நோய் சிங்கள அரசியல்வாதிகளிடமும், ஏன் தலைவர்களிடமும் விரவிப் பரவியுள்ளது.

தங்கள் பக்கத்தைச் சாராத (தென்னிலங்கை) அரசியல் வாதிகளை தமிழீழத்துடனோ அல்லது விடுதலைப் புலிகளுடனோ சம்பந்தப்படுத்திப் பேசிவிட்டால், பாதிக்கப்படுவோர் அரசியல் சூன்யத்தை நோக்கி நகர வேண்டியதே என்ற வாய்ப்பாட்டை உச்சரிப்பது இப்போது தென்னிலங்கை அரசியல் வட்டகைகளில் தேவைப்படும் ஒரு பெரிய 'சாதனமாகி'யும் வருகிறது.

இந்த நிலைமை, சிங்கள சிங்கள மக்களின் நலன் நாடியதாக அன்றி அவர்களின் அரசியல் தலைவர்களின் சுய மற்றும் கட்சி நலன் சார்ந்ததாகவே எப்போதும் அமைகிறது. இலங்கையையும் இங்கு வாழும் மக்களையும் இரண்டாகக் கூறுபோட்டிருக்கும் 'அரசியல் கத்தி' என்றும் இதனைக் கொள்ளலாம்.

சிங்களப் பெருமக்கள் இதனைப் பகுத்து உணர அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்காமல் திரைபோட்டு வைத்திருப்பதும் இந்த நிலை நீண்டு செல்வதற்குப் பிரதான காரணம் யாராலும் தடுக்க இயலாது.

# நல்லாட்சி நடைபெறும் நாட்டில் தகவல் அமைச்சு தேவையில்லை

## அல்ஜசீரா முன்னாள் அதிபரின் கருத்து

கொழும்பு,செப்.13

ஒரு நாட்டில் நல்லாட்சி நடைபெறுமானால், அங்கே இரகசியங்கள் இல்லையென்றால் அந்த நாட்டில் தகவல் துறை அமைச்சு ஒன்று செயல்பட வேண்டிய அவசியம் இருக்காது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அல்ஜசீரா செய்தி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரும் புகழ் பெற்ற சர்வதேச ஊடகவியலாளருமான வாடாஹ் கான்பார், சிறிலங்கா பிரெஸ் இன்ஸ்ரிரியூட் மற்றும் தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மார்க்கார் நிலையம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த காலை உணவுடன் கூடிய சந்திப்பு நிகழ்வொன்றில் அவர் கருத்துத் தெரிவித்தார்.

ஓர் அரசு மக்களிடமிருந்து உண்மைகளை மறைக்க முற்படுமானால் அங்கே ஆட்சிமுறையானது நல்லாட்சிக்கு எதிரான நிலைக்கு மேலும் மேலும் தள்ளப்படுவதாக இருக்கும். ஊடகங்கள் அரசினால் கட்டுப்படுத்தப்படலாகாது. உண்மையை வெளியிட அது அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறான ஒரு நிலைமை இருக்குமானால் அங்கே தகவல் அமைச்சு ஒன்று செயற்பட வேண்டிய அவசியம் இருக்காது என்றார் வாடாஹ்கான்பர். அவர் மேலும் பேசுகையில் மக்களின் அபிலாஷைகளை, அவர்களின் நம்பிக்கைகளை ஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதன் மீது உண்மைகளை அறிக்கையிட வேண்டும். எதுவானாலும் ஊடகங்கள் விதிமுறைகளையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பதோடு சரியான செய்திகளை ஒரு தடவைக்கு மேல் சரிபார்த்துக் கொண்டு வெளியிட வேண்டும் -என்றார்.

ஊடகவியலாளர்கள் அளவுக்கு மேலாக அபாயங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடக் கூடாது என்றார். மேலும் முன்னாள் லிபிய தலைவர் கேணல் கடாபி, எகிப்திய தலைவர் ஹொஸ்னி முபாராக் முதலியவர்களை மக்கள் தான் பதவிகளில் இருந்து இறங்கியவர்கள். அவர்களை ஊடகத்தினர் வீரர்களாக எடுத்துக் காட்டினார்கள். மேற்கு நாடுகளின் தூண்டுதலின் பேரிலேயே இந்தப் புரட்சிகள் நடந்தன என்று கூறப்பட்டிருந்தால் அவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கும். உண்மையில் மேற்கு நாடுகளுக்கு இதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றார்.

கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் கான்பார் அல்ஜசீரா இலங்கை அரசினால் கண்டிக்கப்பட்டதா என்பது பற்றி தமக்கு தெரியாது என்று கூறிய அவர் அல்ஜசீரா கடைப்பிடிக்கும் உயர்ந்த விழுமியங்களை கவனத்தில் கொள்ளும் போது அரசுகள் அல்ஜசீராவை விமர்சிப்பது ஒன்றும் வழக்கத்துக்கு மாறான சம்பவமன்று என்றார். (ப)

## கணித பாட மதிப்பீடு

தென்மராட்சி,செப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு இல.7, தரம் 11 மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்கு இல.11 ஆகியவை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த மதிப்பீடுகளுக்கான வினாத் தாள்களை இன்று பெற்றுக் கொள்ளலாமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-9)

## திருத்த வேலைக்கு வீதி மூடல்

வீதி அகலிப்பு திருத்த வேலைக்காக இராசவீதியில் கோண்டாவில்-இருபாலை வீதிக்கும், மானிப்பாய்-கைதடி வீதிக்கும் இடைப்பட்ட பகுதியான ஆலடியில் இருந்து கிருஷ்ணன் கோயில் வரை நாளை தொடக்கம் 26 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் மாற்று வழிகளாக சகலரும் மானிப்பாய் -கைதடி வீதி, பலாலி வீதி, கோண்டாவில்- இருபாலை வீதி, மற்றும் பருத்தித்துறை வீதிகளை போக்குவரத்திற்காகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

## வறட்சியால் புங்குடுதீவில் நேற்றுவரை 21 மாடுகள் இறப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

புங்குடுதீவில் கடும் வறட்சியால் நேற்றுவரை 21 மாடுகள் இறந்துள்ளன.

இவ்வாறு இறந்த மாடுகளைப் புதைக்கும் நடவடிக்கையில் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் வேலணைப் பிரதேச சபை ஈடுபட்டு வருகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பமான காலநிலையே இதற்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. (ம-41)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,செப்.13

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மிக சஞ்சிகையின் ஆவணி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை அதிபர் இரா.ஸ்ரீநடராசாவும், மதிப்பீட்டுரையை பிரபல மூத்த எழுத்தாளர் தெணியானும் நிகழ்த்துவா. (ம-8)

# நன்னீர் மீன் உற்பத்திக்கு ரூ.12.5 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.13

வடமாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் வடமாகாணத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு 12.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடமாகாண விவசாய காணி, கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கடற்றொழில் அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டின் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வடமாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து தேசிய மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக தேசிய மாவட்ட நீரியல் விரிவாக்கல் உத்தியோகத்தர்களால் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. வவுனியா மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்புக் குளத்தை புதுப்பிப்பதற்காக 2 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் குளத்தில் புதிதாக சிறிய வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 6 மில்லியன் ரூபாவும், மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு 50 வீதம் மானிய அடிப்படையில் மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்கு 3 மில்லியன் ரூபாவும், யாழ்.மாவட்டம், முல்லைத்தீவு, மன்னார், ஆகியமாவட்டங்களில் தேவையற்ற குளங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கு ஒரு மில்லியன் ரூபாவும், உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு 0.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.-எனத் தெரிவித்தார். (ம-13)

# சாதனையாளர்களுக்கு பாராட்டு விழா இன்று

தென்மராட்சி,செப்.13

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அனுசரணையுடன் தேசிய நிலை விளையாட்டுக்களிலும், மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளிலும் தெரிவாகி பங்குபற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அணிகள் மற்றும் விளையாட்டு வீர, வீராங்கனைகள் ஆகியோருக்கான பாராட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரெட்லியும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தலைவர் வ.ஸ்ரீபிரகாசும் கலந்து கொள்வர்.

வலய, மாவட்ட, மாகாண நிலைப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்று, தேசிய நிலையில் போட்டியிடத் தகுதியான எல்லே 19 வயது கீழ், ஆண்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி (20 பேர்), கபடி 15 வயது கீழ் பெண்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (12பேர்), கராத்தே (05) (15வயது) பெண்கள் கைதடி நவீல்ட் பாட சாலை(05 பேர்) ஆகியோரும்,

மெய்வல்லுநர் போட்டிகளில், 400 மீற்றர், முப்பாய்ச்சல் மற்றும் நீளம்பாய்தல் போட்டியில் சிறந்த சாதனையாளராகத் தெரிவு செய்யப்பட்ட மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய ம.வி.மாணவன் ம.ரஜிதரன் (21 வயது கீழ்), 400 மீற்றர் (17 வயது கீழ்) ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவன் என்.மிதுலன்,

100 மீற்றர் தடைதாண்டல் (19 வயது கீழ்) பெண்கள் பிரிவில் சாதனை புரிந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி கே.கலைமகள்,

800 மீற்றர் (17 வயது கீழ்) பெண்கள் பிரிவில் உசன் இராமநாதன் ம.வி.மாணவி ஆர்.இராஜ லட்சுமி ஆகியோரும் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் காணியில் தங்கியுள்ளோருக்கு மாற்றுக் காணி வழங்கி அப்புறப்படுத்துக

## அபிவிருத்திச் சங்கத்தினர் கடிதம்

அக்கராயன்,செப்.13


பாடசாலைக் காணியில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு மாற்றுக் காணியை வழங்கி அங்கிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலய கட்டடங்கள் அமையவுள்ள காணியில் ஐந்து குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பங்களுக்கு மாற்றுக் காணியை வழங்கிப் பாடசாலைக் காணியிலிருந்து அவர்களை வெளியேற்றி உதவுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கரைச்சிப் பிரதேச செயலருக்குக் கையளித்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 5 லட்சம் ரூபா நிதியுதவியுடன் பாடசாலைக்குரிய காணி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வேலி அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பாடசாலைக் காணியில் வசிக்கும் குடும்பங்கள் உதவி அமைப்பு ஒன்றினால் வழங்கப்படும் கால்நடைகளை வளர்க்கவெனக் கொட்டகைகளை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலைக் காணியில் புதிய கட்டடங்கள், சிறுவர் பூங்கா, விடுதிகள் அமையவுள்ள நிலையில் இந்த ஐந்து குடும்பங்களுக்கும் வேறு இடத்தில் காணிகளை வழங்கிப் பாடசாலைக் காணியிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)



யோகபுரம் மகாவித்தியாலயத்தில் சித்திரப்பாட ஆசிரியரால் உருவாக்கப்பட்ட சித்திரபாட வகுப்பறை இவ்வாறு காட்சியளிக்கின்றது. (க-18)

## சிற்றாலயம் திறந்து வைப்பு



மன்னார்,செப்.13

மன்னார் தோட்டவெளியில் சிற்றாலயமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள திருப்புமுனை புதுவாழ்வகத்திலேயே இந்தச் சிற்றாலயம் அமைந்துள்ளது.

இந்த வாழ்வகம் மதுவுக்கும், போதைப் பொருள்களுக்கும் அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகின்றது. மேலும் இத்தகைய தீய பழக்க வழக்கங்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் ஒரு மையமாகவும் இது விளங்குகின்றது.

இந்தச் சிற்றாலயத்தின் திறப்பு விழா வைபவம் திருப்புமுனை புதுவாழ்வக இயக்குநர் அருட் தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இதனை அருட்தந்தை போல் நட்சத்திரம் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

# அக்கராயன் குளத்திலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம்

## நிலத்தடி நீர் தட்டுப்பாட்டால் நடவடிக்கை

அக்கராயன்,செப்.13

அக்கராயனில் 600 குடும்பங்களும், பாடசாலைகளும் குடிதண்ணீரைப் பெறும் வகையிலான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் பாடசாலையின் கட்டடங்கள் அமையவுள்ள காணியில் திறந்த கிணறு ஒன்றை அமைத்துத் தருமாறு கோரி வருகின்றனர்.

ஆனால் அக்கராயன் மகாவித்தியாலயம், ஆரம்ப வித்தியாலயம் என்பன அமைந்துள்ள பகுதிகளில் திறந்த கிணறுகளை அமைப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது என்று கூறப்படுகிறது. கடந்த காலங்களில் இங்கு அமைக்கப்பட்ட கிணறுகளில் நீர் இல்லாத நிலை காணப்படுவதையும் துறைசார் அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**அக்கராயன் குளத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கக்கூடிய செயல் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தினுள் இந்தச் செயற் திட்டம் முழுமை பெற்று விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

இதனால் இவ்விரு பாடசாலைகளுக்கும், மற்றும் பாடசாலைகளின் சூழலில் வாழும் 600 குடும்பங்களுக்கும் அக்கராயன் குளத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்கக் கூடிய செயல் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தினுள் இந்தச் செயற் திட்டம் முழுமை பெற்று விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கான கட்டடங்களை அமைப்பதற்கான முயற்சிகளும் விரைவாக முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இவை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்டச் செயலக உயரதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-18)

# மாட்டிறைச்சியை அதிக விலைக்கு விற்போர் மீது சட்ட நடவடிக்கை

## மன்னார் நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

மன்னார்,செப்.13

மன்னாரில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலைக்கு மாட்டிறைச்சியை விற்பனை செய்யும் இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிகரித்த விலையில் இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் மன்னார் நகரசபையிடம் முறையிட்டுள்ளனர்.

**தற்போது மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் ஆறு மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.**

தற்போது மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் ஆறு மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மன்னார் நகரசபையால் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலின் பிரகாரம் ஒரு கிலோ தனி இறைச்சி 400 ரூபாவாகவும், எலும்புடன் கூடிய இறைச்சி 360 ரூபாவாகவும், ஈரல் 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால் இவை அதிகரித்த விலையில் விற்கப்படுவதாக நுகர்வோர் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் நகரசபைத் தலைவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது குறித்த இறைச்சி விற்பனையாளர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவித்தார். (க-12)

# டைனமோ இல்லாத சைக்கிள்கள் மன்னார் பொலிசாரால் பறிமுதல்

மன்னார்,செப்.13

மன்னாரில் டைனமோ இல்லாது பயணித்த சைக்கிள்களை நேற்றுமுன்தினமிரவு மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மன்னார் சதொச விற்பனை நிலையத்துக்கு முன்பாக நின்ற பொலிஸாரே டைனமோ இல்லாது பயணித்த சைக்கிள்களைப் பறிமுதல் செய்தனர்.



இவ்வாறு சுமார் 50 சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட சைக்கிள்களுக்கு புதிய டைனமோவை உடனடியாகக் கொள்வனவு செய்து பொருத்தியவர்களின் சைக்கிள்கள் பொலிஸாரால் மீண்டும் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை பொலிஸார் தடுத்தபோது தரிக்காது [illegible] பொலிஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டார். பின்னர் இந்த இளைஞரைக் குறித்த இடத்துக்குக் கொண்டு வந்த பொலிஸார் அங்கு கூடி நின்ற மக்களின் முன்னிலையில் அவரைக் கடுமையாகத் தாக்கியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து சைக்கிள்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் [illegible]தெனவும் புதிய டைனமோவை வாங்கிக் கொண்டு வந்து சைக்கிள்களைப் பெற்றுச் செல்லுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னாரில் வாகனநெரிசல் அதிகரித்து காணப்படுகின்றது. இந்த நிலையில் வெளிச்சமின்றி சைக்கிள்களில் பயணிப்பவர்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதனைத் தடுப்பதற்காகவே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-12)

## வினாடி வினாப் போட்டிகள்

மாங்குளம்,செப்.13

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இதில் எதிர்வரும் 15 ஆம் திகதி இங்குள்ள பாடசாலைகளில் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றக் கூடிய வகையில் போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்துவதற்கு உதவுமாறும் அவர் பாடசாலை அதிபர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டமட்டப் போட்டிகள் மல்லாவி மத்திய கல்லூரி, பாலிநகர் மகாவித்தியாலயம், மாங்குளம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய மேற்பார்வையின்றி தொடரும் நிர்மாணப் பணிகள்

## தரமற்ற கட்டடப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மக்கள் முறைப்பாடு

கொடிகாமம்,செப்.13

அரச நிதியில் மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகளில் தரமற்ற கட்டடப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாததால் உடனடியாக அந்த முறைப்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக பிரதேச செயலகம் தெரிவித்தது. யாழ்.செயலகம்தான் இதனை மேற்பார்வை செய்யும் மனித வலுவைக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்த மக்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

அரச நிதியில் மேற்கொள்ளப்படும் கட்டடப் பணிகள் உரியமுறையில் மேற்பார்வை செய்யப்படுவதில்லையா?

கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு அருகில் கலாசார மண்டபம் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டடப் பணிக்கென பறிக்கப்பட்டுள்ள மணல் தரமற்ற நிலையில் உள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்த முடியாத தரமற்ற மணல் கலாசார மண்டப கட்டடப் பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை தொழில்சார் அலுவலர்கள் எவரும் இங்கு வந்து பார்வையிடவில்லை.

அலுவலர்களின் மேற்பார்வையின்றி கட்டட வேலைகள் இடம்பெறுகின்றன.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சீர்கேட்டுடன் இயங்கிய அரைக்கும் ஆலையை மூடுமாறு அறிவுறுத்து

நவாலி,செப்.13

சண்டிலிப்பாய்ப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த அரைக்கும் ஆலையை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அரைக்கும் ஆலை அமைந்துள்ள சூழலில் டெங்கு பெருகுவதற்கு ஏதுவான நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குப்பை கூளங்களும் தேக்கிவைக் கப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-100)

## கொடிகாமம் கொல்களத்தில் கலாசார சீரழிவுகள்

தென்மராட்சி,செப்.13

சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம் கொல்களம் கலாசார சீரழிவுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கொல்களக் கதவுக்குப் போடப்படும் பூட்டுக்கள் உடைக்கப்படுவதுடன், அங்கு கலாசார சீரழிவு ஏற்படும் நிலையிலான பொருள்களும், பெருமளவு வெற்று மதுபானப் போத்தல்களும் காணப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

காலையில் கால்நடைகளை வெட்டக் கொண்டு செல்லும் போது, இவற்றினை துப்பரவு செய்த பின்னரே தமது பணிகளைத் தொடர்கின்றனர்.

பின்னர் மறு நாள் காலையில் வந்து பார்க்கும் போதும் சாராயம் மற்றும் பியர் போத்தல்கள் பெருமளவில் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் இ.துரைராஜாவிடம் கேட்டபோது:-

ஒதுக்குப் புறமான இடத்தில் இந்தக் கொல்களம் உள்ள நிலையில் இது குறித்து நடவடிக்கை எடுப்பது பெரும் சிரமமாகவே உள்ளது. உடைக்கப்படும் பூட்டுக்கு பதில் புதிய பூட்டு போடப்படுகின்ற போதிலும் மீண்டும் அவை உடைக்கப்படுகின்றன.

இந்த நிலையில் காவலாளி ஒருவரை நியமிப்பதற்கே நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று கூறினார். (ம-9)

## நெடுந்தீவில் இருபஸ்களும் ஒரே சமயத்தில் பழுதடைந்தன

யாழ்ப்பாணம்,செப்.13

நெடுந்தீவு உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் உள்ள இரண்டு இ.போ.ச.பஸ்களும் ஒரே சமயத்தில் பழுதடைந்ததால், பொதுமக்கள் குறிப்பாக மேற்குப் பகுதியில் இருந்து வரும் நோயாளர்கள், படகுப் பயணிகள், மாணவர்கள் உரிய இடங்களுக்குக் குறித்த நேரத்தில் செல்லமுடியாது உள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாக பஸ்கள் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன.

எனினும் திருத்த வேலைகள் இதுவரை இடம்பெறவில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர். (ம-7)

## இருபாலைப் பிரதேசத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,செப்.13

வலி.கிழக்கு பிரதேச சபை இருபாலைப் பகுதிக்குக் குழாய் மூலம் குடிதண் ணீர் விநியோகத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

கோப்பாய் கிருஷ்ணர் கோயில் பகுதியில் இதற்கென நன்னீர் கிணறு ஒன்றை அமைத்து அந்தக் கிணற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நன்னீர் கிணற்றில் இருந்து இராச வீதியூடாக நிலத்தடிக் குழாய்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வரை பொருத்தப்படும். கலாசாலைக்கு அருகில் பெரிய நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு அதற்கு நீர் ஏற்றப்படும். பின்னர் இந்த நீர்த்தாங்கியில் இருந்து கோப்பாய் மற்றும் இருபாலை பகுதிகளுக்கு குழாய் மூலமான குடிதண்ணீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தில் இருந்து நீரைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மக்களுக்கு வீடுகளில் நீர் பெறும் குழாய் மற்றும் மீற்றர் வசதி என்பனவும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருபாலைப் பிரதேச மக்கள் அண்மைக் காலமாக தமது குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். தற்போது அந்தப் பகுதி மக்களுக்கு பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (த-17)

## யாழ். பிரதேச செயலர் பிரிவில் 4,325 குடும்பங்கள் குடியமர்வு

யாழ்ப்பாணம்,செப்.13

போர் காரணமாக இடம் பெயர்ந்து யாழ்.பிரதேச செயலர் பிரிவில் 15 ஆயிரத்து 489 உறுப்பினர்களைக் கொண்ட 4ஆயிரத்து 325 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

வன்னியில் இருந்து ஆயிரத்து 142 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 92 அங்கத்தவர்களும் உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்த 990 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 591 உறுப் பினர்களும் குடியமர்ந்துள்ளனர்.

ஆயிரத்து 993 முஸ்லிம் குடும்பங்களின் 8 ஆயிரத்து 255 உறுப்பினர்களும் இந்தியாவில் இருந்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 551 உறுப்பினர்களும் குடியமர்ந்துள்ளனர் என்று கூறுப்பட்டது. (ம-7)

## வலிப்பு நோய் விழிப்புணர்வு நடைபயணம் யாழ்.நகரில்




யாழ்ப்பாணம்,செப்.13

வலிப்பு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைப்பயணம் நேற்று புதன்கிழமை யாழ்.நகரில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் முதன் முறையாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலிப்பு சம்பந்தமான மூடநம்பிக்கையை களைதல், அதனைக் கட்டுப்படுத்தல் போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து காலை 7.30 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்.பண்ணை வீதி, யாழ். மத்திய கல்லூரி வீதியூடாக யாழ். பொது நூலகத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் வலிப்பு நோய் தொடர்பான பதாகைகள் எடுத்து வரப்பட்டன.

ஊர்வலத்தில் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், கல்வி அமைச்சின் மாகாண பிரதி கல்விச் செயலாளர், விக்னேஸ்வரன், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிய சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை நரம்பியல் சிகிச்சைப் பிரிவு இதனை ஏற்பாடு செய்திருந்தது. (ம-7-17-135)




புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குகிறார். (ம-11)

## சந்நிதியில் இ.போ.சவுக்கு 17 லட்சம் ரூபா வருமானம்

வடமராட்சி,செப்.13

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த சப்பர, தேர், தீர்த்த உற்சவங்களுக்குப் பருத்தித்துறை இ.போ.ச டிப்போ விசேட சேவையாற்றியதன் மூலம் 17 லட்சத்து 53 ஆயிரத்து 633 ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

இந்த வருமானத்தில் சப்பரத் திருவிழா அன்று 4 லட்சத்து 83 ஆயிரத்து 461 ரூபா 50 சதமும், தேர்த் திருவிழா அன்று 6 லட்சத்து 35 ஆயிரத்து 332 ரூபா 50 சதமும், தீர்த்தத் திருவிழா அன்று 6 லட்சத்து 34 ஆயிரத்து 839 ரூபாவும் கிடைத்துள்ளது. (8)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேருக்கு ரூ.4 லட்சம் அபராதம்

வடமராட்சி,செப்.13

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்ற 10 பேருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதி மன்றத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நீதி மன்ற அபராதமாகவும், 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கான அபராதமாகவும் விதிக்கப் பட்டது.

வியாபாரிமூலைப் பகுதியையும், அதனை அண்டிய பகுதியையும் பருத்தித்துறைப் பொலிஸாரும், இலங்கை மின்சாரசபை உத்தி யோகத்தர்களும் சுற்றி வளைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது சட்டவிரோதமாக, மின்சாரம் பெற்ற 10 பேர் சிக்கிக் கொண்டனர்.

இவர்கள் அனைவரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் எதிரில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை நீதிவான் விசாரணை செய்த போது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து 10 பேரில் 7 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், 3 பேருக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் மொத்தமாக ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா நீதிமன்ற அபராதத் தொகையாகவும், 7 ஆயிரத்து 932 ரூபா தொடக்கம் 41 ஆயிரத்து 442 ரூபா வரை 10 பேருக்கு இரண்டு லட்சத்து 70 ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கான அபராத தொகையாகவும் செலுத்துமாறு நீதிவான் உத்தர விட்டார். (ம-3)

## வானில் வந்தோரால் தாக்கப்பட்ட குடும்பஸ்தர்

வடமராட்சி,செப்.13

நெல்லியடி வதிரி வீதியில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் மீது வானில் வந்தோர் கொட்டனால் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த நிலையில் கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த செல்வச்சந்நிதி ஜெகசுதன் (வயது 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

திங் கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாய மடைந்தவரை வீதியால் சென்றோர் வைத்தியசாலையில் சேர்த்தனர். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 ரூபாவுக்காக துண்டிக்கப்பட்ட ஜார்கண்ட் கிராமவாசியின் கை



இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் தனக்கு வர வேண்டிய ரூ.200ஐ திருப்பி கேட்ட கிராமவாசி ஒருவரது கை துண்டிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜார்கண்ட் மாநிலம் கர்வா மாவட்டத்தில் மஞ்சியாவோன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அலியார் என்ற பெயருடைய இவர், மதுபான உற்பத்தி தொழிற்சாலைக்கு அயலிலுள்ள காடுகளில் இருந்து விறகு கொண்டு வந்து கொடுக்கும் தொழிலைச் செய்து வந்துள்ளார்.

அவர் ஒரு தடவை கொடுத்த விறகுக்கு தொழிற்சாலை நடத்துபவர்கள் பணம் கொடுக்கவில்லை என்றும் அந்தப் பணத்தை கேட்டபோது அவர் தாக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கடுமையான ரத்தப் போக்குடன் மாநிலத் தலைநகர் ராஞ்சியில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அலியார் தற்போது அபாய கட்டத்தை தாண்டி விட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர்களைத் பொலிஸார்தேடிவருகின்றனர்.

# கூடங்குளம் எதிர்ப்பாளர்களுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்

## கருணாநிதி வலியுறுத்து



கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்பாளர்களுடன் மத்திய அரசும், மாநில அரசும் பேச்சு நடத்த வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

மின்நிலையத்தின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கூடங்குளத்தில் நாளுக்கு நாள் நிலைமை மோசமடைந்து வருவதாகவும், பொலிஸ் மூலம் போராட்டத்தை அடக்க முயல்வது தும்பைவிட்டுவிட்டுவாலைப் பிடிப்பதாகும். எப்படியும் பொலிஸாரை மட்டுமே நம்பி ஆட்சி செய்த எந்த ஆட்சியும் நிலைத்ததில்லை.

ஆரம்பத்தில் அணு உலை எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து, அவர்களை உசுப்பிவிட்டு விட்டதே மாநில அரசுதானே.

அப்போது போராட்டக்காரர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா பின்னர் போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேச மறுத்தது - மன்னிக்க முடியாத - முன் யோசனையற்ற தவறு.

அணு உலை பிரச்சினையில், முதலில் மத்திய அரசுக்கு எதிராக மாநில அரசு இருப்பதைப்போலக் காட்டிக் கொள்வதற்காக, அணு உலை எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டப்பட்டது.

போராட்டம் நடத்துகின்ற மக்களுக்கு அறிவுரை கூறி உண்மையை உணரச் செய்கிறவரை, அணு உலை பணிகளை ஆரம்பிக்கக் கூடாது என்று பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதினார்.

இந்தச் செயல்; எதிர்ப்பாளர்களுக்கெல்லாம் தங்கள் செயற்பாடு நியாயம் தான் என்று ஊக்கப்படுத்தி விட்டது.

ஆரம்பத்திலேயே அணு உலை எதிர்ப்பாளர் களிடம், அந்த ஆலையினால் ஆபத்து இல்லை, ஆபத்து வராமல் மத்திய, மாநில அரசுகள் பார்த்துக் கொள்ளும், ஆபத்துக்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்றெல்லாம் ஆரம்பத்திலேயே போராட்டக் குழுவினரிடம் விளக்கியிருந்தால், இந்தளவுக்கு நிலைமை முற்றியிருக்காது.

எப்படியோ இதுவரை நடந்தது நடந்ததாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்பதைப்போல அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில்தான் கவனம் செலுத்த வேண்டும்-என்று அதிலுள்ளது. (வ)

# இரட்டை இலை முகப்புடன் எம்.ஜி.ஆர். சமாதி புதுப்பிப்பு

சென்னை, செப்.13

மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் சமாதி இரட்டை இலை முகப்புடன் புதுப்பிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அ.தி.மு.கவின் ஆணி வேராக திகழ்ந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரின் சமாதி சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ளது.

இங்கு தினமும் பல்லாயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள் மற்றும் பொது மக்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் எம்.ஜி.ஆர் மற்றும் அண்ணா சமாதிகள் புதுப் பிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் அறிவித்தார்.

அதன்படி முதற்கட்டமாக எம்.ஜி.ஆர் சமாதியில் புதுப்பித்தல் பணிகள் ஆரம்பமாகின. இந்தநிலையில் எம்.ஜி.ஆர் சமாதியின் முகப்பில் பறக்கும் குதிரை போன்ற வடிவுடன் பிரமாண்டமான இரட்டை இலை சின்னம் அமைக்கப்படுகிறது.

முகப்பின் இரு பக்கமும் 15.9 மீற்றர் உயரத்தில் தூண்கள் அமைக்கப்படுகின்றன. இந்த தூண்களின் நடுவில் 12 அடி உயரத்தில் வெண்கலத்தில் ஆன பறக்கும் குதிரை அமைக்கப்படுகிறது.

இந்த குதிரை அமைக்கப்படும் பீடத்தின் உயரம் 4.5 மீற்றராகும். அதன் பின்னணியில் 10.2 மீற்றர் உயரத் தில் இரட்டை இலை சின்னம் அமைக்கப்படுகிறது.

இந்த இரட்டை இலை சின்னம், தூண்களை தொடும் உயரத்துக்கு அமைகிறது. மேலும் இந்த சின்னத்தை தாங்கிப்பிடிக்கும் வகையில் 6 மீற்றர் உயரமுள்ள தூண் அமைக்கப்படுகிறது. (வ)

# திட்டமிட்டபடி போராட்டம்

## வைகோ அறிவிப்பு



சென்னை, செப்.13

சாஞ்சியில் புத்த மத கல்விமைய விழாவுக்கு வருகை தரும் ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டம் தடைகளை மீறி நடைபெறும் என்று ம.தி.மு.க. செயலர் வைகோ தெரிவித்தார்.

மத்திய பிரதேசத்தில் உள்ள சாஞ்சியில் புத்தமத கல்வி மையத்தின் அடிகல் நடும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்தியப் பிரதேசம் சாஞ்சியில் திட்டமிட்டபடி இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படும் என்று வைகோ அறிவித்துள்ளார். (வ)

# உதயகுமாரின் கைதைத் தடுக்க கூத்தங்குழி கிராமத்தைச் சூழ வெடிகுண்டுகள் புதைப்பு



ராதாபுரம், செப்.13

கூத்தங்குழி கிராமத்தில் இருக்கும் போராட்டக்குழு தலைவர் உதயகுமாரை பொலிஸார் கைது செய்வதைத் தடுக்க மேற்படி கிராமத்தைச் சூழ வெடி குண்டுகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு கூடங்குளம் காவல் நிலையத்தில் சரணடைவதாக இருந்த கூடங்குளம் போராட்டக் குழு தலைவர் உதய குமார், புஷ்பராயன் ஆகி யோரை 50 இளைஞர்கள் குண்டுக் கட்டாக தூக்கி படகில் வைத்து கடலுக்குள் சென்றனர். தற்போது உதய குமார் கூத்தங்குழி மீனவ கிராமத்தில் உள்ள ரகசிய இடத்தில் பாதுகாப்பாகதங்க வைக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் கூத்தங்குழி கிராமத்தை முற்றுகையிட்டுள்ளனர். அவர்கள் ஊருக்குள் புகுந்து உதய குமாரை கைது செய்வதைத் தடுக்க அந்த கிராம மக்கள் ஊரைச் சுற்றி வெடிகுண்டுகளைப் பதுக்கி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தவிர மணலில் வலைகளை புதைத்து வைத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால் பொலிஸார் கிராமத்திற்குள் நுழைவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவர்கள் கிராம மக்களின் எதிர்ப்பை மீறி ஊருக்குள் புகுந்தால் விபரீதம் ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் உதயகுமாரைக் கைது செய்வது குறித்து பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.(வ)

# கூடங்குளம் விவகாரம்: உச்ச நீதிமன்றத்தில் வழக்கு

கூடங்குளம் அணு உலையில், எரிபொருள் நிரப்ப அனுமதிக்கக் கூடாது என்று கோரி, உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கூடங்குளம் அணு உலையில் எரிபொருள் நிரப்பக்கூடாது என வலியுறுத்தி கடந்த இரண்டு தினங் களாக அங்கு போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில் பூவுலகின் நண்பர்கள் என்ற அமைப்பின் சார்பில் பொறியியலாளர் சுந்தர்ராஜன், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு மனு தாக்கல் செய்துள்ளார்.

இதில், அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் பரிந்துரைத்த 17 பரிந்துரைகளில், 6 மட்டுமே கூடங்குளத்தில் செயற்படுத்தப்பட்டிருப்பதாகவும், எரிபொருள் நிரப்ப உயர் நீதிமன்றம் அளித்த அனுமதிக்கு தடை விதிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், மனு தாரர் சார்பாக அன்னா குழுவில் இருந்த பிரபல சட்டத்தரணி பிரசாந்த் பூஷன் முன்னிலையானார்.

இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. (வ)

# தூக்குத் தண்டனை நகலை மகிழ்ச்சியாக ஏற்றார் கசாப்



மரண தண்டனை விதிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் நகலை, அஜ்மல் கசாப் சிரித்துக் கொண்டே வாங்கியதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பை தாக்குதல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அஜ்மல் கசாப்புக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை அண்மையில் உறுதி செய்யப்பட்டது.

இருப்பினும் இந்தத் தண்டனை உறுதி செய்யப் பட்டது கசாப்புக்குத் தெரியாமலே இருந்து வந்தது.

இந்தநிலையில் உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு நகலைத் தயாரித்து ஒன்றை கசாப்புக்கு அனுப்பியது.

அதை சிறை அதிகாரிகள் அவனிடம் கொடுக்க, சிரித்துக்கொண்டே அதை வாங்கி கையெழுத்திட்டுள்ளான்.

இந்த நகல் உச்ச நீதி மன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அஜ்மல் கசாப்பின் பாதுகாப்பு கருதி முட்டை வடிவிலான தனி சிறை அவனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.(வ)



குஜராத் மாநிலம், அகமதாபாத்தில், முதல்வர் நரேந்திர மோடி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

# கார்ட்டூனிஸ்ட் திரிவேதி விடுதலை

மத்திய அரசின் ஆட்சிக்கு எதிராகக் கேலிச் சித்திரம் வரைந்ததாகக் கைது செய்யப்பட்ட கார்ட்டூனிஸ்ட் அசீம் திரிவேதி விடுதலை செய்யப்பட்டார்.

சிறையிலடைக்கப்பட்ட கார்ட்டூ னிஸ்ட் அசீம் திரிவேதிக்காக மும்பையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் தனிப்பட்ட முறையில் பிணைக்கு விண்ணப்பித்தார். இதனை ஏற்றுக் கொண்ட மும்பை உயர்நீதி மன்றம், 5,000 ரூபா பிணையத் தொகையுடன் பிணை வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்யத் தாத்தா காலமானார்



மாஸ்கோ, செப். 13

ரஷ்யாவின் மிக வயதான 122 வயதுடைய வயோதிபர் காலமானார்.

ரஷ்யாவின், டாகெஸ்தான் பகுதியைச் சேர்ந்தவர், முகமது லபசானோவ். படிப்பறிவு இல்லாத லபசானோவ், மரப்பட்டறையிலும், விவசாயத் தொழிலையும் செய்தவர். கடந்த மே மாதம் இவர் தனது, 122 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இருப்பினும் இவர் பிறந்த ஆண்டுக்கான ஆவணங்கள் எதுவும் இல்லை.

இரண்டாம் உலகப் போரின் போது, ஸ்டாலின் ஆட்சியில், டாகெஸ்தான் பகுதியில் இருந்தவர்கள் மத்திய ஆசிய பகுதிக்கு, விரட்டியடிக்கப்பட்டனர். பின்னர், 50 ஆம் ஆண்டுகளில் இவர்கள் மீண்டும் தாயகம் திரும்பினர். பொதுவாக காகசஸ் மலைப் பகுதியையொட்டி வசிப்பவர்கள் நீண்ட நாள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. இந்த வகையில் மீண்டும் டாகெஸ்தான் திரும்பிய, லபசானோவ், 122 வயது வரை வாழ்ந்துள்ளார்.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை இரவு இவர் இறந்ததாக இவரது உறவினர்கள் தெரிவித்தனர். அமெரிக்காவைச் சேர்ந்த பெசிகூப்பர் என்பவருக்கு தற்போது, 116 வயதாகிறது. இவர் தான் உலகின் அதிக வயதான நபர் என, கின்னஸ் சாதனை புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# லிபியாவுக்கான அமெ.தூதர் சாவு

## செவ்வாய் இரவு ரொக்கெட் தாக்குதலில் சம்பவம்

பெங்சாய், செப்.13

லிபியாவுக்கான அமெரிக்கத் தூதருடன் மேலும் தூதரக அலுவலர்கள் மூவரும் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற ரொக்கெட் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

லிபியாவின் பெங்காசி நகரில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்தில் நேற்று இரவு துப்பாக்கி ஏந்திய ஒரு கும்பல் திடீரெனப் புகுந்தது தாக்குதல் நடத்தியது. துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், ரொக்கெட் குண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் தூரதகம் பற்றி எரிந்தது.

இந்த திடீர் தாக்குதலில் அமெரிக்கத் தூதர் ஸ்டீவன் மற்றும் 3 தூதரக ஊழியர்கள் உயிரிழந்தனர். தூதரக அலுவலகம் முற்றிலும் எரிந்து நாசமாகியது. முக்கிய ஆவணங்கள் தீயில் கருகின.

மேற்படி தூதரகத்தின் 3 மாடிக் கட்டடப் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டட ஒப்பந்தகாரர் ஒருவர் நேற்று புதன்கிழமை லிபிய தூதரின் சடலத்தை இனங் கண்டு வோஷிங்டனுக்குத் தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அவர்களது சடலங்கள் பெங்காசி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தத்தாக்குதலில் மேலும் தூதரக ஊழியர்களுக்கு கை, கால்கள் உடைந்தன.

இதையடுத்து லிபிய இராணுவம் விரைந்து வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி மற்ற அமெரிக்கர்களை மீட்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்றது.

வழக்கமாக தூதர் கிறிஸ்டோபர் ஸ்டீபன்ஸ் லிபிய தலைநகர் திரிபோலியில் உள்ள தூதரகத்தில் தான் இருப்பார். ஆனால், நேற்று




முன்தினம் இரவு பணி விடயமாக பெங்சாய் தூதரகத்துக்கு வந்திருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றது. உயிரிழந்தவர்களின் உடல்கள் ஜெர்மனி வழியாக அமெரிக்காவுக்குக்கொண்டு செல்லப்படவுள் ளன.

இந்தத் தாக்குதலுக்கு கொல்லப்பட்ட லிபிய ஜனாதிபதி கடாபியின் ஆதரவாளர்களான Islamic law supporters என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்க தூதரின் இறப்பை உத்தியோக பூர்வமாக லிபிய பிரதிப்பிரதமர் முஸ்தபா அபுஸ்காகூர் வெளியிட்டார். மேலும் அவர் ஸ்ரீபன் லிபியாவின் நண்பர் என்றும் அவரது இழப்பு அதிர்ச்சியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்லாம் மதத்தையும், முகம்மது நபியையும் மட்ட மாகச் சித்திரிக்கும் அமெரிக்கத் திரைப் படத்துக்குக் கண்டனம் தெரிவித்து லிபியா மற்றும் எகிப்து நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரங்கள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர். இதில் அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் பல அமெரிக்கர்கள் படுகாயமடைந்தனர்.

இஸ்ரேலிய-அமெரிக்கரான கலிபோர்னியாவைச் சேர்ந்த சாம் பேசிலி என்பவரும், குரானை எரித்து சர்ச்சைக்குள்ளான புளோரிடாவைச் சேர்ந்த பாதிரியார் டெர்ரி ஜோன்ஸ் என்பவரும் இந்த 'Innocence of Muslims' என்ற படத்தைத் தயாரித்துள்ளனர். (வ)



நியூயோர்க் இரட்டைக் கோபுர தாக்குதலின் 11 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மிக எளிமையான முறையில் நினைவுகூரப்பட்டது. நியூயோர்க் நகரின் 'கிரவுண்ட் ஸீரோ' மற்றும் வொஷிங்டனில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அவரது மனைவி மற்றும் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## பின்லேடனின் கொலைக்கு உதவிய மருத்துவர் கவலை

அல்குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கா கொலை செய்வதற்கு உதவி புரிந்த பின்லேடனது மருத்துவரான அப்ரிடி கவலை வெளியிட்டுள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டதற்கு பின்னர் இடம் பெற்ற நிகழ்வுகள் தம்மை வேதனையடையச் செய்வதாக அப்ரிடி குறிப்பிட்டுள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டதன் பின்னரும் தாம் சிறை வாசம் அனுபவிப்பதையும், அமெரிக்காவால்





தொடர்ந்தும் முஸ்லிம் மக்கள் கொல்லப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பின்லேடனின் மருத்துவரான அப்ரிடி, பின்லேடனுக்கு தடுப்பூசி ஏற்றுவது போல் அவரது மரபணுவை எடுத்து அமெரிக்காவுக்கு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## சோமாலிய ஜனாதிபதியாக பிரபலமில்லாதவர் தெரிவு



சோமாலியாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அதிக பிரபலமில்லாத ஹசன் முகமது (வயது 56) புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து சோமாலிய தூதர் ஒருவர் தெரிவித்ததாவது:-

ஹசன் முகமது சோமாலிய மக்கள் சமுதாயத்திலிருந்து வந்தவர். முஸ்லிம் சகோதரத்துவத்துக்குச் சமமான அல் இஸ்லாவுடன் தொடர்புடையவர்.

கடந்த இரண்டு தினங்களாக தான் அவரைப் பற்றி நாங்களே கேள்விப்படுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியான ஷாரிப் ஷேக் அகமது மீண்டும் வெல்வார் என்று பெரும்பாலானோர் கணித்திருந்த நிலையில், ஹசன் வென்றிருப்பது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (வ)

## குண்டு வெடிப்பில் நூலிழையில் தப்பினார் பாதுகாப்பு அமைச்சர்

### ஏமனில் 10 பேர் சாவு




ஏமனில் நடந்த கார் குண்டு வெடிப்பில் இராணுவ வீரர்கள் ஏழு பேர் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

பாதுகாப்பு அமைச்சர் முகமது நசீர் அகமது, நூலிழையில் உயிர் தப்பினார் ஏமன் நாட்டின் கிழக்குப் பகுதியில், இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையில், அல்குவைதா அமைப்பின் தளபதிகளில் ஒருவரான சயீத் அல் ஷெக்ரி, கொல்லப்பட்டதாக, அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சக செய்தி இணைய தளத்தில் கடந்த திங்கட்கிழமை செய்தி வெளியிட்டது.

இந்தநிலையில், ஏமன் நாட்டில் உள்ள அரச தலைமை அலுவலகத்தின் அருகில், பாதுகாப்பு அமைச்சர் முகமது நசிர் அகமதுவின், வாகனம் வந்து கொண்டிருந்த நேரத்தில், கார் குண்டு வெடித்தது. இந்த தாக்குதலில், பாதுகாப்பு அமைச்சர் நூலிழையில் உயிர் தப்பினார். ஆனால், பாதுகாப்புப் படையினர் ஏழு பேர் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். (வ)

## லப்ரொப் கணினியின் தந்தை காலமானார்



நியூயோர்க், செப்.13

லப்ரொப் கணினியை முதன்முதலில் உருவாக்கிய பிரிட்டன் விஞ்ஞானி பில் மாக்ரிட்ஜ் (வயது 69) புற்று நோய் காரணமாக உயிரிழந்தார்.

பிரிட்டனில் பிறந்த பில் மாக்ரிட்ஜ் முதன்முதலாக கிரிட் காம்பஸ் என்ற பெயரில் லப்ரொப் கணினியை 1982 ஆம் ஆண்டு உருவாக்கினார்.

6 அங்குல திரை கொண்ட இந்த கணினி, விசைப் பலகை மூலம் மூடும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. கிரிட் என்ற கையாளும் சிஸ்டம் இதில் பயன்படுத்தப்பட்டது.

இதன் விலை ரூ.4.5 லட்சம் அளவுக்கு இருந்ததால், மக்களிடம் இது பிரபலமாகவில்லை. ஆனால், இதன் பாதுகாப்புத் தன்மை காரணமாக அமெரிக்க இராணுவம் இதை 1985 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தத் தொடங்கியது. டிஸ்கவரி உள்ளிட்ட விண்வெளிவாகனங்களில் இந்த கணினி பயன்படுத்தப்பட்டது. (வ)

## முடிவுக்கு வந்தது தீவுகளின் சர்ச்சை: சொந்தமாக்கியது ஜப்பான்

கிழக்கு சீன பெருங்கடலில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய மூன்று தீவுகளை ஜப்பான் வாங்கியுள்ளது. இதனையடுத்து சீனா ரேந்துக் கப்பல்களை அங்கு அனுப்பியுள்ளது.

கிழக்கு சீன பெருங் கடலில் அமைந்துள்ள சர்ச்சைக்குரிய மூன்று தீவுகளை சொந்தம் கொண்டாடுவதில் சீனா - ஜப்பான் இடையே பதற்ற நிலைமை அதிகரித்துள்ளது.

ஜப்பானின் தனியாருக்கு சொந்தமான இத்தீவுகளை அரசே விலைக்கு வாங்கலாம் என்று ஜப்பான் முடிவு செய்து ஒப்பந்தத்தை முடித்தது. ஆனால் இது சட்ட விரோதமானது. இந்த கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகாது. ஜப்பான் இத்தீவுகளை திருடப் பார்க்கிறது. சீனாவுக்கே இத்தீவு சொந்தமானது என்று சீன அரசு அதிரடியாக அறிவித்தது.

தாய்வானும் இந்தத் தீவுக்கு முன்னர் சொந்தம் கொண்டாடியிருந்தது. இந்த நிலையில் ரஷ்யாவில் நடைபெறும் ஆசிய - பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்கச் சென்ற சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, ஜப்பான் பிரதமர் யோஷிஹகோ நோடா ஆகியோர் ஒருவரை ஒருவர் சந்தித்து இவ்விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் ஜப்பான் தனது தீர்மானத்தை அறிவித்ததைத் தொடர்ந்து சீன அரசு இரு ரோந்துக்கப்பல்களை அத்தீவுக்கு அருகில் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக்கப்பல்களும் குறித்த தீவுகளுக்கு அருகில் உள்ள கடல்பரப்பில் தற்போது நிலைகொண்டுள் ளதாகவும், நாட்டின் இறையாண்மையை உறுதிசெய்து கொள்ள தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதனை ஜப்பான் கடற்படை கண்காணித்து வருவதாக ஜப்பானும் அறிவித் துள்ளது.

உண்மையில் அத்தீவுகளில் மனிதக்குடியேற்றம் எதுவும் இடம்பெறாத போதும் ஆராய்ச்சி அடிப்படையில் அது மிக உயர்ந்த வளம் உடைய தீவாக கருதப்படுகிறது. இம்மூன்று தீவுகளையும் கொள்வனவு செய்ததில் ஜப்பான் 26 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 16.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவழித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தீ விபத்துகள்

## 128 பேர் சாவு



பாகிஸ்தானின் இரண்டு பிரதான நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்தில் 128 பேர் உயிரிழந்துள்ளதாக பாகிஸ்தான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச்சம்பவங்கள் தொடர்பில் வைத்தியசாலை உத்தியோகத்தர் தாரிக் கலீம் தெரிவித்ததாவது:-

தென் பாகிஸ்தான் நகரான கராச்சியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 103 பேர் உயிரிழந்தனர். இதே வேளை கிழக்கு பாகிஸ்தான் நகரான லாகூரில் பாதணி தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட தீ விபத்தில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மீட்பு பணிகளில் தொடர்ந்தும் தீயணைப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். காயமடைந்தவர்களுக்குரிய மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன- என்றார்.

இன்னமும் 25 பேர் தீ விபத்து ஏற்பட்ட பகுதிக்குள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதாக தீயணைப்பு படை தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. (வ)

**இன்னமும் 25 பேர் தீ விபத்து ஏற்பட்ட பகுதிக்குள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுவதாக தீயணைப்பு படை தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.**

# இருளில் மூழ்கிய கியூபா

## 'ஹரிக்கேன்' சூறாவளியின் தாக்கம்

கியூபா தலைநகர் ஹவானா உட்பட அதன் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பிரதான நகரங்களில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியின் தாக்கத்தால் ஏற்பட்ட கடுமையான மின் வெட்டால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் அமெரிக்கா உட்பட கியூபாவை தாக்கிச் சென்ற ஹரிக்கேன் சூறாவளியை அடுத்து அங்கு மின்வெட்டுக்கள் ஏற்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட மின் வெட்டு காரணமாக தலைநகர் ஹவானாவில் சில முக்கிய மருத்துவமனைகள் மற்றும் நாட்டின் பிரதான அரசு அலுவலகங்கள் ஜெனரேட்டர் மூலம் மின் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

ஏனைய இடங்களில் 95 வீதம் மின்வெட்டால் சூழ்ந்து காணப்பட்டது.

பொது மக்கள் பலர் இரவுப்பொழுதைக் கழிப்பதற்கு வீடுகளுக்கு வெளியே வந்து பாதைகளிலும் முற்றங்களிலும் நிலவொளியில் தமது நேரத்தைச் செலவழித்தனர்.

கியூபாவின் தொழிற்சாலைகள் முடங்கி மில்லியன் டொலர்களுக்குச் சமனான பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால் இனிமேல் இவ்வாறு நடக்காமல் இருப்பதற்கும் சேர்த்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (வ)

# தபால் துறை அமைச்சர் ஜப்பானில் மர்மச் சாவு

ஜப்பானின் தபால் துறை சீர்திருத்தம் மற்றும் வங்கிச் சேவைத் துறை அமைச்சரான டடாஹிரோ மட்சுஷிதா (வயது 73) மர்மமான முறையில் இறந்து கிடந்தது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

லிபரல் டெமக்ரடிக் கட்சியைச் சேர்ந்த மட்சுஷிதா, கடந்த 1993ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின் அமைச்சரானதும் தபால் மற்றும் வங்கி சேவை களை தனியார் மயமாக்க நடவடிக்கை எடுத்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டதால் கட்சியில் இருந்து மட்சுஷிதாவை அப்போதைய பிரதமர் ஜூனிச்ரோ கொய்சுமி நீக்கினார்.

அதன் பின் மக்கள் புதிய கட்சியில் இணைந்து, தற்போதைய பிரதமர் யோஷிஹிகோ நோடாவின் அமைச்சரவையில் இடம் பெற்றார்.

தபால் துறை சீர்திருத்தம் மற்றும் வங்கிச் சேவைத் துறை அமைச்சராக இருந்த மட் சுஷிதா, டோக்கியோவில் உள்ள அடுக்குமாடி வீட்டில் நேற்று முன்தினம் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

# குருத்வாரா துப்பாக்கிச் சூடு : வெளியானது காணொலி

**நிறவெறியரான வேட் மைக்கேல் பேஜ் என்ற ஓய்வு பெற்ற சிப்பாய் துப்பாக்கியால் சுட்டதில் பிரார்த்தனைக்கு வந்திருந்த 6 சீக்கியர்கள் உயிரிழந்தனர்.**

வொஷிங்டன், செப்.13

அமெரிக்காவில் உள்ள விஸ்கான்ஸின் பகுதியில் ஓக் கிரீக் என்னுமிடத்தில் உள்ள சீக்கிய குருத்வாராவில் கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான காணொலிப் படங்களை அமெரிக்கப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

நிறவெறியரான வேட் மைக்கேல் பேஜ் என்ற ஓய்வு பெற்ற சிப்பாய் துப்பாக்கியால் சுட்டதில் பிரார்த்தனைக்கு வந்திருந்த 6 சீக்கியர்கள் உயிரிழந்தனர். துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு முன்னேறிய பேஜை தடுத்த பொலிஸ் அதிகாரி சாம் லென்டா, செய்தியாளர்கள் கூட்டத்தில் இந்த நிகழ்வு தொடர்பான காணொலி ஆதாரங்களை வெளியிட்டார்.

குருத்வாராவுக்கு வெளியே பேஜ் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்த போது அவரைத் தடுத்து நிறுத்திய மற்றொரு பொலிஸ் அதிகாரி பிரையன் மார்பியும், இந்த வீடியோ காட்சியில் தெரிகிறார். பிரையன் மற்றும் பேஜ் இடையிலான பரஸ்பர துப்பாக்கித் தாக்குதல் சம்பவங்கள் காணொலிப் பதிவில் தெளிவாகத் தெரிகின்றன.

இதில் பலத்த காயமடைந்த மார்பி, மருத்துவ சிகிச்சையில் தற்போது ஓரளவு குணமடைந்து வருகிறார். இவர் மீது 9 தோட்டாக்கள் பாய்ந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் மருத்துவமனையில் இவரது உடலிலிருந்து 12 தோட்டாக்கள் அகற்றப்பட்டுள்ளன. 3 தோட்டாக்கள் இவரது குண்டு துளைக்காத கவச ஆடையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

மைக்கேல் பேஜை பொலிஸ் அதிகாரி மார்பி தடுக்கவில்லையெனில் உயிரிழப்பு மேலும் அதிகரித்திருக்கும் என்று ஓக் கிரீக் பொலிஸ் அதிகாரி ஜான் எட்வர்ட்ஸ் தெரிவித்தார்.

40 வயது மதிக்கத்தக்க பேஜ், இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். துப்பாக்கியால் சுட்ட சம்பவத்தையடுத்து அவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (வ)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

5 மாதம் நிரம்பிய Orginal Rottwailer நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 251 1070

(19324) (5-6)

**வாகனம் விற்பனைக்கு**

TATA Dubal. Weel. 407 Model லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772054802

(22787) (2-6)

**வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு**

93அடி நீளமும்,11 அடி அகலமும் கொண்ட கடை(ஆதிவிநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.

* ஹோட்டல்கள் தவிர்க்கப்படும்.
* தரகர் தேவையில்லை.

முகவரி: இல.66, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா. தொடர்பு: 024 222 0112

(20878) (5-6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27.07.1986

உதிர்வு 13.09.2011

**செல்வன் றொனி டிமல் சில்வா (றொணிஸ்)**

(நியாப் சாரதி கச்சேரி மன்னார், ஆவே மரியா பஸ்உரிமையாளர்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
மறந்து விடுமா மகனே! இறுதிவரை துணையிருப்பீர் என்று
எண்ணியிருந்தோம் எங்களைப் பாதியில் பரிதவிக்க விட்டு
சென்று விட்டீர்களே மகனே! நிலையான சொந்தம் நீங்கள் என்று
நம்பியிருந்து நிலைகுலைந்து போனோம்.
நிலவுலகில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த மரம் நீங்கள் இல்லையே. நீரின்றிய தாவரம் போல்
உம் பிரிவால் தவிக்கின்றோம் நீங்காது உங்கள் நினைவு
எம் உயிர் உள்ளவரை உங்கள் ஆன்மா ஆண்டவன் சந்நிதியில்
அமைதியுடன் இளைப்பாற வேண்டுகிறோம்.

உம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தாழ்வுபாடு, மன்னார்.

(சி/3304) (2,6)

## திடநம்பிக்கையுடனான முதலீட்டிற்கு...

பங்குச் சந்தையில் முதலீடு செய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# முதலீட்டுக்கான அறிவு

# வவுனியா

2012 செப்ரெம்பர்
15, 22, 29 மற்றும் ஒக்டோபர் 06
மு.ப 09.00 முதல் பி.ப 01.00 வரை
ரோயல் கார்டின்
(Royal Gaarden) – வவுனியா

**தலைப்புக்கள்**

பங்கு முதலீடு பற்றிய அறிமுகம் ◂
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல் ◂
பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும் ◂
பங்குகளில் முதலீடு செய்தல் ◂

வளவாளர்கள்

திரு. ஆ. சுப்ரமணியம்
தலைவர், நிதி முகாமைத்துவ துறை
முகாமைத்துவ வணிக பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திரு. வெற்றிவேல் குமணன்
ACCA (UK)

மொழி மூலம்: தமிழ்
பதிவுக் கட்டணம் ரூபா. 500/-

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
021 – 2221455, 021 – 5672444, 0777822014

COLOMBO STOCK EXCHANGE

(சி/3243)(6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(10)

மரணத்தைப் பற்றிப் பயந்து கொண்டிருப்பது அர்த்த மில்லாதது. பிறக்கின்ற எல்லோரும் என்றோ ஒரு நாள் இறக்க வேண்டியவர்களே. அப்படி இருக்கும்போது வாழ்கின்ற காலம் முழுவதும் இறந்து போய் விடுவோமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவ்வாறு அச்சப்பட்டுக் கொண்டிருந்தால் வாழ்க்கையின் பெரும் பகுதி அந்தப் பயத்திலேயே வீணாகிப் போய்விடும்.

இந்தக் கருத்தை உள்ளடக்கி ஷேக்ஸ்பியர் ''வீரன் ஒரு முறைதான் சாகிறான். ஆனால் கோழைகள் வாழ்க்கையில் பல முறை செத்துப் பிழைக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார். மரணத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கும் போது, எந்தக் காரியத்தையும் முனைப்புடன் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

மரணத்தைப் பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடத்திய மேல் நாட்டு விஞ்ஞானிகள், மரணம் என்பது பயப்பட வேண்டிய ஒன்றல்ல. அது ஓர் இனிமையான அனுபவம் என்று சொல்லு கிறார்கள். ஆகவே என்றோ ஒரு நாள் நிச்சயமாக ஏற்படப் போகும் மரணம் குறித்து மனிதன் கவலைப்பட்டுக் கொண்டி ருப்பதில் அர்த்தமில்லை. வருகிற போது அது வரட்டும் என்று அதைப் பற்றிய பயத்தை நீக்கி, வாழ்கின்ற காலத்தில் நல்லவை களையும் அரிய காரியங்களையும் சாதிக்க வல்லவனே வாழ்க்கையின் பயனை அடைந்தவன் ஆகிறான்.

மரணத்தைப் பற்றி பயப்படும் படியாக பல தகவல்களைப் பெரியவர்கள் சிறியவர்களுக்குப் போதிப்பதால் அது பற்றிய குழப்ப மான எண்ணங்கள் மனதில் ஆழப் பதிந்து மரணம் பயப்படத் தக்க ஒன்று என்ற நிலைத்த கருத்து ஏற்பட்டுவிடுகிறது.

இந்தியாவின் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவும், கேரள மாநிலத் தின் சட்ட அமைச்சராகவும் இருந்த வி.ஆர்.கிருஷ்ண ஐயர் அளித்த பேட்டி ஒன்றை படித்தேன். தன்னுடைய மனை வியின் மரணத்தைப் பற்றி ஆழ்ந்த உணர்ச்சியோடு குறிப்பிடுகின்ற அவர், மரணத்தைப் பற்றித் தன்னுடைய கருத்தைச் சொல்லும் போது, ''மரணத்தோடு வாழ்க்கை முடிந்து விடுவதாக நான் கருதவில்லை. மரணம் என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படும் திருப்பம் என்றே நான் நினைக்கிறேன். அது பற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்யும் எண்ணமும் எனக்கு இருக்கிறது'' என்று குறிப்பிடுகிறார்.

ஆக மரணத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித்து எவரும் பயப் பட வேண்டிய ஒரு விஷயமாக அவர் அதைக் குறிப்பிட வில்லை என்பது கவனத்துக்குரியது.

சிலர் இருட்டைக் கண்டால் அதிகமாக பயப்படுவார்கள். இந்த பயம் பெரும்பாலானோருக்கு இயற்கையாகவே தோன் றக் கூடிய பயம்தான். வெளிச்சத்தில் வாழ்வதுதான் பாதுகாப் பானது என்கிற உணர்ச்சி மனிதன் காட்டுமிராண்டித் தனத்தில் வாழ்ந்த பொழுதே அவனுக்கு ஏற்பட்டு விட்ட ஓர் உணர்ச்சி யாகும். துஷ்ட மிருகங்களுக்கு அவன் பயந்து வாழ்ந்த பொழுது இருட்டில் அவற்றின் தாக்குதல்களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள நெருப்பை மூட்டி, அவைகளை பயமுறுத்தி விரட்டும் பழக்கத்தை அவன் கொண்டிருந்தான். இருளில் வாழ்வது ஆபத்தானது என்கிற பய உணர்ச்சி அந்தப் பிராயத் திலேயே அவனுக்குத் தோன்றியிருக்கிறது. எனவேதான் மனித இனத்தில் பெரும்பான்மையோர் இருட்டு என்றாலே அச்சப்படுகின்ற சுபாவம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

இருட்டு என்றாலே வெளியே போக பயப்படுகிறவர்களும் உண்டு. உடன் துணைக்கு மனிதர்கள் வந்தால்கூட இவர்கள் இருட்டில் செல்லும் போது வீணான கற்பனைகள் செய்து கொண்டு விளக்குக் கம்பத்தை திருடன் என்றும், கறுப்பாக ஏதாவது அசைந்தால் அதைப் பேய் பிசாசு என்றும் எண்ணித் தாங்களும் பயந்து, மற்றவர்களையும் பயமுறுத்துவார்கள். ஆனால் வெளிச்சத்தை உண்டாக்கி அவர்கள் பயந்தபடி எதுவும் இல்லை என்று நிருபித்து விட்டால் அந்தக் கணத்தில் பயம் நீங்கியவர்களாக இருப்பார்களே தவிர, மறு வினாடியே வெளிச்சம் அகன்று இருள் தோன்றிய உடன் மீண்டும் பழைய அச்சத்துக்கு ஆளாகிப் போவார்கள்.

பெரிய ராஜ தந்திரிகளாக விளங்கியவர்கள்கூட இருட்டு என்றால் அச்சப்படுகிறவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இருட்டில் ஒரு மனிதன் பயப்படுவதற்கு நியாயமான கார ணங்கள் உண்டு. விஷஜந்துக்களை கவனக் குறைவால்



மிதித்து அவை தீண்ட வாய்ப்பு உண்டு விரோதிகள் இருட் டில் பதுங்கியிருந்து தாக்கலாம். திருடர் கள் வழிப் பறி செய்யலாம். இவை யெல்லாம் இருட் டில் செல்லுகின்ற வர்கள் பயப்படு வதற்குள்ள நியா யமான காரணங்க ளாகும். ஆனால் வீட்டுக்குள்ளேயே இருட்டாக இருக் கிறது என்பதற்காக ஓர் அறையிலிருந்து இன்னொரு அறைக்குச் செல்ல பயப்படுகிறவர்கள் இருட்டைக் கண்டே பயப்படுகிறவர்கள் ஆவார்கள்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# அடிப்படைத் தத்துவங்களை பின்பற்றினால் வாழ்க்கை என்றும் இன்பமுடையதாக இருக்கும்

## பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

மனித வாழ்க்கையின் அடிப்ப டைத் தத்துவங்களை உணர்ந்து அதன் வழி எமது கடமைகளைப் பின்பற்றினால் வாழ்க்கை இன்ப முடையதாக இருப்பதுடன், துன்ப வியல் சம்பவங்களை இலகுவில் எதிர்கொள்ள முடியும்.

இதற்கு, மதவிழுமியங்கள் கூறும் தத்துவங்களைப் பின்பற்ற எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்று 'சின்மயாமிஷன்' நிறுவனத் தின் வதிவிட ஆச்சாரி பிரம்மசாரி ஜாக்கிரத் சைத்தன்ய தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான தலைமைத் துவப் பயிற்சி நிகழ்வில் 'மனித விழுமிய மேம்பாட்டு விருத்தி' எனும் தலைப்பில் கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:-

மனித வாழ்க்கை 3 பண்பு களில் தங்கியுள்ளது. இவற்றில் பிரம்மசாரியம் (சுயகட்டுப்பாடு), அஹிம்சா (துன்புறுத்தாமை), சத்தியம் போன்ற 3 விடயங்களும் எம்முடைய உடல், மனம் (உணர் வுகளின் இருப்பிடம்), புத்தி ஆகிய மட்டங்களில் கடைப்பிடிக் கப்பட வேண்டும். உடல்மட்ட ஒழுக்க பிரமச்சரியம் எல்லா இந்திரிய சுகங்களுக்கும் இருக்கக் கூடிய சுயகட்டுப்பாட்டு வாழ்க் கையைத் தவிர இவற்றை முழுமை யாக துறந்து விடுவதில்லை.

வேதசாத்திரங்கள் இந்த அனு பவத்தை அனுபவிக்கும் சுதந்தி ரத்தைத் தடுப்பதில்லை. ஆனால் சுக அனுபவங்கள் எங்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்யா விட்டால் நாங்கள் சுக அனுப வங்களை ஆழவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றன.

''உலகை அனுபவி; ஆனால் உலகம் உன்னை அனுபவிக்க விடாதே'' என்பது தான் அது. ஆக பிரமச்சரியம் என்றால் சுய கட் டுப்பாட்டோடு மனித வாழ்க் கையை வாழ்வதே ஆகும்.

அடுத்து மன மட்டத்தில் கூறப் பட்ட துன்புறுத்தாமை அஹிம்சை எனும் ஒழுக்கம். அஹிம்சா என்பது உடல் மட்டத்தில் கூறப்பட்ட துன் புறுத்தாமை அல்ல. சில சமயங் களில் நாம், புறத்தே கொடுமை யானவராக இருக்க வேண்டியதாக இருக்கும். உதாரணமாக ஒரு மருத்துவர் அறுவைச் சிகிச்சை செய்யும் போது கொடூரமாகக் காட்சியளிக்கலாம். ஆனால் அவ ருடைய மனம் நன்மையே நினைக் கிறது. இத்தகைய செயல் உடல் அளவில் துன்பத்தைத் தந்தாலும் அஹிம்சையையே சாரும். இத னையே சேக்கிழாரும் இலக்கிய நூல் ஒன்றில் ''நான் அன்பாக இருப்பதற்காகவே கொடுமையாக இருக்கிறேன்'' என்று குறிப்பிட் டார்.

மூன்றாவதாக புத்தி மட்டத்தில் வாழ வேண்டிய சத்தியம் என்கின்ற ஒழுக்கம், ஒருவருடைய புதிய பூர்வமான நம்பிக்கைக்கு ஏற்ப அவர் தனக்கு உண்மையாக வாழ வேண்டும் என்பதே சாத்திய மாகும்.

எங்களுடைய வேண்டு கோளுக்கு ஏற்ப வாழ்க்கை வாழ்வ தைக் குறிப்பது. சில நேரங்களில் ஆபாசங்களுக்கு உடன் பட்டு நாங்கள் குறிக்கோளுக்கு ஏற்ப வாழ்வதில்லை. இது அசத்தியத் தைக் குறிக்கிறது.

ஆக யார் உடல், மன,புத்தி மட்டங்களின் முறையே பிர மச்சரிய சத்தியம், அஹிம்சா ஆகிய ஒழுக்கங்களைக் கடைப் பிடிக் கிறார்களோ அவர் மனித விழு மியங்களில் மேம்பாடு அடைந் தவர்களாகத் திகழ்வார்- என்றார்.

(எ-14)



தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் தீர்த்தத்துக்கு ஏழாலையிலிருந்து பக்தர்கள் பாத யாத்திரையை மேற்கொண்டனர். இதில் பண்டிதர் வ.பேரின்பநாயகம், விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், பண்ணிசை வல்லார் மா.ந.பரமேஸ்வரன், ஆசிரியர் வி.ஜெகநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

# சிறுவர் கலாசார போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். சமுர்த்தி அலுவலக சிறுவர் கலாசார போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன. வெற்றியீட்டிய சிறுவர்களின் விவரம் வருமாறு:-

**குழுப்பாடல், 15-18 வயது**

முதலாம் இடம்- எஸ்.அபிராமி, சங்கானை பிரதேச செயலகம், இரண்டாம் இடம்- ஆர்.சன்ராஜ், தெல்லிப்பழை பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- ஐ.சோபிகா, நல்லூர் பிரதேச செயலகம்.

**குழு நடனம், 5 - 9 வயது**

முதலாம் இடம்- ஊரி தெற்கு கழகம்,காரைநகர் பிரதேச செயல கம், இரண்டாம் இடம்- பன்னாலை கெக்குளு கழகம்,தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**10- 14 வயது**

முதலாம் இடம்- யாழ்ரன் கழ கம்,காரைநகர் பிரதேச செயலகம், இரண்டாம் இடம்-சுழிபுரம் மேற்கு கெக்குளு கழகம்,சங்கானை பிர தேச செயலகம், மூன்றாம் இடம்- ஜே.68 கெக்குளு கழகம்,யாழ்ப் பாணம் பிரதேச செயலகம்.

**அறிவிப்பு, 5 - 9 வயது**

முதலாம் இடம், ஆர்.தமிழ்ச் சுடர், காரைநகர் பிரதேச செயல கம், இரண்டாம் இடம், ரி.ஜஸ் ரின்ராஜ், நெடுந்தீவு பிரதேச செய லகம், மூன்றாம் இடம், எம்.தமி ழ்ச்சன், வேலணை பிரதேச செய லகம்.

**10-14 வயது**

முதலாம் இடம்- எம்.நாகசதுர் சன், மருதங்கேணி பிரதேச செயல கம், இரண்டாம் இடம்- எம்.மரிய மேரி அபிதா,நெடுந்தீவு பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- எம்.கிருகிகா,காரைநகர் பிரதேச செயலகம்.

**15-18 வயது**

முதலாம் இடம்- எஸ்.மேரி ஜீனு, நெடுந்தீவு பிரதேச செயல கம்,இரண்டாம் இடம்- ஏ.தனுசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- டி.தர்சன், ஊர் காவற்றுறை பிரதேச செயலகம்.

**பேச்சு**

**5 - 9 வயது**

முதலாம் இடம்- எஸ்.வனோஜா, சாவகச்சேரி பிரதேச செயலகம், இரண்டாம் இடம்- ஜே.புவியரசன், காரைநகர் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- ஜாக்சன் அன்ட்றூ போல், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்.

**10- 14 வயது**

முதலாம் இடம்- ஆர்.சோபிதா, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், இரண்டாம் இடம்-சி.விசாலினி, காரைநகர் பிரதேச செயலகம், மூன்றாம் இடம்- எம்.நிதுசாலினி, மருதங்கேணி பிரதேச செயலகம்.

(எ-14) (தொடரும்)

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய நூற் றாண்டு விழாவையொட்டி நடத் திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வருமாறு:-

1 ஆம் இடம்- தேவி பரமலிங் கம் (யாழ்ப்பாணம்) ''குருவிச்சை'', 2 ஆம் இடம் - சி.கதிர்காமநாதன் (தொல்புரம்) ''வினோத உடைப் போட்டி'', 3 ஆம் இடம் - செ.குண ரத்தினம் (அமிர்தகழி, மட்டக்களப்பு) "விருந்து" மேலும் 7 கதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நடராசா இராமநாதன் (அல்வாய் வடக்கு) ''சபதம்'', திருமதி ஆரபி சிவகுகன் (கொக்குவில்) ''முற்றுப்புள்ளிகள் முடிவுகள் அல்ல'', திருமதி ஆனந்த ராணி நாகேந்திரன் (நெல்லியடி) ''பாகுபாடு'', சு.க.சிந்துதாசன் (பொலி கண்டி வல்வெட்டித்துறை) ''நரம் பறுந்த வீணை'', கே.ஆர்.திருத்துவ ராஜா (அல்வாய் வடக்கு) ''ஒரு பிடி மண்ணோடு'', எச்.எப்.ரிஸ்னா (தியத் தலாவ)"வரம்'', மு.இரத்தினம் (கெரு டாவில் "தொண்டமானாறு) "தனிமரம்"

இவர்களுக்கான பரிசும் சான்றி தழும் எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு தொண்டமானாறு வீர கத்திப்பிள்ளை மகாவித்தியாலயத் தில் இடம்பெறும் நூற்றாண்டு விழா வில் வழங்கப்படுவதுடன் தெரிவு செய்யப்பட்ட கதைகள் இந்த வரு டம் நூலாகவும் வெளியிடப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# குரல் கொடுக்க ஏன் தயக்கம்?

கூடங்குளம் அணுஉலைப் பிரச்சினையால் ஒட்டு மொத்த தமிழ்நாடே பற்றி எரியத் தொடங்கியுள்ளது. இப்போதைய கூடங்குளம் அணு உலை போல, போபாலிலும் மேற்கத்தைய நிறுவனத்தின் இரசாயனத் தொழிற்சாலை ஒன்று மக்களின் எதிர்ப்பையும் மீறி அமைக்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலை மக்களுக்கு எந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஓர் இரவில் போபால் தொழிற்சாலையில் இருந்து பரவிய நச்சுப் புகை அந்த உறுதி மொழிகளையும் சுற்று வட்டாரத்தில் இருந்த மக்களையும் சத்தமிடாமல் சாகடித்தது. ஆடுகள் ஓடிய பின்னர் பட்டியை மூடிய கதையாக, மக்களின் சாவுகள் நிகழ்ந்த பின்னரே அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது.

இதே போன்று போபாலை விடவும் அதிகளவு தாக்கத்தை கூடங்குளம் அணு உலை நிலையம் ஏற்படுத்தி விடக்கூடும் என்ற அச்சம், அந்தப் பகுதி மக்களிடையே எழுந்துள்ளது. இந்த அச்சத்தைப் போக்க இந்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தங்களது உயிர்களை விடவும் அணு உலையும், அதனை அமைப்பதற்காக செலவிடப்பட்ட பணமுமே அரசுக்கு முக்கியம் என்பதை உணர்ந்துகொண்ட மக்கள் தங்களுக்காக தாங்களே போராடப் புகுந்தனர்.

வழமையான அரசியல்வாதிகளில் இருந்து வேறுபட்டவரான உதயகுமார், மக்கள் போராட்டத்துக்கு வழிகாட்டத் தொடங்கினார். மாதக் கணக்கில் நிகழ்ந்த போராட்டங்கள் அதிகாரத்தின் கண்களை திறக்கவில்லை. இந்த நிலையில் எந்தவித ஆயுதங்களுமற்று, அணு உலையை முற்றுகையிட்ட மக்களை ரத்தச் சகதிக்குள் வீழ்த்தியது இந்தியக் காவற்படை. தங்கள் கிராமங்கள் அழியக்கூடாது என்பதற்காக போராட வந்த மக்கள் எல்லோரும் கட்டாயம் குருதியில் குளிக்க வேண்டியிருந்தது. போராட்டம் நடைபெற்ற இடிந்தகரைப் பகுதி இன்னொரு முள்ளிவாய்க்காலை பிரசவித்தது.

மக்கள் மீதான தன்னுடைய காட்டுமிராண்டித் தனத்தை அதிகரிக்க, 'ஏழு பொலிஸாரை பயங்கரவாதிகள் [ஆர்ப்பாட்டக்காரர்கள்] பிடித்துள்ளனர். அவர்களை மீட்க தேடுதல் நடத்தப்படவுள்ளது.' என்று அரசு அறிவித்தது. தேடுதல் என்ற போர்வையில் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பொலிஸ் மனித வேட்டையில் இறங்கப்போவதை உணர்ந்துகொண்ட உதயகுமார் மக்களுக்காக பொலிஸாரிடம் தானே சென்று கைதாகப் போவதாக அறிவித்தார். ஆனாலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் போராட்டத்திற்கு உதயகுமாரைத் தவிர வேறு எவரும் உயிர் கொடுக்க முடியாது என்பது அவர்களது நம்பிக்கை. ஆகவே உதயகுமார் மக்களால் பாதுகாப்பான இடம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டார். மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இடிந்தகரையில் பற்றவைக்கப்பட்ட தீக்குச்சி தமிழகம் எங்கும் பெருந் தீயாக பரவத் தொடங்கிவிட்டது.

ஈழத்தில் மக்கள் மீதான அதிகாரத்தின் ரத்த வேட்டையை தடுக்கக் கோரி இன்றளவும் அந்த மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். இப்போது அந்த மக்கள் மீதே அதிகாரம் தன்னுடைய கோரப் பற்களைக் காட்டத் தொடங்கிவிட்டது. எங்களுக்காக குரல் கொடுத்தவர்களுக்கு நாங்களும் குரல் கொடுக்க வேண்டும் அல்லவா?

கூடங்குளம் அணு உலை தனியே தமிழக மக்களின் பிரச்சினை மாத்திரமல்ல. ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமா அணு உலையில் ஏற்பட்ட கசிவால் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கும் அப்பாலும் அதன் பாதிப்பு உணரப்பட்டிருந்தது. கூடங்குளத்தில் அது போன்று அணுக் கசிவு ஏற்பட்டால் அது இலங்கைக்கும் குறிப்பாக வட பகுதிக்கு ஆபத்துத் தான். ஆயினும் எங்கள் தொப்புள் கொடி உறவுகளின் போராட்டம் குறித்து எம் மக்களும் அரசியல் வாதிகளும் இன்னமும் மௌனமாகவே இருக்கிறார்கள். இந்த வாய்ப் பூட்டுக்கள் திறபடுமா?

# தமது உறவுகள் குறித்து தமிழகம் கவலைப்படுகிறது

**றொய்ட்டர் செய்தி நிறுவனத்தின் கட்டுரை இங்கு தமிழாக்கம் செய்து தரப்படுகிறது.**

இலங்கையில் 25 ஆண்டு காலமாகத் தொடர்ந்த உள்நாட்டுப் போரின் பின்னர் உயிர்தப்பி வாழும் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மந்தமாகவே உள்ளன. போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்த போதிலும் இந்தப் பணிகள் வேகமாக இடம்பெறாமை போர் இடம்பெற்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களை மட்டுமல்ல, இலங்கையின் அயல் தேசமான இந்தியாவில் வாழும் மக்களையும் கவலையுறச் செய்துள்ளது.

தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்நாடானது இலங்கையில் வாழும் தனது சகோதர தமிழ்ச் சமூகம் மீது கரிசனை கொண்டுள்ளது. தொடர்ந்தும் சிங்கள ஆளும் அரசால் இலங்கையில் தமிழர்கள் ஓரங்கட்டப்படுவதை எண்ணி தமிழகம் மிகக் கவலையடைந்துள்ளது. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆயுதப் படைகளை எதிர்த்த தமிழீழ விடுதலை புலிகள் மேற்கொண்ட இறுதிக்கட்டப் போரின் போது, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த பல பத்தாயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர். பல நூற்றுக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்க்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலை புலிகள் தோற்கடிக்கப்பட்டு, மே 2009 இல் போர் நிறைவை எட்டியபோதிலும்கூட, உயிர்தப்பிய தமிழ் மக்களுக்கு போதியளவு மறுவாழ்வுத் திட்டங்கள் சென்றடையவில்லை. இது தமிழ்நாடு வாழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு உணர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் பின்விளைவாக, தமிழ்நாட்டுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 180 பாதயாத்திரிகள் சீற்றங்கொண்ட இந்தியத் தமிழர்களால் அண்மையில் தாக்கப்பட்டனர். இந்தப் பாதயாத்திரிகர்களை தமிழ்நாட்டு காவல்துறையினர் மீட்டெடுக்கும் வரை அவர்கள் தேவாலயம் ஒன்றில் ஒளிந்திருந்தனர்.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் அடங்கிய குழுவினர் தாக்கப்பட்டதை அடுத்து எந்தவொரு இலங்கையர்களும் தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை அரசு அறிவித்தது. பாதிக்கப்பட்ட யாத்திரிகர்கள் உடனடியாக நாடு திரும்பினர்.

இந்த யாத்திரிகர்கள் இலங்கை செல்வதற்காகச் சிறப்பு பஸ்களில் விமான நிலையத்தை அடைந்தபோது, அங்கு குழுமியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த பஸ்கள் மீது கற்களை வீசி தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர். இலங்கையில் வாழும் தமது தமிழ்ச் சகோதரர்கள் போரின் பின்னரும் இலங்கை அரசால் ஓரங்கட்டப்படுவதை எதிர்த்தே இவ்வாறான கல் வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அரசு கூறுகின்றது. அதாவது வீதிகள், ரயில் பாலங்கள், துறைமுகங்கள் போன்றன மறுசீரமைக்கப்படுகின்றன. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிதாகவும் இவை அமைக்கப்படுகின்றன. சுற்றுலாத்துறை மேலும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. வர்த்தகச் செயற்பாடுகளும் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் போரின் பின்னர் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிய தமிழ் மக்களுக்குக் குறிப்பிடத்தக்க சில தேவைகள் இன்னமும் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளன என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

"இலங்கையின் வடக்கில் வாழும் சமூகங்கள் மத்தியில் மேலும் செய்யப்படவேண்டிய மனிதாபிமானப் பணிகள் உள்ளன. நீரைத் தூய்மைப்படுத்தல், உறைவிடம், உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம், அனைத்துலகத் தரங்களுக்கு ஏற்ப இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான உரிமை போன்றன கவனத்திற் கொள்ளப்படவேண்டும்" என ஐ.நா. மனிதாபிமானத் தேவைகளுக்கான வதிவிடப் பிரதிநிதி சுபனே நண்டி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் இவ்வாறான நடவடிக்கைகளே தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா போன்ற அரசியல்வாதிகள் மற்றும் இந்தியத் தமிழ் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டுடன் நட்பு சார் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதை நோக்காகக் கொண்டு இலங்கையிலிருந்து சென்ற உதைபந்தாட்டக் குழுவை முதலமைச்சர் ஜெயலலிதா உடனடியாக அங்கிருந்து வெளியேற்றியமை மற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு இந்தியா இராணுவப் பயிற்சி வழங்கியதை முதலமைச்சர் கண்டித்தமை போன்றன நிலைமையை மேலும் தீவிரமாக்கின.

இலங்கையர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் ஜெயலலிதா மற்றும் புலிகளின் ஆதரவு அமைப்புகள் இலங்கையில் வாழும் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட காயத்தை ஆற்றுவதற்கு உதவி செய்யாததுடன், இலங்கை மற்றும் இந்தியா மத்தியில் குழப்பங்களை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு பொறுப்பற்ற விதத்தில் நடப்பதாக சிலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்கள் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் இராஜீக ரீதியான முரண்பாட்டைத் தோற்றுவிக்கவில்லை எனவும், இந்தியாவில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் இலங்கையில் போர் இடம்பெற்ற வலயங்களுக்கு வருகை தந்து, போரில் உயிர் மீண்டவர்களுக்கு எவ்வாறான மறுவாழ்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை நேரில் பார்க்க வேண்டும் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இலங்கைக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்க்கவும், அத்துடன் வடக்கு மாகாணம் எவ்வாறு அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதையும் பார்க்க வேண்டும்" என புதுடில்லிக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவாசம் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் வடமாகாணத்தின் இன்றைய பொருளாதார வளர்ச்சியானது 22 சதவீதமாகும். போரில் இடம்பெயர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து எம்மால் மீட்கப்பட்ட 300,000 மக்களில் ஆயிரம் வரையானவர்களைத் தவிர மீதி அனைவரும் தற்போது மீள்குடியமர்த்தப்பட்டுவிட்டனர்" என பிரசாத் காரியவாசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையிலும்கூட இந்தியா மட்டுமல்லாது, மேற்குலக நாடுகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்றனகூட இலங்கையில் போரின் பின்னரான சூழல் தொடர்பாக தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றன.

போரின் பின்னான கோட்பாடுகள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவாலும், அரசியல் மற்றும் இராணுவத் துறைகளில் முக்கிய பதவிகளை வகிக்கும் ராஜபக்ஷவின் சகோதரர்களாலும் வகுக்கப்படுவதால், இவற்றுள் பெரும்பான்மை மக்களின் நலன்களே அதிகம் முதன்மைப்படுத்தப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தற்போதும் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் நடைமுறையிலுள்ளதாகவும், அதிகாரிகள் தொடர்ச்சியாக ஊடகங்கள் மற்றும் அரச எதிர்ப்பாளர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதாகவும் தேர்தல்களில் அதிகம் தலையீடுகளை மேற்கொள்வதாகவும் கடந்த ஆண்டில் அனைத்துலக நெருக்கடிக்கான குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நிறைவேற்று ஜனாதிபதியாக ஒருவர் எத்தனை தடவைகளேனும் பதவி வகிக்க முடியும் என இலங்கை அரசமைப்பில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக் குழுக்கள் மீதான நிறைவேற்று ஜனாதிபதியின் கட்டுப்பாடுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன" என அனைத்துலக நெருக்கடிக்கான குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முன்னர் விடுதலைப் புலிகளால் ஆளப்பட்ட வடக்குப் பகுதியானது தற்போது இலங்கை இராணுவத்தால் ஆளப்படுகிறது. இதனால் பொது நிர்வாகங்கள் மற்றும் மக்களின் நாளாந்த வாழ்க்கை என்பவற்றில் இலங்கை இராணுவத்தின் தலையீடுகள் காணப்படுகின்றன" எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இறுதிக் கட்டப் போரின் போது புலிகள் மற்றும் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்படவில்லை என இலங்கை அரசு மீது பரந்தளவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக, கடந்த மார்ச்சில் கூட்டப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்காவின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதில் இலங்கையானது இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. ஆனால் இது வரை எதுவும் இடம்பெறவில்லை.

தமது அன்புக்குரியவர்களின் இழப்புக்கான நீதியை போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதன் மூலம் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும் எனவும், இதன் மூலம் இலங்கை தான் சந்தித்த குருதி உறைந்த கடந்த கால வரலாற்றிலிருந்து மீண்டு செல்ல முடியும் எனவும் பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் கோபங் கொள்ளும் அரசியல்வாதிகளாயினும் சரி ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களும் சரி அமைதியைப் பேணும் போதே உயிர் நீத்த மக்களுக்கு நீதி கிடைக்கும்.

*நன்றி : புதினப்பலகை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சடாயு

# பணிப் புறக்கணிப்பை பணியாகக் கொள்ளும் அரச பணியாளர்கள்

கடந்த ஏழாம் திகதி வைத்தியசாலை சென்ற போது பெரும் திரளான வைத்தியசாலை ஊழியர்கள் பதாகைகளுடன் வெளிநோயாளர் பிரிவின் வாயிலில் நின்றனர். பதாகைகளுடன் ஊழியர்கள் தமது அலுவலகங்களின் வாயிலில் நின்றதால் வழமையாகக் கூடும் ஊடகவியலாளர்களும் தமது புகைப்பட, வீடியோக் கமராக்களுடன் சூழ்ந்து விட்டார்கள். கமராக்களைக் கண்டதும் அங்கு இன்றும் கூட்டம் அதிகரித்தது. முக்கிய நபர்களையும் காணக் கிடைத்தது. இதனால் நிகழ்வு மேலும் சூடுபிடித்தது. கமராக்காரர்களின் ஒலிவாங்கிகள் மாறிமாறிப் பாய்ந்தன.

நான் மெல்லச் சென்று பதாதையுடன் நின்றிருந்த சிலரிடம் வினவிய போது அவர்கள் ஏன் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள் என்று அவர்களுக்கே சரியாகத் தெரியவில்லை. அங்கு இருந்த நோயாளி ஒருவர் முணுமுணுத்தது மெல்லக் காதில் விழ அவர்பக்கம் சென்றேன். அவர் சொன்னார். "இந்த ஆசுப்பத்திரிக்காரர் இப்படித்தான். எடுத்ததற்கும் பணிப்புறக்கணிப்பு. இவர்கள் பணி செய்வதிலும் பார்க்க, பணிப் புறக்கணிப்பில் நின்ற நாள்களே அதிகம்'' என சினந்து கொண்டார். அவரது கூற்று முழுவதும் உண்மையல்ல என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் எனக்கும் இந்த வைத்தியசாலைக்கும் 60 வருடத் தொடர்புண்டு. அவர் கொஞ்சம் மிகைப்படுத்துகிறார். அதற்காக அவரது ஆதங்கத்தை அப்படியே தட்டிக் கழித்து விடவும் முடியாது.



நோய்வாய்ப்பட்ட மக்கள் நோய் தீர ஓடிவர, இவர்கள் இப்படியாக முன்னறிவித்தல் ஏதும் இன்றி திடீர் திடீரெனப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் நோயாளர் நலனை யார் கருத்தில் கொள்வது? தற்போதும் உத்தியோகத்தர்களுக்குச் சிறு அசெளகரியம் ஏற்பட்டதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகிறார்கள். அதனால் நோயாளர்கள் அடையும் பெரும் அசெளகரியத்திற்காக எவர் பணிப் புறக்கணிப்புச் செய்வார்கள்? யார் நோயாளர்களுக்காக நீதியான முறையில் குரல் கொடுப்பார்கள்?

யாழ். வைத்தியசாலையில் பணிபுரியும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்கள் ஆரியகுளத்தை அண்டிய ஒரு வீட்டிலே தங்கி உள்ளார்கள். அந்த வீட்டை வைத்தியசாலை வாடகைக்குப் பெற்று பெண் உத்தியோகத்தர்களுக்குரிய விடுதியாகக் கொடுத்துள்ளது. அங்கே பெருமளவில் தாதிய உத்தியோகத்தர்களும், மற்றும் மருத்துவ ஆய்வுகூட பெண் தொழில்நுட்பவியலாளர்கள், ஈ.சீ.ஜி. பெண் தொழில்நுட்பவியலாளர் போன்றோரே தங்கி இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் தாதியர்களே அங்கு தங்கியிருந்தனர். பின்னர் மற்றையவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் புதிய நியமனத்தில் வந்த போது அங்கு தங்க வைக்கப்பட்டனர். தாதிய உத்தியோகத்தர்களுக்கும், பின்னர் வந்த மற்றைய உத்தியோகத்தர்களுக்கும் இடையே புரிந்துணர்வு சுமுகமாக இல்லை என்றும் தெரியவருகின்றது. இது அவ்வாறு இருக்க, அன்று இரவு இவர்கள் தங்கியிருந்த வீட்டினுள் இனம் தெரியாதவர் ஒருவர் புகுந்து தாதிய உத்தியோகத்தரைத் தாக்கினார் என்று கூறப்பட்டே பணிப் புறக்கணிப்பில் அவர்கள் நிற்பதாக தெரிவிக்கப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னரும் ஒருவர் இரவு வேளை திடீரெனப் புகுந்து பயமுறுத்தினார் என்று ஏற்கனவே இவர்கள் வைத்திசாலை நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தி இருந்தனர் எனவும் தெரிய வருகின்றது. எனவே உரிய பாதுகாப்பு தமக்கு வெளியே உள்ள விடுதியில் இல்லை என்ற தொனிப் பொருளிலேயே இவர்களது கோஷங்கள் அடங்கி இருந்தன. பலமாத காலமாக இவர்கள் வைத்தியசாலை வளாகப் பகுதியில் உள்ள விடுதிக்குள் தாம் தங்குவதற்கான பிரயத்தனங்களையும் மேற்கொண்டு வந்தும் உள்ளனர். அது கை கூடாததால் மனக் கசப்புடனே கடமையாற்றி வந்தனர் என்றும் தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க சில வருடங்களின் முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையின் கண்கிளினிக்கில் கண் சிகிச்சை தொழில் நுட்ப உத்தியோகத்தராக தென்னிலங்கையைச் சேர்ந்த ஆண் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெற்றுக் கடமையாற்றினார். திடீரென ஒரு நாள் அங்கு புகுந்த தென்னிலங்கை இளம் பெண் ஒருவர் அங்கு கடமையில் இருந்த ஆண் கண்சிகிச்சை தொழில்நுட்பவியலாளரைக் கத்தியால் தாறுமாறாகத் தாக்கினார். ஆனால் யாரும் அப்போது போராட்டம் நடத்தவில்லை. எனவே இந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் இலாபம் தேட நினைப்பவர்கள் மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொள்வது நல்லது.

யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும்தான் என்றில்லை, அரச நிறுவனங்கள் பலவற்றிலும் இன்று இதே நிலைதான். பல்கலைக்கழகங்களைப் பாருங்கள்! அந்தப் பிரச்சினையை அரசும் முடிவுக்குக் கொண்டு வருவதாக இல்லை; பல்கலை ஆசிரியர்களும் விடுவதாக இல்லை. இப்படியே தொடர்கிறது புறக்கணிப்பு.

போராடுவது அவர்கள் உரிமைதான்; அதையாரும் மறுக்க முடியாது. ஆனால் எவ்வளவு காலத்துக்குப் போராடுவது, எப்போதெல்லாம் போராடுவது என்பதில் மக்களின் உரிமைகளையும் பார்க்க வேண்டும் அல்லவா?

■ சோபா

# காலத்தின் தேவையை உணர்ந்து செயற்படுவோம்

யாழ்ப்பாணத்தில் புதிது புதிதாக ஒவ்வொரு செயற்பாடுகளும் முளைவிடத் தொடங்கியுள்ளன. கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொலை, கொள்ளை , வன்முறை , தற்கொலை , அடிதடி என அனைத்தும் ஒருமித்து மலிந்து விட்ட பிரதேசமாக மாறிக் கொண்டிருக்கிறது யாழ்ப்பாணம்.

கடந்த காலச்சூழலும், தற்காலச் சூழலும் மாறுபட்ட ஒன்றாக முன்னேற்றம் அடைந்திருந்தாலும் அவற்றையும் தாண்டி வன்முறைச் சம்பவங்கள் தாராளமாக ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வன்முறைகள் இடம்பெறுவதற்கான முக்கிய காரணங்கள் என்ன? இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப்படவில்லை?

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தகைய மாற்றங்களால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் சந்திக்கப் போவது என்ன? இதனை துறை சார்ந்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்ரநெற் உலகில் இளைய தலைமுறையும், தொலைக் காட்சி உலகில் தற்கால தலைமுறையும் என வாழ்க்கையை வாழ நினைப்பதால் கிடைக்கும் பெறுபேறுகளே இவையாகவுள்ளது. எமது பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது. இதனை நாம் அனைவரும் வரவேற்கவும் வேண்டும். ஆனால் அபிவிருத்தியில் பூசப்படும் சேறுகளால் கிடைக்கும் பலாபலன்கள் யாழ்ப்பாணத்தை அழித்து விட அனுமதிக்கக் கூடாது.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைமுறை என்பதைக் கருத்தில் கொண்டு எமது பாரம்பரிய பண்பாடுகளை கிரகித்து அதன் வழி செயற்பட வழிநடத்தப்பட வேண்டியது அவசியமாகும். கொலையும் கொள்ளையும் எமக்கு எதுவும் கற்றுக் கொடுக்கப் போவதில்லை. மனிதன் சுதந்திரம் அற்று பீதியுடன் தமது அன்றாட பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கும் நிலை சூழலை மேலும் மோசமாகப் பாதிக்கும். இதனையே யாழ்ப்பாண பொது மக்கள் இப்போது சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் நாகரிக மாற்றமே என்கிறவர்கள் பலர். ஆனால் இவை எல்லாம் இடம் பெறுவதற்கு சாதகமான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுப்பது நாம்தான் என்பதையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

குற்றங்கள் எம்மைத் தேடி வரப்போவதில்லை. நாம் தான் அதைத் தேடிப் போகின்றோம். என்பதையும் அதனை உருவாக்குகின்றோம் என்பதனையும் மறுக்க முடியாது. சம்பவங்கள் இடம்பெற்று முடிந்த பின்னர் அதற்கு நியாயம் தேடுவதிலும், மற்றவர் மீது பழி சுமத்துவதிலும் அக்கறை கொள்கின்றோம். ஆனால் இவையெல்லாம் நடைபெறுவதற்கு முன்பாக தடைபோட ஏன் நாம் நிற்பதில்லை?




முன்னோர்கள் விட்டுச்சென்ற பாரம்பரிய எமைவிட்டு மறைந்து போய்க்கொண்டு இருப்பதால் பலவற்றை இன்றைய தேவைக்கு ஏற்ப நாமே உருவாக்கி அதன் வழிநடத்தைகளைப் பின்பற்றப் பழகிவிட்டோம். அத்துடன் இணையத் தளங்களின் பிரவேசம், தொலைக்காட்சி நாடகங்கள் சினிமாப்பாணியில் வாழ்க்கை முறை என அனைத்தும் வன்முறைகளை தாராளமாக உருவாக்கிக்கொண்டிருக்கின்றோம்.

சம்பவங்கள் நடைபெற்று முடிந்த பின்னர் போருக்கு முன், போருக்குப் பின் என்று பட்டியலிட்டு குற்றச்செயல்களை அடுக்கிக்கொண்டு போவதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இத்தகைய மாற்றங்களால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் சந்திக்கப் போவது என்ன? இதனை துறை சார்ந்த அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நவநாகரீக மோகத்தில் சிக்குண்டுள்ள இன்றைய இளம் தலைமுறையை மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் தேவை. காலா காலமாக பேணப்பட்டு வந்த எமது விழுமியங்கள் சிதைவடைந்து அதன் அடிச்சுவடுகள் தெரியாத அளவுக்கு மறைந்து போவதற்கு நாம் இடமளிக்ககூடாது.

கடந்த கால வாழ்க்கை முறை எமக்கு கற்றுத்தந்த பாடங்களை நினைவு மீட்டி எதிர்காலத்தை சிறந்ததாக்குவதே மனிதனுக்கு அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தப் பத்து நாளும் பத்து யுகம்

அது ஒரு மனநோய் மருத்துவமனை. புத்தி சுவாதீனமில்லாதவர்கள் அதிகமானோர் அங்கே தங்கி சிகிச்சை பெற்றுவந்தார்கள்.

ஒரு மனிதன் அதிலே பத்து ஆண்டுகாலமாகத் தங்கியிருந்தான்.

'தான் இப்போது குணமடைந்துவிட்டதாக ஒரு நாள் அவனுக்குத் தோன்றியது!'

இதை உடனே மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டுமே! டொக்டரிடம் போனான். ''டொக்டர்! என்னை நீங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடலாம் என்று நினைக்கிறேன்!''

''அப்படியா! மிக்க மகிழ்ச்சி. அனுப்பிவிடலாம் தான். ஆனால், அதற்கு முன் உன்னைச் சிறிது சோதனை செய்து பார்த்துவிடுகிறேன் ... இன்னும் ஒரு பத்து நாள் இங்கே தங்கியிருக்க முடியுமா?''

''பத்து வருடங்களாக இங்கே தங்கியிருக்கிறேன் ... இன்னும் ஒரு பத்து நாள் இருக்க முடியாதா டொக்டர் ?''

''மிக்க மகிழ்ச்சி! ''

டொக்டர் எல்லா சோதனைகளையும் செய்து பார்த்தார். அந்த மனிதன் முழுமையாகக் குணம் அடைந்திருப்பது தெரியவந்தது.

''சரி ... நீ போகலாம்! '' என்றார்.

இவன் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தான்.

அதன் பின்னர் பத்திரிகையாளர்கள் இவனைத் தேடி வந்தார்கள். சில கேள்விகள் கேட்டார்கள்.

''உங்களின் மருத்துவமனை அனுபவங்களைப் பற்றி சொல்லுங்கள்.?''

அந்த மனிதர் சுருக்கமாகச் சொன்னான் .

''ஐயா! நான் பத்து வருடங்கள் புத்திசுவாதீனமில்லாமல் மனநல மருத்துவமனையில் பலருடன் தங்கியிருந்தேன். அது எனக்குப் பத்து விநாடியாகப் போய்விட்டது. அதன் பின்னர் பத்துநாள்கள் அவர்களுக்கு மத்தியில் புத்தி தெளிந்தவனாக இருந்தேன். அது எனக்குப் பத்து யுகமாகத் தோன்றுகிறது!''

நண்பர்களே!

இதுதான் வாழ்க்கையின் இரகசியம்.

சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். வாழ்க்கைப் பயணம் உங்களுக்குச் சுகமாக இருக்கும்.

''சரி எப்படி அனுசரிப்பது?

முதலில் எல்லாம் எனக்குத் தெரியும் என்கிற எண்ணத்தை விரட்டுங்கள். 'எனக்குத் தெரியாத பல உண்மைகள் என்னைச் சுற்றியிருக்கிற மற்றவர்களுக்குப் புரியும் ' என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

எனக்குத் தெரியாதது மற்றவர்களுக்கும் தெரியாது என்கிற மனநிலை தான், நம் அனுசரிப்புத் தன்மைக்குத் தடையாக இருக்கிறது .

சிறிது யோசித்துப் பாருங்கள்...


மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் இப்படித்தான் நினைக்கிறார்கள்.

ஒரு மனநோய் மருத்துவமனை . மாலை நேரம். அதன் உள்ளே ஒரு சுவரில் காதை வைத்தபடி நின்று கொண்டிருந்தான் ஒருவன். டொக்டர் ஒருவர் அந்த வழியாக வந்தார். அவனைக் கவனித்தார்.

உடனே அவரும் அதேபோல் சுவரில் காதை வைத்துக் கேட்டார்.

பின்னர் அவனிடம் , ''ஒன்றும் கேட்கவில்லையே?'' என்றார்.

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.




'பளார்! ' என்று டொக்டரை அறைந்துவிட்டுச் சொன்னான்:

''காலையிலேயிருந்து நான் அவதானித்துக் கொண்டு நிற்கின்றேன்... எனக்கே ஒன்றும் கேட்கவில்லை! உங்களுக்கு மட்டும் கேட்குமா?''

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அற்புதங்கள் நிகழ்த்தி அசர வைத்த மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி



**லக்ஸ்மன்**

போத்துக்கேயர் கட்டிய ஆலயம் ஒன்றுக்கு மணி பொருத்தும் போது அது அறுந்து விழுந்ததாகவும் அதனால் அதிர்ச்சி அடைந்த ஆலயக் குருவின் கனவில் தோன்றிய அம்மன் அவருக்கு வழி காட்டியதாகவும் அதன் படி செயற்பட்ட அந்த வெளிநாட்டைச் சேர்ந்த குருவானவர் அம்மன் கோயிலுக்கு மணி ஒன்றை வழங்கியதாகவும் கூறப்படும் பழைய கதை மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்மனுக்குரியதாக அங்குள்ள மக்கள் கூறுகிறார்கள்.

மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலயவரலாறுகள் ஆவணப்படுத்தப்படாமையால் முழுமையாகத் தெரிந்துகொள்ள இயலாது போய்விட்டது. எனினும் ஊர்ப்பெரியவர்களின் கூற்றுப்படி சிறுவர்களே இதற்கான ஆரம்பத்தின் கதைக்குரியவர்களாக உள்ளனர். பண்டைக் காலத்தில் தமது வீட்டுக் கால் நடைகளை வெளியிடங்களில் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வதில் அவர்களது வகிபாகம் முன்னிலையில் இருந்துள்ளது.

மண்டைதீவில் சிறுவர்களின் மனதுக்குப் பிடித்தமான இடமாக இருந்தது வேப்பந்திடல் பகுதி. இங்கே சோலையென வேப்பம் மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் சிறுவர்கள் தாம் கொண்டு வரும் கால்நடைகளை அந்தப்பகுதியில் மேய்வதற்கு விட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரென அவர்களுக்கு முன்பாக ஒரு வயதான மூதாட்டியாக அம்பாள் காட்சிளித்தார். பாட்டியைக் கண்ட சிறுவர்கள் சந்தோசத்தில் மிதந்ததுடன் அவரது தாகத்திற்கு தண்ணீர் வழங்க விரும்பிச் சென்று பாலுடன் திரும்பினர். அந்த சமயம் மூதாட்டியைக் காணாது கவலையுடன் வேப்பம் மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டதாகவும் அப்போது மரத்திலிருந்து பால் வெளிவந்ததாகவும் கூறும் மக்கள் இது அம்பாளின் கடாட்சமே எனக்கொண்டு சிறிய குடிசைக் கோயில் ஒன்றை அமைத்தனர் எனவும் தெரிவித்தனர். இந்த ஆலயம் சோழர், பல்லவர் காலங்களைச் சேர்ந்தது என்பதும் அவர்களது நம்பிக்கை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தனது பரிவாரங்களுடன் தீர்த்தவாரி எனப்படும் கடற்கரைப்பகுதியில் சங்கு மணி யோசை, சேமக்கலம் போன்ற வாத்தியங்களுடன் வெள்ளைச் சேலை தரித்து சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தாள். பின்நாளில் சின்னத்தம்பி என்பவருக்கு கனவில் காட்சியளித்தாள் எனவும் அவர் ஊர் மக்களுடன் உரையாடி குடிசைக் கோயிலை அமைத்து வழிபட்டதாகவும் கூடச்சொல்லப் படுகின்றது. இங்கு காணப்படும் விக்கிரகம் சோழர் பல்லவர் காலத்தைச் சேர்ந்த விக்கிரகங்களாகவே காணப்படுகின்றது . ஆலயத்தை அண்மித்த செம்பியன் தோட்டம் என்னும் பகுதியில் இராஜேந்திர சோழன், கங்கை கொண்டசோழன் எனப்படும் இராஜேந்திரன் அங்கு தங்கியிருந்ததாகவும் தீவின் வரலாற்றில் பேசப்படுகின்றது. இந்தப்பிரதேசம் தற்சமயம் கடற்படைத்தளமாக உள்ளது.

ஆலயத்தை அண்மித்த செம்பியன் தோட்டம் என்னும் பகுதியில் இராஜேந்திர சோழன், கங்கை கொண்டசோழன் எனப்படும் இராஜேந்திரன் அங்கு தங்கியிருந்ததாகவும் தீவின் வரலாற்றில் பேசப்படுகின்றது. இந்தப் பிரதேசம் தற்சமயம் கடற்படைத் தளமாக உள்ளது.

மண்டைதீவு மக்கள் ஆன்மிக வழிபாட்டில் மிகுந்த அக்கறையுடையவர்கள். முன்னர் குறிப்பிட்ட சின்னத்தம்பி என்பவருக்கு அம்பாள் நேரடித் தரிசனம் கொடுத்ததை அடுத்து அவரால் குடிசைக் கோயில் அமைக்கப்பட்டதுடன் அங்கு ஆன்மிகம் வளர்ச்சியடைந்ததென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

படிப்படியாக வளர்ச்சியடைந்த இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் பொங்கல் சித்திரைப் புத்தாண்டு போன்ற முக்கிய தினங்களில் சிறப்புப்பூசைகள் நடைபெற்று வந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் 1991 இல் மக்கள் முழுமையாக இடம்பெயர மண்டைதீவு வெறிச்சோடி சேதமுற்று காடாக மாறிப்போக இங்கு பூசைகள் இடம்பெறாமல் இருண்டுபோயுள்ளது.

மீள்குடியமர்ந்த மக்கள் மண்டைதீவின் சிறப்புக்கு அருள்பாலித்த முத்துமாரி அம்பாளின் ஆலயத்தைப் புனரமைக்க ஆர்வம் காட்டினார்கள். பொதுமக்களும் உரிமையாளர்களும் ஒருங்கிணைந்து புதிய பரிபாலனசபையை அமைத்து ஆலயப்புனரமைப்புப்பணிகளை முன்னெடுத்தனர். தற்போதைய பரிபாலனசபைத் தலைவராக கு.நடராசாவும் செயலாளராக அ.ஸ்ரீபத்மராசாவும் பொருளாளராகவும் கி.யோகநாதனும் முன்னாள் ஆலய நிர்வாகிகளாக இ.சின்னத்தம்பி, வெற்றிவேல் செல்லத்தம்பி கனகசபை அம்பலவாணர் ஆகியோரது காலத்திலும் ஆலயப்பணிகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

சிவபுரம் எனச்சொல்லப்படும் இங்கே தொடர்ந்து இடம்பெற்ற உற்சவங்கள் விசேடதினங்களில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் வருவது வழமையாக இருந்தது . காணாமற் போன மகனைத் தேடி அலைந்த தந்தை இறுதியாக முத்துமாரி அம்மன் ஆலயத்தைத் தஞ்சமடைந்து அம்பாளிடம் வேண்டுதல் செய்ததாகவும் அம்பாள் தனது வேண்டுதலை ஏற்று மகனைக் கோவிலில் கொண்டு வந்து சேர்த்துள்ளார். அம்பாள் அருள்பாலித்ததாகவும் முத்துமாரி அம்பாள் கோவில் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் புனரமைப்பிலும் வளர்ச்சியிலும் ஆரம்பகால அர்ச்சகராக இருந்த சாம்பசிவக்குருக்கள் உட்பட பெருமளவுமக்கள் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஆலயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் மக்கள் ஆர்வமுடன் உள்ளனர். முடிந்தவரை உதவுகிறார்கள். சிதிலமடைந்து பற்றைக்காடாகக் காட்சியளித்த முத்துமாரி அம்மன் ஆலயம் புனரமைக்கப்பட்டு இருபது வருடங்களின் பின் கடந்த 5.7.2012 கும்பாபிஷேகம் நடைபெற அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பே கிடைத்துள்ளது. 35 வருடங்களாக பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆலயகடமைகளை நிறைவேற்றி வருகின்றார்.

மண்டைதீவின் சிவசக்தி இந்து இளைஞர் மன்றம் இடம்பெயர்ந்து மீளத்திரும்பியதும் ஆலயத்தின் நிலைமைகளைஅவதானித்து உடனடியாகவே சிரமதானப் பணிகளை முன்னெடுத்து துப்புரவுப் பணிகளை மேற்கொண்டதுடன் புனரமைப்புப் பணிகளிலும் சேவையை வழங்கியிருந்தது. புதிய மண்டபம், சப்பறம் தேர்களுக்கான பீடங்கள் அமைக்க வேண்டியுள்ளதாகத் தெரிகின்றது. இந்த ஆலயத்தின் புதிய பரிபாலனசபைத் தெரிவும் கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மண்டைதீவின்மக்களையும் சிறப்புக்களையும் காத்து நிற்கும் அன்னையின் வேப்பந்திடல் முத்துமாரி அம்பாளின் அருள்வேண்டி நிற்கும் அந்த மக்கள் ஆலயத்தின் தேவைகளை நிறைவு செய்யத் தம்மை அர்ப்பணித்துள்ளனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் தமிழர்கள் அரசை தோற்கடித்தனர் மீண்டும்

## நன்றி கூறுகின்றார் திருமலை நகரசபைத் தலைவர்

திருகோணமலை,செப்.13
அரசின் கொள்கையையோ, செயற்பாட்டையோ கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இந்தத் தேர்தலிலும் அவர்கள் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ் மக்களின் அரசியல் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை சர்வதேச சமூகத்துக்குத் தமிழ் மக்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் நடைபெற்றுமுடிந்த மாகாணசபைத் தேர்தலில் அரசைத் தோற்கடித்துள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட 12 தமிழ் உறுப்பினர்களில் ஒருவரே அரச தரப்பைச் சேர்ந்தவர் என்பதன் மூலம் இது தெளிவாகின்றது.

- இவ்வாறு திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகூடிய வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இது 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எமது கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளை விட அதிகமாகும். பல்வேறு அச்சுறுத்தல்கள், பல நெருக்கடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதோ, முதலமைச்சர் பதவி பெறுவதென்பதோ எமது நோக்கமல்ல. எமது மக்களிடம் - சர்வதேசத்திடம் தமிழ் மக்களின் ஒற்றுமையை எடுத்துக் காட்டவேண்டுமென்பதே நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தை மிகத் தெளிவாக எமது மக்கள் வழங்கியுள்ளனர் - என்றார். (ச-40)

# வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களுக்கு மீண்டும் முன்னாள் முதல்வர்களே நியமிப்பு

## கிழக்கில் ஆட்சியமைக்க மு.காவின் முடிவை எதிர்பார்க்கிறது அரசு

இரத்தினபுரி,செப்.13
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைக்கவுள்ள வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணசபைகளுக்கு முன்னாள் முதலமைச்சர்களையே மீண்டும் முதல்வர்களாக நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், கிழக்கு மாகாண சபைக்கு முதலமைச்சரின் பெயரைப் பிரேரிப்பதற்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவை அரசு எதிர்பார்த்துள்ளது எனவும் தெரியவருகின்றது.

குறிப்பாக விரும்பு வாக்குகளின் அடிப்படையிலேயே முதலமைச்சர்கள் தெரிவுசெய்யப்படுவர் என அரசு முன்னதாக அறிவித்திருந்தாலும், முக்கிய சில விடயங்களைக் கருத்திற்கொண்டு சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை வழங்குவதற்கு அது தீர்மானித்திருக்கின்றது.

இதற்கிணங்க, வடமத்திய மாகாண சபையின் முதலமைச்சராக முன்னாள் முதல்வர் பேர்டி பிரேம்லால் மீண்டும் தெரிவுசெய்யப்படவுள்ளார். அநுராதபுர மாவட்டத்தில் போட்டியிட்ட இவர் ஆளுந்தரப்பு விருப்பு வாக்குப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

இரண்டு போனஸ் அடங்கலாக 21 ஆசனங்களைக் கைப்பற்றி வடமத்திய மாகாண சபையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மீண்டும் கைப்பற்றியுள்ளமை தெரிந்ததே.

அதேவேளை, சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக முன்னாள் முதல்வர் மகிபால ஹேரத் மீண்டும் அந்த பதவியை அலங்கரிக்கவுள்ளார். 2 போனஸ் அடங்கலாக 28 ஆசனங்களை ஆளுந்தரப்பு சப்ரகமுவ மாகாண சபையில் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ச)

# குப்பைக்குள் இருந்து சிசுவின் சடலம் மீட்பு

நாவலப்பிட்டி,செப்.13
நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாக்கும்புர பிரதேசத்தின் ஓடை ஒன்றுக்கு அண்மையில் குப்பை சேகரிக்குமிடத்தில் உருக்குலைந்த நிலையில் நான்குமாத சிசுவொன்றின் சடலமொன்றை நாவலப்பிட்டி நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று புதன்கிழமை காலை 8 மணிக்கு மீட்டுள்ளனர்.

குறித்த இடத்தில் நாவலப்பிட்டி நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் குப்பைகளைத் தரம் பிரித்துக் கொண்டிருந்தபோது பையொன்றினால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலத்தைக் கண்டுள்ளனர்.

கருச்சிதைவு காரணமாக இந்தச் சிசு இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# கூட்டமைப்பின் ஆட்சியை தடுக்கவே வாக்கு மோசடி

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,செப்.13
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆட்சியமைப்பதைத் தடுப்பதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு தமது ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மோசடி நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. முதற்கட்ட வாக்குக் கணக்கெடுப்பில் ஒரு லட்சத்து 20ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்திருந்தன. அதனைத் திரும்பவும் கணக்கிடவேண்டும் என வாக்கு எண்ணும் நிலையங்களின் வாக்கு எண்ணிக்கையில் குளறுபடிகளைச் செய்த தேர்தல் அதிகாரியும் அரச தரப்பும் பின்னர் ஒரு லட்சத்து 4,682 வாக்குகள் தமிழரசுக்கட்சிக்கு கிடைத்தாக அறிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 7 ஆசனங்கள் கிடைக்க இருந்த நிலையில் இந்த மோசடியின் மூலம் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டது. ஆளும் கட்சிக்கு ஒரு ஆசனம் கூட்டப்பட்டது. தமிழரசுக்கட்சியிடமிருந்து அபகரிக்கப்பட்ட அந்த வாக்கு மூலம் கிடைத்த உறுப்பினர் பதவி தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என அரசு மேலிடம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ஆளுந்தரப்பின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் ஆறாவது இடத்திலிருந்த பிள்ளையான் திடீரென முதலாம் இடத்துக்குக் கொண்டுவரப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிள்ளையானால் எப்படி 20ஆயிரத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற முடிந்தது. ஆறாம் இடத்தில் இருந்த பிள்ளையான் எப்படி முதலாம் இடத்துக்கு வந்தார் என்ற சந்தேகம் பெரும்பாலான முஸ்லிம்களிடம் காணப்படுகிறது.



பிள்ளையான் விருப்பு வாக்கில் தோற்றுப்போனதைக் கண்டவுடன் வாக்கு எண்ணும் நிலையத்திலிருந்து தேர்தல் தினமான சனிக்கிழமை இரவே வெளியேறியிருந்தார். பின்னர் முதலாம் இடத்துக்கு வெல்லவைக்கப்பட்ட பின்னர் கொழும்பிலிருந்து அரச உயர்மட்டம் தொலைபேசியில் கூறியதன் பின்னரே அவர் வாக்கு எண்ணும் நிலையத்துக்கு வந்தார் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக வெளியான பின்னரே தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட தமிழ், முஸ்லிம் உத்தியோகத்தர்கள் ஊடாக இதனை நாம் அறிந்துகொண்டோம். முன்னர் நமக்கு தெரிய வந்திருந்தால் தேர்தல் ஆணையாளருடன் தொடர்புகொண்டு உடனே நாம் பெறுபேறுகளை நிறுத்தி வைத்திருப்போம். மட்டக்களப்பில் தமிழ்த் தேயசிக் கூட்டமைப்புக்கு ஏழு ஆசனங்களைப் பெறக்கூடியவாய்ப்பிருந்தது. அத்துடன், போனஸ் ஆசனங்களையும் பெறக்கூடிய வாய்ப்பிருந்தது. ஆனால், இவை இறுதி நேரத்தில் திட்டமிட்ட வகையில் தடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கிழக்கு மக்கள் அமோக வெற்றியீட்டச் செய்துள்ளனர். கிழக்கில் தமிழ் மக்களின் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை மக்கள் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளனர்.

இராஜதந்திர ரீதியிலான விடுதலைப் போராட்டத்துக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தங்களது பூரண ஆதரவை வழங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் இந்த அரசுக்கு சிறந்த செய்தியை வழங்கியுள்ளது. தமிழ் மக்களுக்கு ஒரு சிறந்த தீர்வுத்திட்டத்தை வழங்கவேண்டும் என்ற செய்தியை இந்த அரசுக்கு வழங்கியுள்ளது. - என்றார்.

# தோட்டப் பகுதிகளில் வீதிகள் அமைக்க நிதி

## பிரபா எம்.பி. தெரிவிப்பு

நுவரெலியா,செப்.13
பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் அவிசாவளை, தெரணியகல மற்றும் களுத்துறை பிரதேசங்களிலுள்ள பல தோட்டங்களுக்கு பாதைகளை அமைப்பதற்காக 250 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

நுவரெலியா, பதுளை மாவட்டங்களைப் பொறுத்த வரையில் அங்கு தமிழ் நாடாளுமன்ற மாகாணசபை உறுப்பினர்கள் அதிகமாக இருப்பதனால் ஓரளவு அபிவிருத்தி இடம்பெறுகின்றது. ஆனால் களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாததினால் எவ்வித அபிவிருத்தியும் நடைபெறுவதில்லை என்று அவர் கூறினார்.

தேர்தல் காலங்களுக்கு மட்டும் தமிழ் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவோம் என்று பேசிவருகிறார்களேயொழிய அவர்களைப் பற்றி எவ்வித அக்கறையும் மலையகத் தலைவர்களுக்கு இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பலா மரக்குற்றிகளை திருடியவருக்குச் சிறை

கம்பளை,செப்.13
கம்பளை நீதிவான் இல்லத்தில் பலாமரக்குற்றிகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை பதில் நீதிவான் ஹிரான் உடுகம நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

கம்பளை நகரின் பொது இடங்களில் மதுபோதையில் பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்து அட்டகாசம் புரிந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கடந்த வாரம் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது சந்தேகநபருக்கு கம்பளை நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் சுற்றுப்புறச்சூழலை சுத்திகரிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனால் சந்தேகநபர் நீதிவானின் இல்லத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த போது குறித்த பலாமரக் குற்றிகளையும் வாழைக் குலையொன்றையும் திருடிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கிழக்கு மாகாணசபை ஆட்சி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் கட்சியின் தவிசாளர் [illegible], ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்த மாகா[illegible] உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் சிறிய வேலைக்கும் அதிக முயற்சி தேவைப்படலாம். பொறுமையுடன் செயற்படுவதால் மட்டுமே செயற்றிட்டம் நிறைவேறும். சகதொழில் சார்ந்த எவருடனும் சச்சரவு கூடாது. குறைந்தளவில் பணவரவு இருக்கும். போக்குவரத்தில் கவனமாக இருப்பது நல்லது.

**இடபம்:** கடந்த காலத்தில் திகைப்பு தந்த பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் உண்டாகும். தொழில் வளர கூடுதல் மூலதனம் செய்வீர்கள். நண்பர், உறவினர் அதிக அன்பு பாராட்டுவர்.

**மிதுனம்:** உங்களிடம் கடந்த காலத்தில் பகைமை பேசியவர்களால் நெருக்குதல் தன்மை உருவாக்கலாம். நிதானம், சமயோசித செயலால் நன்மை பெற முயற்சிப்பீர்கள். நடைமுறை பணச்செலவு அதிரிப்பதால் மனவருத்தம் ஏற்படலாம்.

**கடகம்:** நல்லவர்களின் நட்பு கிடைத்து மன மகிழ்ச்சி பெறுவீர்கள். புதிய திட்டங்களை செயல்படுத்தவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில் வளர்ச்சி அபரிமிதமான முன்னேற்றம் தரும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்களின் திறமையான செயல் ஒன்றை சிலர் அவமதிக்கும் வகையில் விமர்சனம் செய்வர். உங்களின் யதார்த்த செயற்பாட்டில் சிறு மாறுதல் இருக்கும். தொழில் வகையில் பணிச்சுமை அதிகரிக்கும். திட்டமிட்ட பயணத்தில் மாறுதல் உண்டு.

**கன்னி:** நம்பிக்கை இழக்க வைத்த செயல் ஒன்று திருப்திகரமாக வெற்றி தரும். தொழில் வளர்ச்சியில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். நீங்கள் எதிர்ப்பார்த்த நண்பர் உங்களைத் தேடி வரலாம்.

**நாளை**

ஆவணி - 29 வெள்ளிக்கிழமை 14.09.2012
திதி: திரயோதசி மு.ப 10.24 வரை
நட்சத்திரம்: மகம் மரணை பி.இ 04.31 வரை
சுபநேரம்: 06.03- 07.33 வரை
ராகுகாலம்: 10.33- 12.03 வரை

**துலாம்:** உங்கள் உழைப்பின் தன்மையை பலரும் பாராட்டுவர். புதிய செயல்களை நிறைவேற்ற மனதில் உத்வேகம் பிறக்கும். சராசரி பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர்.

**விருச்சிகம்:** உங்கள் உறவினர்களை தேவையின்றி விமர்சிக்கக் கூடாது. வாக்குவாதமும், மனக்கிலேசமும் வராமல் தவிர்க்கும் வகையில் செயற்படுவது நல்லது. சொந்த முயற்சியினால் மட்டுமே தொழிலில் உருவான குளறுபடி சரியாகும். பண சேமிப்பு குறைவதுடன் புதிய கடன் உருவாகலாம்.

**தனுசு:** உங்களுக்கு சிலர் தந்த வாக்குறுதியை மீறி நடக்கலாம். பெருந்தன்மை குணத்தைப் பின்பற்றுவதால் மட்டுமே சிரமம் விலகும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும். செலவுகளில் சிக்கன நடவடிக்கை நல்லது.

**மகரம்:** உங்கள் குடும்ப நலனில் அக்கறை உள்ள ஒருவரைச் சந்திப்பீர்கள். இதனால் வாழ்க்கை நடைமுறையில் நம்பிக்கை தரும் மாற்றம் உருவாகும். தொழில் வளர்ச்சி பார்த்து பகைவரும் வியப்படைவர். உத்தியோகத்தர், நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர்.

**கும்பம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மையைத் தரும். தொழில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். சராசரி பண வரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**மீனம்:** எதிர் மனப்பான்மை உள்ளவர்களிடம் விலகிச் செல்வதால் மட்டுமே சிரமத்தைத் தவிர்க்கலாம். குடும்ப உறுப் பினர்களின் ஆதரவு மனதிற்கு நம்பிக்கையைத் தரும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்வதில் பரிசீலனை அவசியம். பணவரவு எதிர்ப்பார்த்ததை விட குறைவாக இருக்கும்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 5 | | | | | |
| | | 6 | | | 3 | 8 | 7 | |
| 8 | | | | | | | 2 | |
| 6 | 8 | | 2 | 2 | | 7 | | 9 |
| | | 7 | 8 | 1 | 4 | 6 | | |
| 5 | | 2 | | 9 | 7 | | 3 | 8 |
| | 7 | | | | | | | 3 |
| | 3 | 8 | 1 | | | 4 | | |
| | | | | | 8 | 5 | 9 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 7 | 4 | 2 | 8 | 1 | 3 | 6 |
| 8 | 3 | 6 | 7 | 5 | 1 | 9 | 4 | 2 |
| 2 | 1 | 4 | 6 | 9 | 3 | 7 | 8 | 5 |
| 3 | 4 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 | 7 |
| 6 | 7 | 2 | 8 | 3 | 5 | 4 | 1 | 9 |
| 5 | 8 | 9 | 1 | 4 | 7 | 2 | 6 | 3 |
| 4 | 6 | 8 | 3 | 7 | 9 | 5 | 2 | 1 |
| 7 | 2 | 3 | 5 | 1 | 4 | 6 | 9 | 8 |
| 1 | 9 | 5 | 2 | 8 | 6 | 3 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்

திரு.திருமதி சிங்கராசா றஞ்சிதமலர்



தோற்றம் 09.02.1954

தோற்றம் 03.01.1959

மறைவு
09.09.2007

ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும் மறவாது
மலர்ந்த மலராய் மனதினில் உம் நினைவுகள்.

கபட்டி.
077 606 3173 (22802)(5-6)
பிள்ளைகள்.

## கன்ரர் வாகனம் விற்பனைக்கு

227 - XXXX இலக்க வெள்ளை நிற, 6 ஆணி சில்லு, 14 ½ அடி கன்ரர் விற்பனைக்கு. தொடர்பு: 0778860886 (22898)(2-6)

## சாரதி தேவை

கிளிநொச்சியில் இயங்கும் வியாபார நிறுவனத்துக்கு உடன் சாரதி தேவை.
லொறி, கன்ரர் வகை வாகனம் ஓடக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
**JAFFNA ELECTRICAL,**
**135A, A-9 வீதி,**
**கிளிநொச்சி.**
**T.P. 021 228 0008** (F/3318)(2-6)

## யாழ்ப்பாணம் மாநகரசபை வீதிக்குப் பெயர் சூட்டுதல்

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் வீதிகளுக்குப் பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்குப் பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/ அபிப்பிராயங்களை எதிர்வரும் 2012.09.28 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
01. 341, கோவில் வீதிக்கு அருகிலுள்ள வீதி (துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகில்) - செல்லப்பா சுவாமிகள் வீதி என்றும்
02. 141/2, கோவில் வீதிக்கு அருகிலுள்ள வீதி (மங்கையர்க்கரசி வித்தியாலய அருகில்) - யோகர் சுவாமிகள் வீதி என்றும் மாற்றப்படுகின்றது.
திருமதி யோ.பற்குணராஜா
முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம். (F/3323)(2-6)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
28.06.1954
உதிர்வு
06.09.2010

**அமரர் நடராஜா கனகலிங்கம்**

(மரக்காலை உரிமையாளர்) திதி:-13.09.2012

ஊரும் உலகும் போற்றிட
உத்தம வாழ்வு வாழ்ந்திரே - அப்பா
அகவை ஐம்பத்தாறு கழிந்ததும் - நீங்கள்
ஆண்டவன் மலர்ப்பாதம் சென்று
ஆண்டுகள் இரண்டு சென்று விட்டதே - அப்பா
நீங்காத எங்கள் பாசம் உங்கள்
பாதம் சேரும் வரை மாறாது என் அன்புக் கணவரே

இல.42/1, அராலி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (22669) (2,6,7)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத் திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது அடியில் ... பெறவேண்டுகின்றேன்.
(22685)(2-7-6) - அடியாள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22 * 10 * 1976



உதிர்வு
26 * 09 * 2008

அமரர் மகேஸ்வரன் பரந்தாமன்

திதி: துவாதசி

காலவெள்ளத்தில் கோல விழிகள்
கரைந்து போனது
நீளமென நாம் நினைத்த
நிம்மதி தொலைந்து போனது
ஆண்மகன் நீ என்றிருக்க
பாதியிலே சென்று விட்டாய்
நான்காண்டு போய்விட சோகங்கள் தீராமல்
உம் நினைவுடன் நாம்

காரைக்கலட்டி,
தும்பளை, பருத்தித்துறை (22769)(9-6)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயத்தாள் அச்சிடும்போது மும்மொழிக்கும் சமசந்தர்ப்பம்

## மத்திய வங்கி அறிவிப்பு



கொழும்பு,செப்.13
எதிர்வரும் காலங்களில் நாணயத்தாள் அச்சிடும் போது மும்மொழிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தினால் மனித உரிமை ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணைகளின் போதே மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தில் சிங்களம், தமிழ் மொழிகளுக்கு சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், நாணயத்தாள்களை அச்சிடும்போது இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதில்லை என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் சார்பில் அச்சிட்டு வெளியிடப்படும் இந்த நாணயத்தாள் நாட்டின் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் செல்லுபடியாகும் என சிங்கள மொழியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த வாசகம் தமிழ் மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் நாணயத்தாள் அச்சீடு செய்யும் போது மும்மொழிகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படுமென மத்தியவங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரங்களை அதிகரியுங்கள்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு,செப்.13
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பண்டார தெரிவித்தார்.

இலங்கையில் 95 சதவீதமான மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகவே முன்வைக்கப்படுகின்றன. எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தற்போது பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்று அவர் கூறினார்.

இந்நிலையில் ஆணைக்குழுவின் அதிகாரங்களை அதிகரித்து, சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதியிடம் இருந்தும் பொலிஸ் மா அதிபரிடம் இருந்தும் சாதகமான பதில் கிடைத்துள்ளது எனவும், இதற்கான யோசனை சட்டவாக்கத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸ் அதிகாரம் செல்லுபடியாகும்

## நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி தெரிவிப்பு

கொழும்பு,செப்.13
பல்கலைக்கழக மாணவர்கள் கலகத்தில் ஈடுபட்டால் பொலிஸார் அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியும் என்று கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி தெரிவித்தார்.

பொதுநலவாய நாடுகள் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் கலகத்தில் ஈடுபட்டால் அதனை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

கலகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றின் உத்தரவு அவசியமில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநாடு நடைபெறும் காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவித்து பொலிஸார் நீதிமன்றின் உதவியை நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் 58ஆவது மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. இந்த மாநாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

# கிணற்றிலிருந்து சடலங்கள் மீட்பு

கொழும்பு,செப்.13
தம்புள்ள பிரதேசத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து தாய் மற்றும் அவரது ஒன்றரை வயது மகளினது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் நேற்றுப் புதன்கிழமை காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சடலங்கள் தம்புள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# வாகன விபத்தில் இரண்டு பேர் சாவு

கொழும்பு,செப்.13
திஸ்ஸமஹரகம பகுதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் இறந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திஸ்ஸமஹரகம பகுதியில் அதீத வேகத்தில் சென்ற ஜீப் ரக வாகனமொன்று பாதையைவிட்டு விலகி மரத்துடன் மோதியதாலேயே குறித்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மூன்று மாதத்தில் 443 கோடி சேமிப்பு

## மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு

கொழும்பு,செப்.13
நாளைய தினத்துக்காக இன்று மின்சாரத்தைச் சேமிப்போம் வேலைத்திட்டத்துக்கு 19 லட்சம் மின் பாவனையாளர்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் மூலமாக கடந்த மூன்று மாத காலப் பகுதிக்குள் 84 ஜிகாவோட் மின்சாரம் சேமிக்கப்பட்டுள்ளதாக குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் மூலமாக 443 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

**நாளைய தினத்துக்காக இன்று மின்சாரத்தைச் சேமிப்போம் வேலைத்திட்டத்துக்கு 19 லட்சம் மின் பாவனையாளர்கள் ஆதரவு.**

இந்த வேலைத்திட்டம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# அரவிந்த பெரேரா திடீர் பணி நீக்கம்

கொழும்பு,செப்.13
உடன்நடைமுறைக்கு வரும் வகையில் நீதிமன்ற சேவை ஆணைக்குழு சபையின் தீர்மானத்தின்படி கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அரவிந்த பெரேரா பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நீதிபதி தொடர்பில் நீதிமன்ற சேவை ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றைப் பரிசீலித்துப் பார்த்ததன் பின்னர் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அரவிந்த பெரேரா குறித்து அண்மையில் பல ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தரம் 5 பரீட்சையில் மோசடிகள் ஏதுமில்லை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

**குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணை மூலம் மோசடிகள் இடம்பெறவில்லை.**



கொழும்பு,செப்.13
கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் போது மோசடிகள் எதுவும் இடம்பெறவில்லை என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

மோசடிகள் இடம்பெற்றதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டதை அடுத்தே மோசடிகள் இடம்பெறவில்லை என்ற தகவல் கிடைக்கப்பெற்றதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் போது குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே வினாத்தாள்கள் விநியோகிக்கப்பட்டதாகவும், பரீட்சையின் போதும் மோசடிகள் இடம்பெற்றதாகவும் ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்கவினால் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

மோசடிகள் இடம்பெற்றதாக அவருக்குத் தொலைபேசி மூலம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகக் கூறி அவருக்கு கிடைத்த தொலைபேசி இலக்கங்களை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர், ஆசிரியர் சேவைச் சங்க செயலாளருடன் தொடர்பு கொண்ட நபர்களிடம் வாக்குமூலங்களையும் பதிவுசெய்துகொண்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து, குறித்த பரீட்சையின் போது எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை என தெரியவந்துள்ளது- என்றார். (ச)

# முன்னேஸ்வரம் மிருகபலி பூசையை நிறுத்த அதிகாரம் இல்லை

## நீதிவான் தெரிவிப்பு



கொழும்பு,செப்.13
சிலாபம், முன்னேஸ்வரம் பத்ரகாளியம்மன் கோயிலில் வருடாந்தம் இடம்பெறும் மிருகபலி பூசையை நிறுத்தக்கோரி, பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு சிலாபம் மாவட்ட நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிராகரிக்கப்பட்டது.


இந்த மிருகபலி பூசையை நிறுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை என்று சிலாபம் மாவட்ட நீதிவான் ஜகத் ஏகநாயக்க தெரிவித்தார்.

'துன்ஹலே ஜாதக வியபாரய' எனும் அமைப்பின் பொதுச் செயலாளர் ஓமாரே கஸ்ஸப தேரரால், காளி கோயில் மிருகபலி பூசையை நிறுத்துமாறு சிலாபம் பொலிஸில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்றுமுன்தினம் பரிசீலித்த நீதிவான் அதனை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் சமையல் போட்டி 15.09.2012இல்



யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் IMHO இனது அனுசரணை, உதயனின் ஊடக அனுசரணையில் 15.09.2012 அன்று யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நண்பகல் 12 மணிதொடக்கம் பி.ப 2 மணிவரை மாபெரும் சமையல் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர். இதில் 120க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ள இருப்பதுடன் இப்போட்டியில் இது வரையில் நடைமுறையில் இல்லாத புதிய ஊட்டச்சத்துள்ள அனைவருக்கும் பாதுகாப்பான புதிய உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. மிகப்பெரிய அளவில் நடத்தப்படும் முதலாவது சமையல் போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் வெற்றி பெறுபவர்களின் பெயர் விவரங்கள் அவர்கள் பெற்ற புள்ளிகள், அவர்கள் தயாரித்த உணவு வகைகள் போன்ற முழு விவரங்களும், போட்டி முடிவுகளும் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். இந்தப் போட்டிக்கு 60 க்கும் அதிகமான பெரியோர்கள் நடுவர்களாக பங்கு பற்றுகிறார்கள். பல நோய்கள் ஏற்படுவதற்கு ஆரோக்கியமற்ற உணவு களே காரணமாயிருப்பதால் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் இந்த உணவு வகைகள் மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்த பெரிதும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டியில் பொது மக்களும் கலந்து கொண்டு அவர் களுக்குப் பிடித்த உணவு வகைகளை வாங்கிச் சுவைத்து வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கு உதவ முடியும். இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு இரண்டு இலட்சத்து எண்பது ஆயிரத்துக்கும் அதிகமான பணப் பரிசுகள் பகிர்ந்து அளிக்கப்பட வுள்ளன.

ஊடக அனுசரணை:- உதயன்


# கோழிக்குஞ்சு விற்பனை



தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் குஞ்சுகள் (இறைச்சிக் கோழிக் குஞ்சுகள்) ரூ.90/= மட்டும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.

(22852) (2-6)

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர் #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே : 021 2226944 | நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944 | சுட்டி பாம் சென்ரர் வட்டுக்கோட்டை தொ.பே : 077 8996085 |


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02.02.1947

மறைவு 14.08.2012

அமரர் **தம்பிப்பிள்ளை துரைசிங்கம்**

(செல்வராசா-டிங்கர்)

ஒரு மாதகாலம் ஓடிப்போனதுவோ அப்பா।
உங்கள் பிரிவுத்துயர் ஆற்றுவாரில்லையே।
கண்ணீரின் அலைகள் கரை மீறுகின்றனவே।
விழி மூடித் தூங்க முடியாது
வேதனையால் தவிக்கின்றோம் அப்பா।
மீண்டுமோர் பிறவி எடுத்து
வாருமப்பா எமக்குத் தந்தையாய்।

*கடந்த 14.08.2012 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் தம்பிப்பிள்ளை துரைசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் யாவும் இன்று(13.09.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அனைவரும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தியாகராஜா வீதி,
கல்வளை றோட், சண்டிலிப்பாய்.

(22811)(5-6)

குடும்பத்தினர்.


## கட்டடம் வாடகைக்கு

மானிப்பாய், பிரதான சந்தைக்கு அருகில் 2000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடம் அலுவலகம் மற்றும் களஞ்சியத் தேவைக்கு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0772727539, 0772684297

(22813) (2-6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
அல்பிறட் திரேசம்மா

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி கொன்சி ஜெயநாயகம் அவர்களின் அன்புத் தாய்

**அமரர் அல்பிறட் திரேசம்மா**

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
யா/புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
[illegible]

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
## VACANCIES

Applications will be received by me up to 28th September, 2012 from suitably qualified candidates for the following posts:

**NOTE: Applicants who have already applied for the post of Full Time Sub-warden in response to our advertisement dated 02/04/2012 need not apply again.**

**POST - FULL TIME SUB-WARDEN GRADE II (MALE) [ U-MN 3 (III) ]**

**QUALIFICATIONS:**

A graduate of a recognized University.
Preference will be given to those with experience in administration and management of hostel and to those who have experience in handling the matters related to welfare and discipline of the Students.

NOTE: The successful applicant should reside in the hostel. But, he/she cannot reside with his/her family.

The successful candidate should pay a refundable security deposit of Rs.10, 000/=, this amount shall be deducted from his/her salary in 10 instalments.
Salary Scale: Rs.22, 240 – 18 x 320 – 28,000 p.m
Selection: By Test and Interview
**Age not more than 45 years.**

**STATUTORY BENEFITS**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payments.
4. Employment Trust Fund.
5. Free medical care.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x 10 c.m. in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 28th September 2012.


Only Applications sent on specified form will be accepted. Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

Applicants from Government Departments/State Corporations and Statutory Bodies should apply through their Head of the Department. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**
**2012.09.12**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## இரண்டு பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை

யாழ்ப்பாணம், செப்.13

தீவக கல்வி வலயத்தில் புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக தீவகக் கல்வி வலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். (வ-14)

## தேசிய மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய இ.போ.ச. வீரர்கள்



மக்கள் மயப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கிடையிலான 41ஆவது தேசிய ரீதியான மெய்வண்மைப்போட்டி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது. இதில் சாதனை படைத்த இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய யாழ். சாலையின் விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ். சாலையின் பிரதான மண்டபத்தில் சாலை முகாமையாளர் எஸ். குலபாலசெல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய எஸ்.சதீஸ்குமார் (கரப்பந்தாட்டம்) 2 ஆம் இடம், வி.தினேசன் (நீளம் பாய்தல்)-4 ஆம் இடம், பி.சுதர்சன் (ஈட்டி எறிதல்)- 3 ஆம் இடம் ஆகியவர்களுடன் இ.போ.ச. வட பிராந்திய விளையாட்டுக் குழு செயலாளர் ஏ.கே. மோகனகிருஸ்ணன், யாழ். மாவட்ட மெய்வன்மை பயிற்றுவிப்பாளர் எம்.ஆர். மோகனதாஸ், இ.போ.ச. யாழ். சாலை முகாமையாளர் எஸ். குலபாலச் செல்வம், வட பிராந்திய விளையாட்டுக் குழுச் செயலாளர் எஸ். முருகநேசன் 3000 M ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும், 4X400 M ஓட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்ற கே.புவி ஆகியோர் நிற்கின்றனர். (வ-325)

## இருதயம் ஒரு பூட்டு; மனம் அதற்குச் சாவி

*மனத்தை உலகத்தின் பக்கம் திருப்பினால் தளையாகின்றது. இருப்பது ஒரு மனம்- அதைத் திருப்புவதனால்தான் வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஒரு கதவிற்கு பூட்டுப் போடுகிறோம். அந்தப் பூட்டைப் பூட்டுவதற்கும், திறப்பதற்கும் ஒரு சாவியை வைத்துக் கொண்டுள்ளோம். சாவியைப் பூட்டின் துவாரத்தினுள் நுழைத்து இடது பக்கம் திருப்பினால் பூட்டு பூட்டிக் கொள்கின்றது. வலது பக்கம் திருப்பினால் பூட்டு திறந்து கொள்கின்றது. அதேபூட்டு, அதேசாவி, திருப்புவது மட்டுமே வேறு, இருதயம் ஒரு பூட்டு- உங்கள் மனம் அதற்குச் சாவி, மனம் என்கிற சாவியை இருதயம் எனும் பூட்டினுள் நுழைத்து இறைவன் பக்கம் திருப்பினால் மோட்ஷம். உங்கள் பக்கம் திருப்பிக் கொண்டால் மோகம். ஆகவே மனதைப் புலனின்பங்களில் ஈடுபடுத்தாமல் இயன்றளவு இறைவன் பக்கம் திருப்பி, பிறகு வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ளவேண்டும்.*



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

**சாயி சிந்தனை**

## மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட இளைஞர் பரிமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.13

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விசேட பரிமாற்றத் திட்டத்தின் கீழ் மொணறாகலை மாவட்டத்தில் இருந்து 40 இளைஞர், யுவதிகள் கைதடி நவில்ட் பாடசாலைக்கு வருகை தரவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குனர் த.ஈஸ்வரராஜா தெரிவித்துள்ளார்.

மொணறாகலை மாவட்டத்தில் இருந்து வருகை தரும் இந்த இளைஞர் யுவதிகள் கலை, கலாசாரம், விளையாட்டு, சிரமதான நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளில் கலந்து கொள்வர். (வ-14)

## ஒளிராத வீதி மின் விளக்குகள் பயணிப்போர் விசனம்

கொழும்புத்துறை, செப்.13

அரியாலைப் பகுதியில் நாவலர் வீதி மற்றும் கனகரட்ணம் வீதிகளில் உள்ள வீதி மின் விளக்குகள் இரவு வேளைகளில் தகுந்த முறையில் ஒளிராது காணப்படுகின்றன. இருள் சூழ்ந்து காணப்படும் இந்தப் பகுதிகளில் இரவுப் போக்குவரத்தில் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர். (வ-135)

## ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் 'குத்துவிளக்கு' திரையிடல்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் ''குத்துவிளக்கு'' திரைப்படம் நாளைமறு தினம் காலை 9 மணிக்கு ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் திரையிடப்படவுள்ளது.

இந்தத் திரைப் படத்தின் காட்சிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள், குளங்கள், வயல் பகுதிகள் மற்றும் கொழும்பு, கண்டி, மாங்குளம் போன்ற இடங்களில் படமாக்கப்பட்டுள்ளதுடன் நல்லூர் மற்றும் செல்வச் சந்நிதி ஆலய உற்சவ கால நிகழ்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (வ-14)

## கோழிக்குஞ்சு விற்பனை

**தடுப்பு மருந்து போடப்பட்ட " A " தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறொயிலர் கோழி (இறைச்சிக் கோழி) மீள் கொள்வனவு செய்யப்படும்.**

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(22489) (5.6.7)

## வேலை வாய்ப்பு

தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்புகளுக்கு:
ஈஸ்வரி தையாலகம்
பிரதான வீதி, (செலிங்கோ முன்பாக),
நெல்லியடி, 0778465763

(F/3329) (2-6)

## மரண அறிவித்தல்

### சண்முகராஜா பாலகுமார்



நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சண்முகராஜா பாலகுமார் கடந்த 10.09.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் எழுபங்கநாச்சியார் தம்பதியரின் அன்பு மகனும் இராஜபூபதி (லண்டன்), சுலோஜனா, கலாதேவி, சந்திரவதனி, ஆனந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நாவாந்துறை றோ.க.வி.), கனீந்திரன், குலச்செல்வம், புஸ்பமலர், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கவாஸ்கர், சுபாஸ்கர், சுவீஸ்கர், நிவாஸ்கர், பிரவீன், பிரகாந், பிரதீப், அபிதா, பூஜா ஆகியோரின் பாசமிகு மாமனும், ராஜீவ்காந், றமணகாந், ரம்யா, ரதீஸ்காந், வேதவி, விருதவி, செண்பகன், வாகவி ஆகி யோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2012) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

192, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மைத்துனர்மார்,
சகோதரர்மார்.

(22806)(6.8)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வம் அப்புத்துரை

யாதம்பை, மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வம் அப்புத்துரை (10.09.2012) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் (முன்னாள் யாழ். பிராந்திய முகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா (முகாமையாளர், பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், உகந்தகுமார் (Canada), சிந்தியா (Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், விக்னேஸ்வரன் (Canada), தனுஷியா (Canada), ஆகியோரின் அன்பு மாமியும், ஆகாஷ், அர்வின், சிவிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம் (முன்னாள் கூட்டுறவு பொது முகாமையாளர்), தியாகராஜா (முன்னாள் கூட்டுறவு கணக்காளர் - பண்டத்தரிப்பு) மற்றும் செந்தில்நாதன் (France), புவனேஸ்வரி (Canada), சந்திரசேகரம் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யாதம்பை,
மாதகல்.

தகவல்:
Manager குடும்பத்தினர்.

(22809)(6.8)

## அம்மாவின் அருள் வாக்கு

**ஞான வைரவர்ஆலயம் துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்மா**

**26/ 13 A, பெர்னாண்டோ றோட், வெள்ளவத்தை.**

அம்மாவின் அருள் வாக்கு கூறப்படும் நேரம்
காலை : 8.00 - 10.30 மணி வரை
மாலை : 4.00 - 6.00 மணி வரை

திருநெல்வேலி யாழ்ப்பாணத்தில்
15.09.2012ம்
16.09.2012ம்
17.09.2012ம்
அருள் வாக்கு கூறப்படும்

தொடர்புகளுக்கு:
2 ஆவது ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P : 077 8012226

(22687)(6.7.8)

## சகல குத்தகைக்குப் பயிர் செய்ய விரும்புபவர்களுக்கான அறிவித்தல்

**உருத்திரபுரீசுவரர் ஆலயக் காணிகள்**

**30.08.2012 வரை காசு கட்டுமாறு கொடுக்கப்பட்ட திகதி 25.09.2012 வரை நீடிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்களுக்கு அறியத்தருவதுடன் இது தொடர்பாகத் தாங்கள் காசு கட்ட விரும்பின் எமது பொருளாளர் மா.பேரம்பலம் அவர்களிடமோ அல்லது தலைவர் தி.இராசநாயகம் அவர்களிடமோ தொடர்பு கொண்டு பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

**இவர்களது தொலை பேசி இலக்கம் வருமாறு**
**தலைவர்:- 077 0604950**
**பொருளாளர்:- 0776988691**

**ஏற்கனவே இடப்பட்ட விளம்பரத்தின் நிபந்தனைகள் அனைத்தும் தொடர்ந்தும் இருக்கும். எக்காரணங் கொண்டும் தனிப்பட்ட முறையில் காணிகள் வழங்கப்படமாட்டாது. குலுக்கல் முறையில் மட்டுமே காணிகள் வழங்கப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.**

தி.இராசநாயகம்,
தலைவர், உருத்திரபுரீசுவரர் ஆலயம்.

F/3322) (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சமய நம்பிக்கையின் அடிப்படையில் காலம் காலமாக குறிப்பிட்ட சில ஆலயங்களில் மிருகபலியிடலை மக்கள் செய்து வருகின்றனர்.**

# மிருகபலியிடல்

## வரமா? சாபமா?

இன்றைய உலகிலே பல மதப் பிரிவுகள் காணப்படுகின்றன. இத்தகைய மதப் பிரிவுகளில் பல கொள்கைகளும், தத்துவங்களும், சமய முறைகளும், வழிபாட்டு முறைகளும் இடம்பெறுகின்றன. இன்றைய நவீன உலகில் மதச் சுதந்திரம் ஒவ்வொரு நாடுட்டிலும் பின்பற்றப்படுகின்றது. இந்த மதச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி மக்கள் தமக்கு ஏற்ற வகையில் கடவுள் வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். குறிப்பாக பௌத்த , இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் போன்ற சமயங்களில் பல ஒழுங்கு முறைகள் காணப்படுகின்றன.





இந்து சமயம் மிகவும்தொன்மையான மதம். இந்து சமயத்திலே பல பிரிவுகள் காணப்படுகின்றன. அத்துடன் பல கடவுள் வழிபாட்டு முறைகளும் உள்ளன. இந்து சமயத்தில் ஆலய வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆலய வழிபாட்டில் வேள்வி முறைகளும், கிரியை முறைகளும், சடங்கு முறைகளும் காணப்படுகின்றன. இன்றும்கூட குறிப்பாக இந்தியாவிலும், இலங்கையிலும் கிராமிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுகின்ற மக்கள் காணப்படுகின்றனர்.

கிராமிய வழிபாட்டு முறைகளில் மக்கள் தங்களுக்கென சமயக் கொள்கைகளை வகுத்து, ஆலயங்களை அமைத்தும் வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். கிராமத்தில் உள்ள மக்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக மிருக பலியிடலைச் செய்து வருகின்றனர். இது கிராமத்தின் ஒழுங்கு முறைகள், காலநிலை மாற்றங்கள், இயற்கை அழிவுகளில் இருந்து விடுபடல் போன்ற காரணங்களாலும், தனிப்பட்ட காரணங்களாலும் மிருக பலியிடலை ஆலயங்களில் மேற்கொள்கின்றனர்.

இந்து மக்கள் குறிப்பிட்ட சில ஆலயங்களில் மிருக பலியிடலை மேற்கொள்வதால் தங்களுக்கும், தங்களது எதிர்கால சந்ததியினருக்கும் சிறப்பான வாழ்வு கிடைக்கும் என்று நம்புகின்றனர். சமய நம்பிக்கையின் அடிப்படையில் காலம் காலமாக குறிப்பிட்ட சில ஆலயங்களில் மிருகபலியிடலை மக்கள் செய்து வருகின்றனர். எனவே அந்தந்த சமயங்களின் வழக்க முறைகளை யாரும் மீறக் கூடாது என்பதே எனது வாதமாகும்.

க.கணேசதேவா, மாதகல் கிழக்கு, மாதகல்.

## மரணத்தின் பிடியில் கருவறைக் குழந்தை

புதுமைப் பெண்ணாய் பிறப்பெடுத்து
தரணியிலே தலை நிமிர்ந்து
சாதனை நிலை நாட்டு- என
உரிமைக் குரல் கொடுத்த பாரதி
இன்று இருந்திருந்தால்
பாரத தேசமெங்கும்
ஆறாய் பெருக்கெடுத்து ஓட
இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்
பெண்களின் புதுமைக்
கலம்பகம் கண்டு

அவமானம்! அவமானம்!
தந்தை யார் என்று
தெரியாது சந்தையில்
விற்பனையாகும் வியாபாரப்
பொருளாக - மாது இவளின் கற்பு
ஏல விற்பனையின் கொள்வனவாய்
இன்றைய மண்ணில்
புதிய சிசு பாவம்

பாவம் கருவறைக் குழந்தை
தன் உலகம் காணும் முன்
கருவறைக்குள் கரைகின்றது
இன்னும் சில அடுப்பங்கரைக்கு கீழும்
தெருவிலே கிடக்கும்
குப்பைக் கூடைக்குள்ளும்...?
தாய் சுமக்கும் குழந்தையை
பரிதாபத்துடன் அரவணைக்கும்
தாய் மண்.



கொடுமையிலும் கொடுமை
கலாசாரத்தின் சீர் கேடு
பெண் இனத்தின் சாபத்தீ
பருவம் அடையாத பாலகி
பெண்களைக் கூட- காமப்பசி கொண்டு
கடித்துக்குதறும்
பாலியல் வல்லுறவு!

இத்தனை கொடுமையினால்
பத்து வயதுப் பாலகி யும்
பள்ளிப் பையனுடன் பள்ளி வாசலில்
கால் பதிக்கும் இள வயதினில்
கிளினிக் வாசலில்
கிளினிக் கொப்பியுடன்
இத்தனையும் தகர்த்து
தெய்வப் பெண்ணாய் பிறப்பெடுத்து
சாதனை படைப்போம்! புதுமைப் பெண்களாக....!

ம.கஸ்தூரி,
கிளி.முருகானந்தக் கல்லூரி.



## இனிய காலம்

சின்னக் குழந்தையாய்
அன்னை மடியில்
தவழ்ந்த காலம்!
புத்தகப் பையும்
பென்சிலும் கொண்டு
பள்ளிக்குச் சென்ற காலம்!
நண்பர்களுடன் கூடிக்குலாவி
ஓடி விளையாடிய காலம்!
சின்னப் பிள்ளையாய்
குறும்பு செய்த காலம்!
சின்னச் சின்னப் பாலர்களாய்
சிறகடித்துப் பறந்த காலம்!
இத்தகைய இனிய காலம்!
என் வாழ்வில்
மீண்டும் வருமா?

ற.சிந்துஜா,
மாதகல்.

## மாற்றம் தேவை

நண்பனே!
நாளை முதல் விடியலை நீ எழுப்பு,
பகல் இரண்டின் கீழ் பகலவனைப் பார்
வாலுக்கு மையம் பார்
காற்றுக்கு கால்கள் பார்
இதயம் போல் உழை
இமைகள் போல் களை,
உன்னிடத்தில் நியாயம் கொள்
உலகுக்கு நீதி சொல்
காற்றை வடிகட்டு
கடல் நீரை வாய்கொப்பளித்து துப்பிவிடு
நிலவை நிறமாற்று
நிலத்தை விரிவு செய்
நேரத்தை அயரவை
ஏழாவது அறிவைத் தேடு
தூக்கத்தை குறை
ஐந்தாவது வேதம் சொல்
ஆறாவது பூதம் கேள்
எட்டாவது பிறவி எடு
ஒன்பதாவது திசையை பிறப்பி
பத்தாவது கிரகத்துக்குப் பற
வயது முதிராமல் நிமிர்ந்து நில்
பூமியின் வேகம் கேள்
அதற்கு முன்னால் ஓடு
நேரத்தை விட வேகமாய் நட

சிவசாந்,
காரைநகர்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



இந்து ஆலயங்களில் மிருகபலியிடல் தொடர்பான உங்களது விமர்சனங்களை முன்வைக்கவும்

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................

முகவரி :- .................................................

.................................................

............................ ............................

திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 வருடங்களாக புனரமைக்கப்படாத வீதிகள்

வவுனியா,செப்.13

வவுனியாவில் கிடாச்சூரி, தரணிக்குளம், கல்மடு, புதுக்குளம் ஆகிய இடங்களில் 40 வருடங்களுக்கும் மேலாக வீதிகள் புனரமைக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழை காலங்களில் நீர்தேங்கி நிற்பதால் பயணிகள் பலரும் விழுந்தெழும்புவதை அவதானிக்க முடிகிறது. அந்தப் பகுதி மக்கள் இந்த வீதிகளைப் புனரமைக்குமாறு அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்திய போதிலும் வீதிகள் இதுவரை தாரிட்டுப் புனரமைக்கப்படவில்லை. மிகவும் மோசமான நிலையிலுள்ள கிடாச்சூரி வீதியில் நாளாந்தம் வீதி விபத்துக்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

எனவே இந்த வீதிகளை உடனடியாக புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)


## VACANCY IN TELECOM WORK

We are an electrical company with 26 years experience in Telecommunication we are looking for dynamic, self motivated presonal for the following posts for Telecom project office, Jaffna.

**Technical officer:** NCT or equivalent with OSP experience

**Technician :** GCE O/L with Telecom related work experience

***Walk in Interview on 14.09.2012 at 9am-12am***

LUMINEX PROJECT OFFICE
KOPAY CENTRE,
KOPAY.
T.P.: 071 865 3762


## காட்டு யானைகளால் வீடுகளுக்குச் சேதம்

முத்துஐயன்கட்டு முதலாம் கண்டம் பகுதியில் காட்டு யானைகளால் மக்களின் இரண்டு வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இங்கு நிலவும் கடும் வறட்சி காரணமாகக் காட்டு யானைகள் முத்துஐயன்கட்டு குளத்தை நாடிவருகின்றன. மேலும் இவை இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் புகுந்து பெரும் அழிவை ஏற்படுத்தி வருகின்றன. அண்மையில் இந்த யானைகளால் வாழைகள், மரவள்ளிப் பயிர்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளதுடன் இரு வீடுகளும் சேதமாக்கப் பட்டுள்ளன.

வீட்டிலிருந்தவர்கள் யானைகளைக் கண்டதும் வீட்டை விட்டு வெளியே ஓடி உயிர் தப்பியுள்ளனர்.

தற்போது இங்கு வாழுகின்ற மக்கள் வீடுகளில் தங்குவதற்கு அஞ்சிய நிலையில் பாதுகாப்புக் கருதி வேறு வீடுகளில் தங்குவதைக் காணமுடிகின்றது. (க-500)

## இலவச பஸ் சேவை

மன்னார்,செப்.13

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் பாடசாலை மாணவர்களிடம் பணம் அறவிடாது சேவையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து காலை 4.30 மணிக்குத் தமது பஸ் சேவையை ஆரம்பிக்கும் சங்கத்தினர் இரவு 9 மணியளவிலேயே அதனை நிறைவு செய்கின்றனர்.

குறிப்பாக மன்னார் நகரிலிருந்து இங்குள்ள பல கிராமங்களுக்கும் பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலகப் பணியாளர்கள் எனப் பலரும் நன்மையடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

### இடமாற்றச்சபை இன்று கூடுகிறது

துணுக்காய் கல்வி வலயத்தின் ஆசிரியர் இடமாற்றச் சபை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு துணுக்காய் கல்வி வலயத்தில் கூடவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இதில் துணுக்காய் கல்வி வலயத்தில் அடுத்த ஆண்டு இடமாற்றம் கோரியுள்ள ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன. இதில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியவர்களுடன் துணுக்காய் கல்வி வலய இடமாற்ற சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-422)

## 29ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**கணபதி நகுலேஸ்**
*(ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்)*

பிறப்பு 10.04.1935 — இறப்பு 16.08.2012

இன்று (13.09.2012) வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

5ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை (22832)(9.14)
ந.சுவேந்திரராஜா (மகன்)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 1912 : 02 : 03



விண்ணில் 2012 : 08 : 24

### அமரர் இராமலிங்கம் சின்னம்மா

கடந்த 24.08.2012 இறைபதம் அடைந்த 100 ஆண்டுகளை பூர்த்தி செய்த எமது அன்புத் தெய்வம் அமரர் இராமலிங்கம் சின்னம்மா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 13.09.2012 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். நாளை 14.09.2012 வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (சி/3344)(9.14)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புச் சித்தப்பாவான
**கருணானந்தன் ரங்கநாதன்**
(சாரதி-யாழ். செயலகம்)

அவர்களின் திடீர் பிரிவால் துயருறுவதோடு, துன்பக் கடலில் முழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஈர விழிகளோடு:* பத்மநாதன் குடும்பம்- சாந்தினிதேவி, அஜெந்தினி, அருந்தினி, அமிழினி, அகிந்தன், அகழ்யன்.

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் கார்த்திகேசு

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சிவப்பிரகாசம் வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கார்த்திகேசு நேற்று (12.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-இளையபிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னலெட்சுமி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு கணவரும் நித்தியானந்தன் (வர்த்தகர் யாழ்ப்பாணம்) வசந்தகுமாரி (கொழும்பு) கிருபானந்தன் (பிரான்ஸ்) சதானந்தன் (சுவிஸ்) தயாழினி (பிரான்ஸ்) யோகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவயோகவதி காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் தர்மலோஜினி (பிரான்ஸ்) வசந்தமாலா (சுவிஸ்) ஜெயக்குமார் (பிரான்ஸ்) உதயதர்சிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஜனணி (சம்பத்வங்கி-நெல்லியடி) ஜசிகா (மக்கள் வங்கி-கன்னாதிட்டி) நிசாந்தன் (லண்டன்) நிரோசன் (HNDE கொழும்பு) சந்திரரூபன் (சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்) சுரேஸ்குமார் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) லஜனி (ஆசிரியர்-கொழும்பு) கிருஷாந்தன் (பிரான்ஸ்) இஷாலினி, அபினாஷ் (சுவிஸ்) லக்ஷனா, லதுஷன், லவீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், நமசிவாயம் மற்றும் செல்லம்மா, செல்லத்துரை (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.09.2012 வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப 3 மணிக்கு பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

143, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (22827)(9.14)
தகவல்:
கா.நித்தியானந்தன் (மகன்)

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை கந்தையா

( முன்னாள் அலைஅரசி படகு கொக்சன் (தண்டயல்), யோகலட்சுமி படகு உரிமையாளர்)



அனலைதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கந்தையா நேற்று (12.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திரு திருமதி ஐயம்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், யோகம்மாவின் அன்புக்கணவரும், சின்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகமுத்து, மாரிமுத்து, சின்னத்துரை, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமராவதிதேவி (ஜேர்மனி), ரஞ்சினி, சுசிலாதேவி (கனடா), சாந்தகுமார் (சுவிஸ்), பிரேமகுமார் (சுவிஸ்), கருனந்தகுமார் (பிரான்ஸ்), யோகானந்தவதி, இளம்முருகன் (டென்மார்க்), தயாநிதிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், அன்னலிங்கம் (ஊர்காவற்துறை), கனகையா (கனடா), தருமசீலி (சுவிஸ்), மங்கயற்செல்வி (சுவிஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்), சிவலிங்கம் , தர்மினி (டென்மார்க்), ஞானேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அனலைதீவு,
3 ஆம் வட்டாரம். (22828)(8.14)
தகவல்:
குடும்பத்தினர்,
அமரதீபன் (பேரன்)

## மரண அறிவித்தல்



### முருகேசு காசிப்பிள்ளை

பூநகரி சித்தன்குறிச்சியை பிறப்பிடமாகவும் மன்னார் எழுத்தூரை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு காசிப்பிள்ளை நேற்று (12.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் குலசேகரம் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்) புஸ்பநாதன் (அஞ்சல் அத்தியட்சகர் வவுனியா/ முல்லைத்தீவு) ரவீந்திரராசா (சுவிஸ்) துரைசிங்கம் (லண்டன்) கோமளாதேவி, சித்திராதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஆனந்தி (இலிகிதர் யாழ். மாநகர சபை) மற்றும் பவானி, யோகராசா (இளைப்பாறிய ரெலிக்கொம் ஊழியர்- மன்னார்) நற்குணவதி (சுவிஸ்) வளர்மதி (லண்டன்) சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் மதுரகன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்) குலமகள், திபாகரி, டிசாந், அருணேதயன் (சென்ஜோன்ஸ் கல்லூரி) கஸ்தூரி, தீபிகா, அபிநயன் (சுவிஸ்) சகானன், மோகனன் (லண்டன்), சோபிகா, பிரதாப், கோதாரன் (மன்னார்), வாசுகி (ஆசிரியை) யோகனா (கனடா), தசீலன் (பிரான்ஸ்), கஜிந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் பிரதோசின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.09.2012) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மன்னார் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

429, கொழும்புத்துறை
வீதி, யாழ்ப்பாணம். (22833)(9.14)
தகவல்
புஸ்பநாதன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr.Vettivel Memorial Institute of Paramedical Institute,Thirunelveli

**New Intake of students for Diploma in Nursing**

Applications will be received from suitable candidates to follow the two year full time course leading to the award of **Diploma in Nursing**. Those who have completed A/L and having credit passes in Science ,English and Mathematics at the O/L examination are eligible to apply. People already working in a hospital as Trainee Nurses / Nursing Assistants may also apply. The course is expected to commence by 15th October. Employment is guaranteed after completion.

Self prepared applications must be accompanied by photocopies of :

1. O/L and A/L certificates
2. Birth certificate
3. National Identity card
4. Certificate of residence from the GramaSevaka
5. Service certificate, if any.

Applications should reach the under mentioned address on or before 01st October 2012

**Director,**
**Dr.Vettivel Memorial Institute of Paramedical Studies**
**350, Palaly Road, Jaffna**

(C/3333)(6)

## 16 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 04 ★ 05 ★ 1933



இறப்பு 30 ★ 08 ★ 2012

### அமரர் சின்னத்துரை இராசம்மா

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (14.09.2012) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தக் கரையிலும், அன்னாரது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கணேசவாசா,
காளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(22821)(6.8)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் சாரதியாக கடமை புரிந்த

### க.ரங்கநாதன் அவர்கள்

12.09.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

புனர்வாழ்வுப் பகுதி உத்தியோகத்தர்கள்,
மாவட்ட திட்டமிடல் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/3341)(8-14)

## வெளிவாரிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலை மற்றும் வணிகமாணி இறுதிப் பரீட்சையில் சித்தி யடைந்து பட்டம் பெறுவோர் பட்டியல் வெளியாகியுள்ளது. இம்முறை 224 மாண வர்கள் கலைமாணிப் பட்டம் பெறுவதுடன், இவர்களில், 12 மாணவர்கள் இரண்டாம் தரம் கீழ்ப்பிரிவிலும் 212 மாணவர்கள் சாதாரண பிரிவிலும் சித்தியடைந்துள்ளனர். அத்துடன் 26 மாணவர்கள் வணிகமாணிப் பட்டம் பெறுவதுடன், இவர்களில் 3 மாண வர்கள் இரண்டாம் தரம் கீழ்ப்பிரிவிலும், 23 மாணவர்கள் சாதாரண பிரிவிலும் சித்தி யடைந்துள்ளனர்.

மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவு கள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற் றுக் கொள்ளுமாறு இணைப்பாளர் க.சிவ ராஜா அறிவித்துள்ளார்.

(16)


### விற்பனை நிலையம் வாடகைக்குண்டு

இயங்கு நிலையிலுள்ள கணினிகள், போட்டோ பிரதி இயந்திரம், web browsing, mobile phone உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்று வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 2487234, 021 2220876
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

(21469)(8,14)

### வீடு தேவை

மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைதியான சூழலில் சிறிய குடும்பத்திற்கு வீடு ஒன்று தேவை.

(22880)(8,14) தொடர்பு: 0775006769


### தவறிவிட்டது

அப்புக்குட்டி செல்லையா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் முக்கிய ஆவணங்களும் பேர்சுடன் 07.09.2012 அன்று சீரணிச் சந்திக்கும் ஆறுகால் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 077 449 7351, 021 320 9880 (5-6)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்டச் செயலகத்தில் சாரதியாக கடமையாற்றும்

### க.ரங்கநாதன் அவர்கள்

12.09.2012 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு, எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள் வதுடன், அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

யாழ். மாவட்டச் செயலக
நலன்புரி கழகம்.

(22819)(5.6)


### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிக் கொண்டு இருக்கும் வர்த்தக நிறுவனத்துக்கு பில் கிளாக்(Bill Clerk), விற்பனைப் பிரதிநிதியும் பஸ் booking பதிவாள ரும் உடன் தேவை.

(22817) (5-6) தொடர்பு: 077 573 1318

### வாகனம்விற்பனைக்கு

நவக்கிரியில் நல்ல நிலையில் உள்ள மேசி வேக்குசன் 135 ரக்ரர் வாகனம் (இலக்கம் RB-xxxx) விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 618 7026, 077 958 5366

(22815)(5-6)


## மரண அறிவித்தல்



### பாஸ்கரன் வர்சனா

*(யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 2014 வர்த்தகப் பிரிவு மாணவி)*

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் வர்சனா நேற்று (12.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அருளம்பலம் பாஸ்கரன் (ஆசிரியர், சித்தங்கேணி சிறிகணேச வித்தியாலயம்)-காயத்திரி தம்பதியரின் அன்பு மகளும் கல்பனா (ஆஸ்திரேலியா) அருள்வேந்தன், அருள்ராசா (யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாண வர்கள்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்னராஜாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.09.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக நொங்கிய வயல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,சுழிபுரம்.

(22825)(9.14)

தகவல்:
பாஸ்கரன்
குடும்பத்தினர்.

## பிராந்திய காரியாலயம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கண்டி வீதி, யாழ்ப்பாணம்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தில் காசாளர் அறை அமைத்தல்

கேள்வி இல: O&M/RM/JAF/RO2012/089

01. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தில் காசாளர் அறை அமைப் பதற்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடம் கேள்விகள் கோரப்படுகின்றது.

02. கேள்விப் பத்திரங்களை கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

03. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து இரு (02) மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

04. இக் கேள்வி அறிவித்தல், இதில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட்டங் களுக்கும் உட்பட்டதாகும்.

05. கேள்வி கோரல் தொகை ரூபா. 100,000.00 தொடக்கம் ரூபா. 500,000.00 வரைக்கும் இடையில் இருந்தால் கேள்வி கோரல் தொகையில் மூன்று (03) வீத கேள்வி பிணைப்பணமாக இலங்கையில் அங்கீகரிக் கப்பட்ட வங்கி ஒன்றிலிருந்து பெற்றுத் தரப்படவேண்டும்.

06. கேள்வி பிணைப்பணம் கேள்வி பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். இல்லையேல் அக் கேள்வி நிராகரிக்கப்படும்.

07. ஒவ்வொரு அலகு விலையிலும் போக்குவரத்துக் கூலி உள்ளடக்கப்படல் வேண்டும்.

08. வேலைகள் மூன்று (03) நாள்களுக்குள் தொடங் கப்பட்டு ஏழு (07) நாள்களுக்குள் முடிக்கப்படல் வேண் டும்.

09. பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான போக்கு வரத்துச் செலவும் கேள்வியினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

10. கேள்வி மனுதாரர்கள் கேள்வி கோரமுன் குறிப் பிட்ட பிரதேசத்தை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படு கின்றீர்கள். செய்யப்படவேண்டிய வேலைகளுக்குரிய வரைபடத்தைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

11. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் முடிவு திகதி குறிப்பிடப்பட்டு, கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கேள்விகள் அனைத்தும் 18.09.2012, 10.00 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண் டும். கேள்விகள் அன்றையதினமே உடனடியாக திறக்கப் படும்.

**பிராந்திய முகாமையாளர் (யா)**
**யாழ்ப்பாணம்.**

(சி/33 ) (3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்றில் இன்றும் நாளையும் மீளக்குடியமர்வு

வவுனியா,செப்.13

**இறுதிகட்டப் போரின்போது இடம்பெயர்ந்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்றும் நாளையும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து மனிக்பாம், நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அம்பலவன் பொக்கணை, செம்மண்குன்று, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய பகுதியை சேர்ந்த மக்களும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்த மக்களை மீள்குடியமர்த்துவதற்கான பணிகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த அம்பலவன் பொக்கணை, செம்மண்குன்று, முள்ளிவாய்க்கால் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்று காலை முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலைக்கும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் வருகை தருமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டுள்ளார். (க-400)



பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்துள்ள பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று புதன்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்

## சரஸ்வதி சிலை திறப்பு

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள தண்டுவான் அ.த.க.பாடசாலையின் சரஸ்வதி சிலை திறப்பு விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிட வி.பன்னீர்செல்வம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றனும் சிறப்பு விருந்தினராக துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பி.திரேஸ்குமார், ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி ப.பங்கயசெல்வன் மற்றும் கிராம அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-422)

## காணாமல் போனோர் தொடர்பில் ஆராய வருகிறது விசேட குழு

2006ஆம் ஆண்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய ஆணையாளர் கனகராஜ் தெரிவித்தார்.

இதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்டக் குழுவினர் கொழும்பிலிருந்து வருகைதரவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் காணாமல் போனவர்கள் தொடர்பில் 590 முறைப்பாடுகள் யாழ். மனித உரிமைகள் காரியாலய யாழ். கிளையில் பதியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணையில் இன்றுவரை வீடு திரும்பாதவர்களது விவரங்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டு அவை தொடர்பில் கொழும்பிலிருந்து வரும் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்குரிய அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் ஒவ்வொரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு ரீதியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

17ஆம் திகதி யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய் பொலிஸ் நிலையப் பிரிவுகளிலும் 18ஆம் திகதி கோப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுகளிலும் 19ஆம் திகதி வல்வெட்டித்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ் பிரிவுகளிலும் 20ஆம் திகதி ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, இளவாலை, தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளிலும் இந்தக் குழுவினர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். இந்த விசாரணைக்கு பொலிஸ் அதிகாரிகள், கிராமசேவையாளர்கள் ஆகியோர் அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நிரந்தரமான பிரதேச செயலர்கள் இல்லாததால் மக்கள் அவதியில்

கிளிநொச்சி,செப்.13

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நிரந்தரமான பிரதேச செயலர்கள் இதுவரை நியமிக்கப்படாமையால் இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய சி.ஜெயகாந்த் இந்த ஆண்டு முற்பகுதியில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிற்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். இதனால் மாந்தை கிழக்குப் பதில் பிரதேச செயலராகத் துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் கடமையாற்றி வருகின்றார்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலராக இருந்த தயானந்தாவும் இடமாற்றலாகிச் சென்றுள்ள நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ரீ.திரேஸ்குமார் பதில் கடமைகளை ஆற்றி வருகின்றார்.

இன்று வரை இந்த இரு பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் நிரந்தரமான பிரதேச செயலர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதிகளில் மீள்குடியமர்ந்த மக்கள் தமக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு இரு பிரதேச செயலர்கள் இந்தச் செயலகங்களில் பதில் கடமைகளை ஆற்றி வருவதால் அவர்களின் நிரந்தர இடங்களின் பணிகளிலும் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இது தொடர்பாக முல்லைத்தீவு அரசஅதிபர் நா.வேதநாயகனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

மேற்படி இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பிரதேச செயலர்கள் பதவிகள் வெற்றிடமாகவே காணப்படுவதாகவும், இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார். (க-6)

## சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் கிளிநொச்சியில் அதிர்ச்சிச் சம்பவம்

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சிப் பகுதியில் இரு சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவங்களில் 13மற்றும் 8 வயதுடைய இரு சிறுமிகளே வெவ்வேறு இரு சம்பவங்களில் தமது நெருங்கிய உறவினர்களால் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 13 வயதுச் சிறுமியின் தந்தைமுறையான ஒருவரே இவரை நீண்ட நாள்களாக பலாத்காரத்தில் ஈடுபடுத்தி வந்ததாகவும் தற்செயலாக மருத்துவப் பரிசோதனைக்கு வந்த சிறுமி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதே சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதேவேளை மற்றைய 8 வயதுச் சிறுமியை அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் தாக்கிக் காயப்படுத்தித்த துன்புறுத்தியும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் உட்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு சிறுமிகளும் வைத்தியப் பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸிலும் முறையிடப்பட்டுள்ளது. (16-6)

## சிவில் சமூக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதல் முறையாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியிலேயே நடைபெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். இதன்படி குறித்த கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது பிராந்திய காரியாலயங்கள் ஊடாக சிவில் சமூக ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடத்திவருகின்றது. இதனூடாக சிவில் சமூகப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி சிவில் சமூக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்ட சமூக கிராமிய சமூக அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (10-5)

## ஒளிரும் வாழ்வு அங்கத்தவருக்கு பொதுமகன் ஒருவரால் நிதியுதவி



அக்கராயன்,செப்.13

துணுக்காயைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் 'ஒளிரும் வாழ்வு' அமைப்பைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவருக்கு அவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

துணுக்காய்ப் பிரதேசத்திலே மாற்றுவலுவுள்ளோரை அங்கத்தவர்களாகக் கொண்டு ஒளிரும் வாழ்வு அமைப்பு இயங்கி வருகின்றது.

இந்த அமைப்பில் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் மருத்துவம், கல்வி, வாழ்வாதாரம் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் இந்த அமைப்பில் அங்கத்தவராகவுள்ள 42, அனிஞ்சியன் குளம் என்னும் முகவரியைச் சேர்ந்த சா.இராசேந்திரம் என்பவருக்கு குலசிங்கம் வீதி, துணுக்காயைச் சேர்ந்த ஐயம்பிள்ளை, கனகராசா என்பவர் 50 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஒளிரும் வாழ்வு அமைப்பினர் துணுக்காய்ப் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பொங்கல் விழா

வவுயினா, செப்.13

வவுனியா கல்நாட்டிய குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடம்பெறும். பிரம்மஸ்ரீ வைத்திய நாதகுருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்தப் பொங்கல்விழா 19 ஆம் திகதியன்று சதுர்த்தி தினத்துடன் ஆரம்பமாவதால் முதல் நாள் திருவிழா சிறப்புடன் இடம்பெறவுள்ளது.

(க-421)

## ஹயஸ் வாகனம் மோதியதில் இரு இளைஞர்கள் காயம்

கிளிநொச்சி , செப்.13

கிளிநொச்சி ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.10 மணியளவில் ஏ-9 வீதியில் கிளிநொச்சி இலங்கை வங்கிக்கு முன்பாகக் கரடிப்போக்குச் சந்தி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை, அவர்களைப் பின் தொடர்ந்து வந்த ஹயஸ் வாகனம் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றதுடன் அப்போது வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனத்துடனும் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த ஜெயந்தி நகர் கிளிநொச்சியைச் சேர்ந்த 26 வயதுடைய தயானந்தா மயூரன் மற்றும் திருநகர் வடக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயதான எஸ்.மில்டன் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சிப் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முரளி நல்லிணக்க கிரிக்கெட் வெற்றிக்கிண்ணம்

# தவறவிட்டது யாழ். அணி சாதித்தது சென்.பீற்றர்ஸ்




சென். பீற்றர்ஸ் அணியினர்

**சென். பீற்றர்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் துல்லியமாக பந்து வீசி, யாழ். அணியின் இலக்குகளை சீரான இடைவெளியில் வேட்டை ஆடத் தொடங்கினர். இதனால் யாழ். அணியால் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.**

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட முரளி நல்லிணக்க கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை மயிரிழையில் பறிகொடுத்தது யாழ். மாவட்ட ஆண்கள் அணி.

முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண இறுதியாட்டங்கள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று நடைபெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென். பீற்றர்ஸ் அணியை களத்தில் சந்தித்தது யாழ். மாவட்ட அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி ஓட்டங்களைப் பெறத் திணறியது. சென். பீற்றர்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் துல்லியமாகப் பந்து வீசி, யாழ். அணியின் இலக்குகளை சீரான இடைவெளியில் வேட்டை ஆடத்தொடங்கினர். இதனால் யாழ். அணியால் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் யாழ். மாவட்ட அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில், 9 இலக்குகளை இழந்து , 90 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கோகுலன் 25 ஓட்டங்களையும் , துவாரகசீலன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.பீற்றர்ஸ் அணியின் யூலியன் டிசில்வா 3 இலக்குகளையும், சேமில ஒபேசேகர 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

90 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய சென்.பீற்றர்ஸ் அணிக்கு, யாழ்.அணியின்பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர். அடுத்தடுத்து இலக்குகள் சிதறியதால், சென். பீற்றர்ஸ் அணி தோல்வியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் வெற்றி யாழ். அணியின் பக்கம் திரும்பியது. ஆயினும் அதனை தொடர்ந்து பேண யாழ்.அணி வீரர்கள் தவறி விட்டனர். இதனால் 18.1 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 91 ஓட்டங்களை எடுத்து, ஒரு இலக்கு வித்தியாசத்தில் வெற்றியை தன் வசமாக்கியது சென். பீற்றர்ஸ் அணி. ஆட்ட நாயகனாக 3 இலக்குகளை கைப்பற்றி, 14 ஓட்டங்களையும் எடுத்த சென். பீற்றர்ஸ் வீரன் யூலியன் டி சில்வா தெரிவானார்.

வெற்றிபெற்ற இராணுவ மகளிர் அணி



மகளிருக்கான இறுதியாட்டத்தில் சக்தி அணியும், இராணுவ அணியும் மோதின. இதில் இராணுவ அணி 127 ஓட்டங்களை 4 இலக்குகளை இழந்து எடுத்திருந்தது. பதிலளித்து ஆடிய சக்தி அணியால் ஆட்ட நிறைவில் 9 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனால் இராணுவ அணி 16 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. ஆட்ட நாயகியாக 53 ஓட்டங்களை விளாசிய இராணுவ அணியைச் சேர்ந்த றொஷானி பெரேரா தெரிவானார்.

இறுதிப் போட்டி நிகழ்வின் விருந்தினராக உலக சாதனை நாயகனாக சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கலந்து கொண்டார். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றுகின்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப. 3.30 மணிக்கு
நக்கீரன் விளையாட்டுக் கழகம் எதிர் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம்

பி.ப. 4.30 மணிக்கு
கருணாகரன் விளையாட்டுக்கழகம் எதிர் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் (ங-23)

## தேசிய மட்ட கரம் போட்டிகள்; வடமாகாண அணிகள் பங்கேற்பு

வலி வடக்கு, செப் .13

இலங்கை கல்வி அமைச்சினால் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான தேசியமட்ட கரம்போட்டிகள் எதிர்வரும் 15ஆம், 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த 15, 19 வயதுப் பிரிவு அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

தேசிய மட்ட கரம் போட்டிகளில் வடமாகாணத்தின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு-

15 வயதுப்பிரிவு -ஆண்
யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி, வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி

19 வயதுப் பிரிவு -ஆண்
யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி ,யாழ்.இந்துக் கல்லூரி

15 வயதுப் பிரிவு-பெண்
வவுனியா அல் -இக்பால் மத்திய மகா வித்தியாலயம், யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ,யாழ். இந்து மகளிர் கல்லூரி

19 வயதுப்பிரிவு- பெண்
யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ,யாழ். இந்து மகளிர் கல்லூரி, வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.(ங-86 )

## பிரான்சிஸ் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில



யாழ்ப்பாணம், செப். 13

யாழ். உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுசரணையுடன் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரான்சிஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளது விவரங்கள் வருமாறு -

செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி களமிறங்கியது. இதில் அற்புதமான ஆட்டத்தை வெ[illegible]படுத்திய நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

### அரச அதிபர் வெற்றிக்கிண்ண உதைபந்து

## கரவெட்டி, பருத்தித்துறை இறுதிப்போட்டியில் மோதல்

பண்டத்தரிப்பு, செப் 13

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்துக்கு கரவெட்டிப் பிரதேச செயலக அணியும், பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் தகுதி பெற்றுள்ளன.

சுற்றுத்தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும், வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன. மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக வீரர் சிவதர்சன் சிறப்பாக பந்தை நகர்த்தி ஒரு கோலினை பெற்றுக்கொடுக்க, கரவெட்டி பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. எனினும் சிறிது நேரத்தில் தமக்கு கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை வேலணைப் பிரதேசசெயலக அணி கோலாக மாற்றியது. இதனால் முதல் பாதியாட்ட முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்று சமநிலையில் இருந்தன.

எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சிவதர்சன் அந்த அணி சார்பாக மீண்டும் ஒரு கோலினைப் பெற்றுக்கொடுத்தார். சிறிது நேரத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணி சார்பாக ரதீசன் மேலும் ஒரு கோலினை அடித்தார். இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் வேலணை பிரதேச செயலக அணியை வெற்றி கொண்ட கரவெட்டிப் பிரதேச செயலக அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மருதங்கேணி பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை. எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வேகமெடுக்கத் தொடங்கியது. அந்த அணி வீரர் வசந்தன் சிறப்பான ஒரு கோலினை தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து இரு அணிகளினதும் கோல் பெறும் முயற்சிகள் எவையும் பயனளிக்காத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை வெற்றி கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலக அணி சுற்றுத்தொடரின் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது. (ங-130)

# சிவானந்தா வி.க. உதைபந்து பரபரப்பான ஆட்ட முடிவுகள்

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு -

கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் நவஜீவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது .

இதில் ஆரம்பம் முதலே நவஜீவன் விளையாட்டுக் கழக அணி களத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டத் தொடங்கியது. நவஜீவன் அணியின் கோல் மழையை வல்வை அணியால் கடைசி வரை தடுத்து நிறுத்த முடியவில்லை. பதிலடியாக வல்வை அணி கோலடிக்க முயன்றும் இறுதி வரை [illegible]வில்லை . இறுதியில் 4:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன் அணி இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலட்டி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் தமது முழுத் திறமைகளையும் வெளிப்படுத்தி ஆடியதால் பார்வையாளர்களுக்கு ஆட்ட நேரம் முழுதும் கண்களுக்கு விருந்து கிடைத்தது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனினும் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு வாய்ப்பு , போதிய வெளிச்சம் இன்மை காரணமாக வழங்கப்படவில்லை போட்டி இடைநிறுத்தப்பட்டது.

புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டமொன்றின் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது .


இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் நக்கீரன் அணியை வீழ்த்தியது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணி அதிரடியாக ஆடி எவரெஸ்ட் அணியை திக்குமுக்காட வைத்தது. இறுதியில் கருணாகரன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை விரட்டுவதில் சிக்கல்



இலக்கொன்று வழங்கப்பட்ட பின்னர் அந்த இலக்கைத் துரத்தி வெற்றிபெறுவதில் பாகிஸ்தான் அணிக்கு இன்னமும் பிரச்சினை காணப்படுவதாக பாகிஸ்தான் 'ரி-20' அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கெதிரான மூன்றாவது 'ரி-20' ஆட்டத்தில் கிடைத்த தோல்வியை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணி பெற்றுக் கொண்ட 168 ஓட்டங்களுக்குப் பதிலளித்தாடிய பாகிஸ்தான் அணி 74 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. இது 'ரி-20' சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி பெற்றுக் கொண்ட குறைவான ஓட்ட எண்ணிக்கையாக அமைந்தது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், ஓட்டங்களை துரத்தியடிப்பதில் இன்னமும் பிரச்சினைகள் காணப்படுவதாக உணர்வதாகவும், எனினும் அதில் முன்னேற்றமடையும் நம்பிக்கை காணப்படுவதாகவும், உலக 'ரி-20' தொடரில் சிறப்பாகச் செயற்படும் நம்பிக்கையுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓட்டங்களைத் துரத்தும் போது தங்களது சக்தியை உயர்த்தி இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், மூன்றாவது ஆட்டத்தில் தோல்வியடைந்த போதிலும் அணியில் அனைவரும் சிறப்பான உணர்வுகளுடன் காணப்படுவதாகவும், மிகப்பெரிய தொடருக்குத் தாங்கள் தயாராவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளும் மனநிலையில் பாகிஸ்தான் அணி காணப்படுவதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், இதே மனநிலையை உலக 'ரி-20' தொடரிலும் வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

(5)

# இலங்கை கிண்ணம் வெல்லும்



எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் இலங்கையில் இடம்பெறவுள்ள உலக 'ரி-20' தொடரில் இலங்கை அணி வெற்றிபெறும் என்ற நம்பிக்கையை கொண்டிருப்பதாக இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷான் தெரிவித்துள்ளார். உலக 'ரி-20' தொடர்பாக தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் போதே திலகரட்ண டில்ஷான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடரின்போது பயன்படுத்தப்பட்ட ஆடுகளங்கள் வேகப் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானவையாகக் காணப்பட்டதாகத் தெரிவித்த திலகரட்ண டில்ஷான், ஆகவே சிறந்த சுழற்பந்து வீச்சாளரற்ற அணிகள் கூட இந்தத் தொடரில் கடுமையான போட்டியை வழங்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் துடுப்பாட்டம் பலமானதாகவும், பெரியளவிலான ஓட்ட எண்ணிக்கைகளைக் குவிக்கக்கூடியதாகவும் காணப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மஹேல ஜெயவர்தனவின் தலைமையில் இலங்கை அணி மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த திலகரட்ண டில்ஷான், இந்த முறை இலங்கை அணி கிண்ணத்தை வெல்லும் என்ற எதிர்பார்ப்புடன் நான் காணப்படுவதாகவும் திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு இலங்கை அணி உலக 'ரி-20' தொடரின் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் பங்குபற்றியிருந்த போதிலும் அந்த ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்தது. அந்த ஆட்டத்தில் தாங்கள் ஆரம்பத்தில் அதிக இலக்குகளை இழந்ததால் தோல்வியடைந்ததாகத் தெரிவித்த திலகரட்ண டில்ஷான், அந்தத் தோல்வி இன்னமும் வலியை வழங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பலமான அணிகளுள் ஒன்றாகக் காணப்படுவதாக விமர்சகர்கள் தெரிவித்து வரும் நிலையில் அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த திலகரட்ண டில்ஷான், அந்த அணியில் கிறிஸ் கெய்ல், கெரான் பொலார்ட், டுவைன் ஸ்மித், டுவைன் பிராவோ போன்ற 'ரி-20' போட்டிகளுக்குரிய சிறப்பாட்டக்காரர்கள் காணப்படுகின்ற போதிலும், அவர்கள் தங்கள் திறமையை முழுவதுமாக வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்தார்.

(5)

# சாதனையுடன் சம்பியனானார் முர்ரே

ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் சுற்றுத் தொடரின் ஆண்கள் தனிநபர் சம்பியனாக ஐக்கிய இராச்சியத்தின் அன்டி முர்ரே தெரிவாகியுள்ளார். நொவக் ஜொக்கோவிச்சிற்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றே அவர் சம்பியனாகியுள்ளார்.

இறுதிப் போட்டியில் இந்தத் தொடருக்கான தரநிலையில் 3 ஆம் நிலையில் காணப்பட்ட அன்டி முர்ரேயும், உலகின் 2 ஆம் நிலை வீரரான நொவக் ஜொக்கோவிச்சும் மோதியிருந்தனர். விறு விறுப்பான போட்டியாக அமைந்த இந்தப் போட்டி 5 செற்கள் வரை சென்றிருந்தது.

போட்டியின் முதாலாவது செற்றை அன்டி முர்ரே கடுமையான போராட்டத்தின் நடுவே 7–6 என்ற கணக்கில் வெற்றிகொண்டதோடு, இரண்டாவது செற்றை 7–5 என்ற கணக்கில் வெற்றிகொண்டார். ஆனால் மூன்றாவது செற்றை நொவக் ஜொக்கோவிச் 6–2 என்ற கணக்கிலும், நான்காவது செற்றை 6–3 என்ற கணக்கிலும் வெற்றிகொள்ள தீர்மானம் மிக்க ஐந்தாவது செற்றிற்குப் போட்டி சென்றது.

5 ஆவது செற்றை 6–2 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி கொண்ட அன்டி முர்ரே – ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸின் 2012 இற்கான சம்பியனாகத் தெரிவானார்.

இது அன்டி முர்ரே பெற்றுக் கொள்ளும் முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும். இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு 2 தடவைகளும், விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டிக்கு இவ்வருடமும் தகுதி பெற்றிருந்த அவர், இதுவரை அவற்றில் வெற்றிபெற்றுக் கொண்டிருந்ததில்லை.

[5]

# இறுதித் தெரிவு அணி கிண்ணம் வெல்லும்

இலங்கையில் இடம்பெறவுள்ள உலக 'ரி-20' தொடரை இந்திய அணி வெற்றி கொள்வதற்கான அத்தனை வாய்ப்புக்களும் காணப்படுவதாக இந்தியக் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் பிரதம தேர்வாளராக ஸ்ரீகாந்த் பதவி வகித்த தேர்வுக்குழு தங்களது இறுதிச் சர்வதேசத் தெரிவாக உலக 'ரி-20' தொடருக்கான இந்திய அணியைத் தெரிவு செய்திருந்தது. இந்த நிலையில் இரானி கிண்ணத்துக்கான அணிகளைத் தெரிவுசெய்வதே ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவின் இறுதித் தெரிவாக அமையவுள்ளது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த ஸ்ரீகாந்த், உலக 'ரி-20' தொடருக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்திய அணி அந்தக் கிண்ணத்தைத் தெரிவுசெய்வதற்கான அத்தனை வாய்ப்புக்களையும் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். தெரிவுசெய்யப்பட்டுள்ள அணி மீது தனக்கு நம்பிக்கையுள்ளதாகத் தெரிவித்த அவர், பில்லியன் இந்திய மக்களின் நம்பிக்கையும் நேர்முக சக்தியும் இந்திய அணிக்குப் பலத்தை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தின் போதும் இந்திய மக்களின் சக்தி மிகப்பெரியளவில் இந்திய வீரர்களுக்கு உதவியதாகத் தெரிவித்த அவர், இந்தத் தொடரிலும் அது உதவும் என்று எண்ணுவதாகத் தெரிவித்தார்.

உலக 'ரி-20' தொடர் ஆரம்பிக்கும் போது இந்தியாவின் பிரதம தேர்வாளராகக் காணப்படுவார் எனத் தெரிவித்த ஸ்ரீகாந்த், தொடர் முடிந்து இந்திய அணி சம்பியன் பட்டம் வெல்லும் போது தான் முன்னாள் தேர்வாளராகக் காணப்படுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் போது முழுமையான தயார் நிலையில் அங்கு சென்றதாகத் தெரிவித்தஸ்ரீகாந்த், அதன் காரணமாக வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாகவும், தேர்வாளராக தனது உச்ச நிலையாக அந்த வெற்றி அமைந்ததாக அவர் தெரிவித்தார்.

(5)


# சுவானையும் அன்டர்சனையும் சிக்க வைக்க முயற்சி

இங்கிலாந்து அணியின் வீரர்களான கிரேம் சுவான், ஜேம்ஸ் அன்டர்சன் ஆகியோர் மீது இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை விசாரணைகளை நடத்த வேண்டும் என்று இங்கிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் கோரிக்கை விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கெவின் பீற்றர்சனைப் பகிடி செய்து உருவாக்கப்பட்ட 'டுவிட்டர்' கணக்குத் தொடர்பாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரான கெவின் பீற்றர்சனைப் பகிடி செய்து உருவாக்கப்பட்ட 'டுவிட்டர்' கணக்கில் கிரேம் சுவானுக்கும், ஜேம்ஸ் அன்டர்சனுக்கும் தொடர்பிருப்பதாகத் தான் சந்தேகிப்பதாகவும், அது தொடர்பாக உத்தியோகபூர்வ விசாரணை நடாத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் அன்ட்ரூ ஸ்ரோரஸ் மற்றும் சக வீரர்களுடன் கொண்ட முரண்பாடு காரணமாகவும், தென்னாபிரிக்க - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் போது அப்போதைய தலைவரான அன்ட்ரூ ஸ்ரோரஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை தென்னாபிரிக்க வீரர்களுக்கு அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் கெவின் பீற்றர்சன் இங்கிலாந்து அணியில் தற்போது சேர்க்கப்படவில்லை.

இந்த நிலையில் கெவின் பீற்றர்சன் தற்போது தான் சந்தேகப்படுபவர்களை வெளிப்படுத்தியுள்ளார். அந்த 'டுவிட்டர்' கணக்குத் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



கெவின் பீற்றர்சன் இலங்கையில் இடம்பெறவுள்ள உலக 'ரி-20' தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பெறாத போதிலும், அந்தத் தொடரில் தொலைக்காட்சி ஆய்வாளராகப் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோணின் தலைமைத்துவம் ஏற்கத்தக்கதல்ல



இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோணின் தலைமைத்துவத்தைத் தான் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்று இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். அவரது புதிய சுயசரிதைப் புத்தகத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிவரவுள்ள அவரது சுயசரிதைப் புத்தகத்தின் குறிப்புகள் சில வெளியாகியுள்ள நிலையிலேயே ஜேம்ஸ் அன்டர்சனின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு தனது அறிமுகத்தை மேற்கொண்ட ஜேம்ஸ் அன்டர்சன், நசீர் ஹுசைன், மைக்கல் வோண், கெவின் பீற்றர்சன், அன்ட்ரூ ஸ்ரோரஸ் ஆகிய தலைவர்களின் கீழ் போட்டியில் பங்குபற்றியுள்ளார். இதில் மைக்கல் வோணின் தலைமைத்துவம் தொடர்பாகவே ஜேம்ஸ் அன்டர்சன் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தற்போது தானும் மைக்கல் வோணும் நெருக்கமாகக் காணப்படுகின்ற போதிலும், மைக்கல் வோண் அணித்தலைவராகக் காணப்பட்ட காலப்பகுதியில் அவரின் அணித்தலைமையைத் தான் விரும்பியிருக்கவில்லை எனவும், அந்தக் காலப்பகுதியில் தனது தனிமையைத் தான் உணர்ந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓர் இளைய வேகப்பந்து வீச்சாளரான தனக்கு அணித்தலைவரின் ஊக்கப்படுத்தல் தேவைப்பட்டதாகவும், ஆனால் மைக்கல் வோணிடமிருந்து தனக்கு அது கிடைத்திருக்கவில்லை என்றும் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார். தான் தனிமையையும், வேறுபட்டதாக உணர்ந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஆஷஷ் தொடரை வென்றுகொடுத்த மைக்கல் வோண் சிறந்த அணித்தலைவராகக் காணப்படுகின்ற போதிலும், அதை மறுத்துள்ள ஜேம்ஸ் அன்டர்சன், மிகச்சிறந்த அணியொன்றுக்குத் தலைவராகவே அவர் காணப்பட்டதாகவும், மைக்கல் வோண் மிகச்சிறந்த தலைவர் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார். (5)

# தோல்விக்குப் பொறுப்பேற்றார் — டோனி

நியூசிலாந்திற்கெதிரான போட்டியை தானும், யுவ்ராஜும் முடித்திருக்க வேண்டும் என இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்திற்கெதிரான கடந்த போட்டியை இந்திய அணி மயிரிழையில் இழந்தது. இறுதி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டிருந்த நிலையில் இந்திய அணி ஓர் ஓட்டத்தால் போட்டியில் தோல்வியடைந்திருந்தது.

எந்தக் கட்டத்திலும் வெற்றி இலக்கு எட்டப்பட முடியாததொன்று எனக் கருதியிருக்கவில்லை எனத் தெரிவித்த டோனி, குறிப்பாக விராத் கோலி பெற்றுக் கொடுத்த ஆரம்பத்தின் பின்னர் இந்திய அணி இலக்கை அடைந்திருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இறுதி நேரத்தில் யுவ்ராஜ் சிங்கும் தானும் காணப்பட்ட நிலையில் இருவரும் போட்டியை முடித்துக் கொடுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்த டோனி, எனவே தோல்விக்கான காரணத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

கடந்த போட்டியில் யுவ்ராஜ் சிங் சிறப்பாகச் செயற்பட்டமை அணிக்கு மிகச்சிறப்பான ஒன்று எனத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, அணிக்குத் தேவையான சமநிலையை யுவ்ராஜ் சிங் வழங்குவதாகத் தெரிவித்தார். (16)

## மரண அறிவித்தல்

### கருணானந்தம் ரங்கநாதன்

(யாழ். மாவட்ட செயலக சாரதி)



36/9, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கருணானந்தம் ரங்கநாதன் நேற்று (12.09.2012) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கருணானந்தம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும், மாலினியின் அன்புக்கணவரும், நிருஜன் (யாழ். மாவட்ட உலர் உணவு பகுதி), நிருஜா, நிசாந்தன் (பிரான்ஸ்), நிதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரஜீவனின் மாமனும், கஜனிகாவின் பேரனும், பரஞ்சோதி (பிரான்ஸ்), ரவீந்திரன் (பிரான்ஸ்), தர்சினி (கனடா), தர்மினி (நல்லூர் பிரதேச செயலக பட்டதாரி பயிலுனர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தனேஸ்வரி, சயந்தினி (பிரான்ஸ்), சிவநேசநாதன் (கனடா), றஜீவன் (கலாசார உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச செயலகம்), வினோதினி, சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், பிருந்தினியின் சித்தப்பாவும், கௌதம், அபிசாந், சுவேத்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், திரிஷா, சானியா (கனடா), அபிநயா, ஹர்ஷணன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2012) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/9, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(22818)(6.8)

உங்கள் தேவைக்கு உடனே வாகனங்கள்
குளிரூட்டப்பட்ட, நவீன ரக கார்கள், வான்கள், கப்கள்
நாங்கள் தருகிறோம். நீங்களே செலுத்தலாம்
NEW PEAKING
Rent A Car service 0777484820
(22800)

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
நியூசிலாந்து குடும்ப விசா

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
★ 54 வயதிற்குட்பட்ட கணவன் அல்லது மனைவி
★ 2 வருடத்தில் சட்ட ரீதியாக PR பெறும் வாய்ப்பு
★ இலவச தொழில் ஆலோசனை
★ குழந்தைகளின் கல்விக்கான ஆலோசனை

ஆஸ்திரேலியா குடும்ப விசா
ஆலோசனையில் வடமாகாணத்தில் தனித்துவம் வாய்ந்த வெற்றிகரமான சாதனைகள் படைத்ததே எமது நிறுவனம்

நியூசிலாந்து குடும்ப விசா
★ கணவன்/மனைவி பட்டதாரி அல்லது டிப்புளோமாதாரி
★ ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டால் IELTS தேவையில்லை.
★ பட்டப்படிப்பை மேற்கொண்ட துறையில் 3 வருட தொழில் அனுபவம்.
இதுவரை 2 குடும்பங்கள் நியூசிலாந்து விசா ஆலோசனை பெற்று குடிபெயர்ந்துள்ளன.
புதன்கிழமைகளில் எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது.
திசைகாட்டி பிறைவேற் லிமிட் : ( pv 82703
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவந்நுநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016 தொலைபேசி மூலம் வியாபார விசாரணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
ஆலோசனை பெற விரும்பினால் ஆளடையாளம் உறுதி செய்யப்படல் வேண்டும். (22807)(6.8)

Diploma in Hardware Engineering
தமிழ் மொழி விளக்கங்களுடனும் முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடியது
75% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஒரு கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கு மற்றும் கணினியில் ஏற்படும் பிழைகளை திருத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இது நமது கணினிகளை நாமே சேவிஸ் செய்து பராமரித்துக் கொள்வதற்கும், சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்குமான கற்கை நெறியாகும்.
• 100% Practical Training
• Free Software CDs
Micro processor, HDD ,FDD All Type of cards, CD Rom, Mother boards, Installation of O/S (windows7,XP/ Linux) & Software, Assembling, Upgrading, Configuring ,Troubleshooting, Repairing,Printers, Networking, Network essentials,User Level Networking.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் — No.113. கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி — M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470
சாவகச்சேரி — கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0243
சுன்னாகம் — கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970

## மரண அறிவித்தல்

### அருளையா பூதத்தம்பி



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும், துணுக்காயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அருளையா பூதத்தம்பி (11.09.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அருளையா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் நமசிவாயம் திருமதி முத்தம்மா நமசிவாயம் தம்பதியரின் பாசமிகு வளர்ப்பு மகனும் (மருமகன்), கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை (விதானையார்) இராமச்சந்திரன் (சந்திரா) - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரதிதேவியின் அன்புக் கணவரும், இரவீந்திரன், பாமதி, சிவதரன் (சிவா) ஆகியோரின் அன்புத்தந்தையும், பிருந்தா, சுரேஸ் குமார், கௌரி ஆகியோரின் அன்புமாமனாரும், சங்கவை, வினோத், அஜே, நேத்தன், மகிழிநி, பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், ஸ்ரீனிவாசன் மற்றும் கமலா இராஜசுந்தரம் (குஞ்சு), திருமகள் பத்மநாதன், தேவகி திலகநாதன், பாஸ்கரன், இராகுலன், சுகந்தி விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் துணுக்காயிலுள்ள மகனின் இல்லத் தில் இன்று (13.09.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, துணுக்காய். (சி/3328)(6.2) தகவல்: பூ.சிவதரன் (சிவா - மகன்)

அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 11 : 14.09.2012
பிரிவு 111 : 15.09.2012
காலை 10.00 மணி
இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Kingston Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.
மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831
(சி/3327)

இலவச கணணி, ஆங்கில, வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகள் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கு
கிளிநொச்சியில் ESOFT
The Leader in Professional ICT Education
கொழும்பு, யாழ் பிரபல விரிவுரையாளர்களினால் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்காக வழங்கப்படுகிறது
அனுமதி இலவசம்
கருத்தரங்கின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அன்றைய தினத்தில் கற்கைநெறிக்கான ரூபா 1000 இனை செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு....
5000/= கட்டணக்கழிவுடன்
ஒரு வருட உத்தரவாதமுள்ள 4GB Pendrive இலவசமாக வழங்கப்படுகிறது
FREE
கருத்தரங்கின் ஆசனப் பதிவுகளுக்கு 077 309 9 308
இடம்:- ESOFT Computer Studies (Pvt)Limited
காலம்:— 14.09.2012 மு.ப 9.30 மணி
01, Kanagapuram Road, Kilinochchi
(சி/3200)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org